# பழமொழிக் கதைகள்-5

கே.வி. குணசேகரம்.

## நூல் விபரம்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : பழமொழிக் கதைகள் 40 (கவிதை, உரை, பழமொழி, விளக்கம் , கதைகள்) |
| நூலாசிரியர் | : கே. வி. குணசேகரம். |
| பதிப்பாண்டு | : |
| மொத்தப்பக்கங்கள் | : |
| விலை | : |
| விநியோகம் | : லங்கா புத்தகசாலை<br>F.L. 1.14, டயஸ் பிளேஸ்<br>குணசிங்கபுர,<br>கொழும்பு – 12.<br>Tel : 011-2-341942 |

## அணிந்துரை

திரு.கே.வி. குணசேகரம் ஒரு சிறந்த எழுத்தாளர் மட்டுமல்ல, பழந்தமிழ் நூல்களில் உள்ள அருமையான தத்துவக் கருத்துக்களை இன்றைய சமூக நடைமுறைக்கேற்ற படி சுவையாக எழுதி அவற்றைப் பதிவு செய்யும் பதிவாளராகவும் இருக்கிறார். திருக்குறள் பாக்களுக்கும், அண்மையில் எழுதிய இலக்கிய நயம் என்ற பகுதிக்கும் அவர் எழுதிய கதைகள் இதை நிரூபிக்கின்றன.

எனது நண்பரான லயன் எஸ். சிவானந்தன் M.J.F. அவர்கள் எனது வேண்டு கோளுக்காகக் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்கு 400 அடிமதில் கட்டிக்கொடுத்தார். அதைப் பற்றியும் அவரது ஏனைய சேவைகள் பற்றியும், அம்மதிலால் என்னென்ன பயன்கள் உண்டானதென்றும் மிகவும் சுவையாக எழுதியுள்ளார். அத்துடன் என்னைப் பற்றியும் எனது அரிமாக்கழக நண்பர்களைப் பற்றியும் அவர்கள் செய்து வரும் சேவைகளைப் பற்றியும் எழுதியுள்ளார். அவரது எழுத்துக்கள் சமூகம் சார்ந்தனவாகவே இருக்கும். அத்துடன் அவர் 65 நூல்களை வெளியிட்டுள்ளார். அவை தமிழர்கள் வாழும் நாடுகள் அனைத்திலும் உள்ளன. அத்துடன் www.kvkuna.com இணையத்தளத்திலும் உள்ளன. இதன் மூலம் உலகில் வாழும் தமிழர்கள் இலங்கையில் நடைபெறும் நிகழ்வுகளை அறிந்து கொள்கின்றனர்.

கல்வியைப் பற்றியே அவர் அடிக்கடி எழுதுவார். கல்விப்புலத்தில் நடைபெறும் ஊழல்கள் பற்றியும் அவற்றைத் திருத்தும் வழிமுறைகளைப் பற்றியும் எழுதும் அவர் பெரும் கல்வியியலாளர். கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் உதவியோடும் , நல்லூர் அதிபர் சங்கத்தின் உதவியோடும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு 4 வருடங்களாக மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களை இலவசமாகக் கொடுத்து நல்லூர்க் கோட்டத்தை அகில இலங்கை ரீதியாக முதலிடம் பெறச் செய்தார். அத்துடன் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் 1989-2005 வரை அதிபராகக் கடமையாற்றி அதை வளர்ச்சியின் உச்சிக்குக் கொண்டு சென்றவர். அவரது காலத்தில் நாவலர் தமிழ் வித்தியாலயம் கல்வியிலும், இணைப்பாடவிதானத்திலும் சிறந்து விளங்கியது. எடுத்த கருமத்தைச் சிறந்த முறையில் செய்து முடிப்பதில் வல்லவர்.

அவர் எழுதி வெளியிடும் பழமொழிக் கதைகள் சிறுவர்களுக்கும் பெரியோர்களுக்கும் நல்ல பயனைக் கொடுக்கும். 400 கதைகளும் பஞ்ச தந்திரக் கதைகளைப் போல வாழ்க்கைத் தத்துவத்தை உபதேசிக்கின்றன. அவர் இன்னும் ஏராளமான கதைகளை எழுதிக் கோப்பாயின் புகழை வானுயர உயர்த்த வேண்டும்.

லயன். டாக்டர். வை. தியாகராசா M.J.F.

கோப்பாய்.

## என்னுரை

'பழமொழி' என்பது பழையமொழி என்றும், நம் முன்னோரின் அனுபவமொழி என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. மக்களின் செம்மையான நல்வாழ்விற்கு உதவுவனவாகப் பழமொழிகள் விளங்குகின்றன. பழமொழியை 'முதுமொழி' என்றும் சொல்வர். இலக்கண இலக்கியங்களை வரையறை செய்த தொல்காப்பியர் பழமொழியையும் வரையறை செய்துள்ளார்.

**"நுண்மையும் சுருக்கமும் ஒளியுடை மையும்**
**ஒண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்**
**குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்**
**ஏது நுதலிய முதுமொழி என்ப'**

என்பது தொல்காப்பியரது கூற்று.

அரையனார் என்ற புலவர் பாடிய கவிதையிலான இந்நூலின் முதல் இரு அடிகள் பழமொழி சம்பந்தமான தத்துவங்களைக் கூறுகிறது. பின் இரு அடிகள் முதலிரு வரிகளிற் கூறப்பட்ட தத்துவங்களைக்கான பழமொழியைக் கூறுகின்றது.

பழமொழி நானூறு என்ற இக் கவிதை நூலை முதன் முதலில் அச்சேற்றி வெளியிட்டவர் சோடசாவதானம் சுப்பிராயச் செட்டியார் அவர்கள். 1874ஆம் ஆண்டு இந்நூல் அச்சிடப்பட்டது. இதனை அடுத்து 1914 ஆம் ஆண்டு திருமணம் செல்வக் கேசவராய முதலியார் பதிப்பித்து வெளியிட்டார். 1918 –1922ஆம் ஆண்டளவில் திரு. நாராயண ஐயங்கார் அவர்கள் 200 பாடல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். இதனை அடுத்துத் திரு. புலியூர்க்கேசிகன் அவர்கள் 1989 இல் செய்யுள்களை உரை நடையுடன் பதிப்பித்து வெளியிட்டார்.

வேதங்கள், உபநிடதங்கள், திருக்குறள், ஆத்திசூடி, பகவத்கீதை, திருமந்திரம், திருவருட்பயன், ஆசாரக்கோவை என்பன தத்துவங்களாகவும் உரைநடைகளாகவுமே இருந்தன. அவற்றை முதன் முதலில் இலகுபடுத்தி உரை, விளக்கம், கதைகள் எழுதியதைப் போல பழமொழி நானூறு என்ற கவிதைகளுக்கும் உரை விளக்கம் கதை

என்பன எழுதியுள்ளேன். பழமொழிகளின் பொருளைச் சிறுவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது நோக்கம்.

உரை எழுதுவதும், ஆய்வுகள் செய்வதும் மிகவும் இலகுவானது. உரையை ஆயிரக்கணக்கானோர் எழுதியுள்ளனர். அதை அப்படியே பின்பற்றி உரை எழுதலாம். ஆய்வையும் ஆயிரக்கணக்கானோர் செய்துள்ளனர். அதில் சில ஆய்வுகளைப் படித்து விட்டு அதைப் பார்த்து மொழி மாற்றம் செய்து புதிய ஆய்வொன்றைச் செய்யலாம். ஆனால் கதைகள் எழுதுவது மிகவும் சிரமமானது. அதனால் தான் யாரும் இந்நூல்களுக்குக் கதைகள் எழுதவில்லை.

காலங்காலமாக எழுதப்படும் உரைகளாலும் ஆய்வுகளாலும் சமூகம் எந்தப் பயனையும் அடையவில்லை. ஒரு சில மாணவர்கள் மட்டும் பயனடைந்தனர். உரைகளை, ஆய்வுகளை சாதாரண மாணவர்கள் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். அதனால் தத்துவங்களை மாணவர்கள் விளங்கிப் பின்பற்ற வேண்டு மென்பதற்காகவே அவற்றைக் கதைகளாக எழுதி வருகிறேன். இந்நூல்களை ஆராய்ந்து ஆலோசனைகள் கூறி எழுத்துப் பிழைகளைச் சீர் செய்து தந்த செல்வி. ப. இறைமகள் ஆசிரியைக்கும், இதைக் கணணி மயப்படுத்தித் தந்த திருமதி. கௌசலா நாகராஜன் அவர்களுக்கும், இந்நூலை வெளியிட்டு விற்பனை செய்து தரும் லங்கா பதிப்பக உரிமையாளர் திரு. கந்தசாமி இராசேந்திரனுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன். மீண்டும் சந்திப்போம். எனது ஆக்கங்களை www.kvkuna.com இல் பார்வையிடலாம்.

கே.வி. குணசேகரம்.
பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
ஸ்ரீலங்கா.

1 “அன்பானவர்களே, அறிஞர்கள் உள்ள சபையில் அடக்கமாக இருக்கின்றவன் தான் அறிவாளி. அறிஞர்கள் சொற்களின் வகை தொகையை அறிந்தவர்கள். அதனால் அவர்கள் வார்த்தைகளால் விளையாடுவார்கள். அவர்கள் உதிர்க்கும் சொற்கள் பொருளில்லா தலை போல மற்றவர்களுக்குத் தோன்றும். அப்பொழுது அவர்கள் அமைதியாக இருந்து அறிவுடையவர்களின் மூலம் பொருளை உணர்ந்து கொள்ள வேண்டுமே தவிர அவசரப்பட்டு வார்தைகளை அள்ளிக் கொட்டுதல் ஆகாது”.

“அறிஞர்கள் தாம் நன்கு கற்றறிந்த கருத்துக்களைச் சபையில் உள்ளவர்களின் மனதிற் பதியுமாறு கூறுவார்கள். சபையில் இருக்கும் பண்டிதர்கள் தொடக்கம் பாமரர் வரை தாம் கூறுபவற்றைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றே அறிஞர்கள் விரும்புவார்கள். இத்தகைய அறிஞர்களுக்குத் தலைக்கனம், கர்வம் என்பன இராது. அரைகுறையான அறிவுள்ளோர்கள் தான் தம்மைப் பெரிய அறிவாளி என்று எண்ணிக் கொள்வர். கர்வத்துடன் சபையில் நடந்து கொள்வர்.”

“கலைவாணர் பெரும்புலவர். அவர் கற்காத நூல்கள் இல்லையென்று தான் சொல்லுதல் வேண்டும். எந்த ஒரு சபையும் அவரில்லாமல் கூடாது. அவர் சபைக்கு வந்தால் பெரும் புலவர்கள் எல்லாம் எழுந்து நின்று மரியாதை செய்வார்கள். தமக்கு விளங்காதவற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். மக்கள் அவர் அவைக்கு வருகிறார் என்றால் மிக்க மகிழ்ச்சியுடன் கூடியிருப்பர். அவர்

எல்லோரையும் மதிப்பார்; எல்லோர் மீதும் அன்பு செலுத்துவார். சிறுவர்கள் கூட அவருடன் சொற்சிலம்பமிட்டு விளையாடுவர்".

"அந்த அவையில் கபிலனார் என்றொரு புலவர் இருந்தார் . அவர் பெரிதாக எதையும் கற்றதில்லை. கற்றதையும் ஒழுங்காகச் சபைக்குச் சொன்னதில்லை. தலைக்கனமும் கர்வமுங் கொண்ட அவரைக் கண்டால் புலவர்களும் மக்களும் விலகிக் கொள்வார்கள்.

அன்று அரசசபையில் புலவர்கள் எல்லோரும் கூடியிருந்தனர். அன்று இளவரசரின் பிறந்த தினமாகையால் இளவரசரை வாழ்த்த மக்களும் கூடியிருந் தனர்."

"அன்று காளமேகப் புலவரைப் பற்றி மக்களுக்குக் கூறுமாறு அரசன் பணித்தான். புலவர்கள் ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்தவற்றைக் கூறிக்கொண்டிருந்தனர். கபிலனார் எழுந்து சொன்னார்; "காளமேகத் தைப் பற்றிக் கூறப் பெரிதாக எதுவும் இல்லை. அவரைப் பெரும் புலவர் வரிசையில் வைக்கக் கூடாது. அவரது பாடல்கள் முழுவதையும் நான் படித்துள்ளேன். அவை சமூகத்திற்கு உதவாதவை." என்று கூறிவிட்டு அமர்ந்தார்".

சபையில் பெரும் சிரிப்பொலி எழுந்தது. அடுத்துக் கலைவானர் எழுந்தார். சபை அமைதியானது; "அரசருக்கு வணக்கம், இளவரசருக்கு வாழ்த்துக்கள்; சபையோருக்கு வணக்கம். காளமேகத்தின் பாடல்கள் பலருக்குப் புரிவதில்லை. அப் பாடல்களில்

இரட்டை அர்த்தம் இருக்கும். கேலியும் கிண்டலும் இருப்பது போலத் தோன்றினாலும் அரிய பல கருத்துக்களை அவை சொல்லும். உதாரணமாக இந்தப் பாடலைப் பாருங்கள்".

"*தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி*
*துத்தித் துதைதி துதைதத்தா தாதுதி*
*தித்தித்த தித்தித்த தாதெத்து தித்தித்த*
*தெத்தாதோ தித்தித்த தாது?*

"இச்சபையிலே இப்பாடலுக்குப் பொருத்தமான கருத்தை யாராவது கூறுங்கள்" என்றார் கலைவானர்"

"சபை அமைதியாக இருந்தது. மன்னன் சிரித்தான். யாரும் எழுந்து கருத்துச் சொல்லவில்லை. பலருக்கு அதன் கருத்துத் தெரிந்திருந்தும் அவர்கள் அதைக் கலைவானரின் வாயாற் கேட்க விரும்பினர்."

"கபிலனார் எழுந்தார்; "இது பாடலா…? இதைத் தான் நான் முன்பு சபையிற் சொன்னேன். "தத்தித்தா தூதுதி தாதுதித் தத்துதி" இது தான் பாடலென்று பெரும்புலவர் கருதுகிறாரா….? இதை - யெல்லாம் சபையிற் சொல்ல தகுதி வேண்டும்" என்று கூறிவிட்டு அமர்ந்தார்". சபையில் சிரிப்பொலி அடங்க வெகுநேரம் எடுத்தது".

"கலைவானர் எழுந்தார்; "மிகவும் அருமையான பொருள் கொண்ட பாடல் இது. புலவர் வண்டைப் பார்த்துக் கேட்கிறார்; "

வண்டே பூவிற்குப் பூ தாவிச் சென்று பூந்தாதை ஊதி உண்கிறாய். ஒரு பூவில் பூந்தாதை ஊதி உண்ட பின் மீளவும் ரீங்கார ஒலி எழுப்பியபடி தாவிச் சென்று இன்னொரு பூவின் மீதமர்ந்து பூந்தாதை ஊதி உண்கிறாய். உனக்கு இனிக்கின்ற பூ எது? இனித்தது எப்பூவின் மகரந்தம். இதழால் அழகிய பூ எது சொல்? என்று காளமேகம் பூவிற்குப் பூ தாவிச் சென்று தேன் குடிக்கும் வண்டைக் கேட்கிறார்".

"பொருள் விளங்காச் சொற்களைக் கொண்டு எந்தப் புலவனும் கவிபாட மாட்டான். சொற்களின் வகை தொகையை அறிந்தவர்களுக்கு மட்டும் தான் அவற்றின் பெருமை விளங்கும்" என்று கூறிவிட்டு அமர்ந்தார். சபை மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தது.

"அரசன் கபிலனாரைப் பார்த்துச் சொன்னான்; " கபிலனாரே, நீர் பத்துத் தினங்களுக்கு அரச சபைக்கு வரக்கூடாது. மொழியின் வகை தொகைகளை அறியாது பேசவும் கூடாது" என்றான்".

"அதனால் அன்பானவர்களே, சூரியனை ஊடறுத்துச் சென்றாலும் செல்லலாம். ஆனால் அறிஞர் கூடியிருக்கின்ற அவையினை ஊடறுத்துப் போகவே கூடாது. அப்படிப் போவது அறிவுடமை அன்று. பிறந்த குடிக்கு அது பெருமையும் அல்ல. அது அறிவதாகிய அறநெறிக்கும் அப்பாற்பட்டது. அதைக் கீழ் மக்கள் செய்து துன்பப்படுவர்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***அறிவன்று அழகன்று அறிவதூஉம் அன்று***
***சிறியர் எனப்பாடம் செய்யும் - எறிதிரை***
***சென்றுலாம் சேர்ப்ப! குழுவத்தார் மேயிருந்த***
***என்றூடு அறுப்பினும் மன்று***

சான்றோரை அவையிலே அவமதித்தல் கூடாது. அதனால் அவமானமும் துன்பமும் உண்டாகும். “**குழுவத்தார் மேலிருந்த என்றூடு அறுப்பினும் மன்று**” என்பது பழமொழி.

2 “அன்பானவர்களே, பொருள் இருக்குமிடத்தைப் பொருள் தேவையானோர் தேடி வருவார்கள். மரம் பழுத்தால் பறவைகளை ‘வா வா’ என்று அழைக்கத் தேவையில்லை. கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு அதைத்தேடி வரும். அது போலக் குளத்தை ஒருவன் வெட்டினானானால் தவளைகள் அக்குளத்தில் வாழ வந்து சேரும்”.

“மீன்களைப் பிடிக்கப் பறவைகள் வரும். இது இயற்கையானது. அது போலப் பொருள்களை உடையோர் தமது காரியங்களை முடிக்க அலைய வேண்டியதில்லை. அவர்கள் இருக்குமிடத்திற்கு அவர்களுக்குத் தேவையானவை வந்த சேரும். அதனால் தர்மமான முறையில் பொருளைத் தேடுங்கள்.

“ஒரு பொருளாய் மதிக்கத்தகாதவர்களையும் மதிப்பு மிக்கவராக்கும் தன்மை செல்வத்திற்கு உண்டு. எந்தவிதமான

அறிவில்லாதவர்களானாலும் பொருள் உள்ளவர்களை எல்லோரும் மதிப்பார்கள். எல்லா நன்மைகளை உடையவர்களாக இருந்தாலும் பொருள் இல்லாதவரை எவரும் மதிக்க மாட்டார்கள்.”

“நாவலூரிலே அருளம்பலம் என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவர் மிகவும் ஏழை. அவரின் உழைப்பு அவர் வாழவே போதாது. அவரின் சகோதரி ஒரு வியாபாரியை விரும்பித் திருமணம் செய்தாள். அதன் பின் அவள் அவரது வீட்டிற்கு வருவதில்லை. அங்கு சென்றால் தனது மானம் மரியாதை போய்விடும் என்று நினைத்தாள்”.

“திடீரென்று ஒரு நாள் அருளம்பலத்தைக் காணவில்லை. அவரின் வயதான தாய் அவரைத் தேடி அலைந்தார். அவர் கண்காணாத இடத்திற்குச் சென்று தற்கொலை செய்து கொண்டாரென ஊரவர்கள் பேசிக்கொண்டனர்.”

“வெளிநாடு சென்ற அவர் முப்பது வருடங்களுக்குப் பின் பெருங் குபேரனாக ஊருக்குத் திரும்பினார். தான் முன்பு குடியிருந்த காணியில் பெரியதொரு மாடி வீடு கட்டினார். பெரிய வியாபார நிறுவனம் ஒன்றை நிறுவினார். அதில் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்தனர்”.

“அவரது ஒரு மகன் வைத்தியராகப் பணிபுரிந்தான். இன்னொரு மகன் தகப்பனுடன் சேர்ந்து வர்த்தகம் செய்தான். அவரது மகள் நோயாளியாக இருந்தாள்”.

“அருளம்பலம் ஊருக்கு வந்ததும் ஊரில் உள்ள கோயில்களுக்கும் பாடசாலைகளுக்கும் உதவி செய்தார். ஏழை எளியவர்களுக்குத் தான தர்மம் செய்தார். அவரிடம் பத்துக்கு மேற்பட்ட ஆடம்பர மோட்டார் வாகனங்கள் இருந்தன. முன்பு அவரை மதியாத ஊரவர்கள் அவரைத் தேடி வந்தனர். அவர் தனது பிள்ளைகளுக்குத் திருமணஞ் செய்ய விரும்பினார். பெரும் பெரும் குடும்பங்களில் உள்ளோர் அவரது குடும்பத்தினருடன் உறவு வைக்கப் போட்டி போட்டனர்”.

“ஒரு நாள் அவரது சகோதரியும் அவளது கணவனும் அவரின் வீடு தேடி வந்து அவரது மகனைத் தமது மகளுக்குத் திருமணம் செய்து வைக்கும்படி கேட்டனர். அவர் ஒரு வீடு கட்ட விரும்பினார். பலர் வீட்டைக் கட்டிக் கொடுக்க முன் வந்தனர்.”

“ஒரு நாள் அவர் ஊர் சிவன் கோயில் வீதியைப் பெருக்கிக் கொண்டிருந்தார். அதைக் கண்ட ஊரவர் பலர் ஓடோடி வந்து அவர் பெருக்கும் விளக்குமாற்றைப் பறித்துத் தாம் பெருக்கினர். இது அவருக்குக் கவலையைக் கொடுத்தது. பொருளில்லாத போது மதியாத மக்களும் இனத்தவர்களும் பொருள் வந்த போது தன்னைத்

தொண்டுகள் கூடச் செய்ய விடுகிறார்களில்லையே” என்று நினைத்துக் கவலைப்பட்டார்”.

ஆகவே அன்பானவர்களே, பொருள் ஒருவனை உயர்த்தும். அவன் விரும்பிய எல்லாவற்றையும் பிறரைக் கொண்டு செய்விக்கும். பொருள் பகைவனது செருக்கை அடக்கும் கூர்மையான ஆயுதமாகும். அத்துடன் பொருளுடையவர்களுக்கு அறமும் இன்பமும் மிகவும் எளிதாகக் கைகூடும். அதனால் விரைவாகச் செல்வத்தைத் தேடுங்கள்” என்றார். நமசிவாயம் சுவாமிகள்.

***அருமை யுடைய பொருளுடையார் தங்கண்***
***கருமம் உடையார் நாடார் - எருமைமேல்***
***நாரை துயில்வதியும் ஊர! குளந்தொட்டுத்***
***தேரை வழிச்சென்றார் இல்.***

பணக்காரனின் பின் பலர் செல்வார்கள். பொருள் உள்ளவர்கள் தமது காரியமாற்ற மற்றவர்களிடம் செல்ல வேண்டியதில்லை. காரியங்கள் அவரைத் தேடி வரும். “**குளந்தொட்டுத் தேரை வழிச் சென்றார் இல்”** என்பது பழமொழி.

3 “அன்பானவர்களே, அடுத்தவர்கள் உங்களுக்குத் தீமை செய்தால் பதிலுக்கு நீங்களும் தீமை செய்யாதீர்கள். தீமை செய்தால் தீமை தான் வரும். தீமை செய்தை விடப் பெருகிப் பெரும் துன்பங்களைக் கொடுக்கும். தீமை செய்வோரைப் பொறுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் செய்த தீமையே அவர்களைத் தண்டிக்கும். அப்படியல்லாது தீமைசெய்பவர்களுக்குத் தீமை செய்ய

முயல்வது சிறிய நரியைக் கொல்வதற்கு ‘நாராயம்’ எனும் அம்பினைத் தொடுப்பதை ஒக்கும். நாராயம் என்பது மிகவும் சக்தி வாய்ந்த அம்பு. அது பெரும் போர்க்களத்தில் எதிரியை அழிக்கப் பயன்படுவது. அதனால் தீமை செய்தவர்களை அப்படியே விட்டு விடுங்கள்.”

“கடம்பவனம் என்ற காட்டுப் பகுதியின் எல்லையில் மனிதர் கள் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்தனர். கடம்பவனம் வளமான காடு. அவ்வனத்தில் மாதம் மும்மாரி பெய்வதால் தாவரங்கள் பச்சைப் பசேலென்றிருக்கும் அக்காட்டில் மா, பலா, வாழை, திராட்சை போன்ற மரங்கள் எப்பொழுதும் காய்த்துக் குலுங்கும். அதனால் மிருகங்களின் தலைவனான யானை, மனிதர்களின் பயிர்களை அழிக்கக்கூடாது என்று வற்புறுத்திச் சொல்லியிருந்தது. அதைப் பன்றியைத் தவிர மற்றைய மிருகங்கள் பின்பற்றி வந்தன.”

“ஒரு நாள் பன்றி மனிதர்கள் பயிர்ச்செய்கையிடும் இடங்களைப் பார்த்தது. அங்கே விதம் விதமான காய்கறிவகைகளும் கிழங்கு வகைகளும் பயிராகியிருந்தன. பன்றி அங்குள்ள கிழங்குகளைத் தோண்டித் தின்றது. அது மிகவும் சுவையாக இருந்தது. அதனால் அது தினமும் செல்லத் தீர்மானித்தது”.

“தனியே சென்று கிழங்குகளை உண்ண விரும்பாத பன்றி மானைத் தன்னுடன் வரும்படி அழைத்தது; “நண்பா, நாம் யாருக்கும் தீமை செய்யக்கூடாது. எமது வனத்தில் எல்லாக் காய்கனிகளும்

கிழங்குகளும் உண்டு. அவற்றை எமக்கு இறைவன் படைத்துள்ளான். நாம் கஷ்டப்படாது அவற்றை உண்டு வாழ்கிறோம். மனிதர் பாவம். அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு உணவை உற்பத்தி செய்கிறார்கள். அதை நாம் திருடி உண்பது பாவம். பாவம் செய்தால் பெரும் துன்பங்களை அனுபவிக்க வேண்டி வரும். தீமை செய்பவர்கள் பெரும் தீமையை அடைவார்களென்று எமது தலைவர் கூறியருப்பதை மறந்து விட்டாயா...? அதனால் தீமை செய்யாது வாழ்" என்று கூறிவிட்டுச் சென்றது".

"பன்றி அதைக் கேளாது தினமும் விவசாயிகளின் சேனைக்குச் சென்று வந்தது. அந்தத் தோட்டத்தின் சொந்தக்காரன் பயிர் தினமும் அழிவடைவதால் கவலைப்பட்டான்".

"அவனின் அருகே தோட்டம் செய்பவன் சொன்னான்; " ஒரு பன்றி தான் வந்து செல்கிறது எனவே அதைக் கொல்லச் சிரமப்படத் தேவையில்லை. இரவில்காவல் காக்கவும் தேவையில்லை. வேட்டைக்காரர்களைக் கொண்டு சுடவும் தேவையில்லை. பனை நாரை எடுத்துப் பொறி கட்டி வை. அது அகப்படும்" என்றான்."

"மறுநாள் பன்றி அங்கு சென்ற போது அப்பொறிக்குள் அகப்பட்டது. அது தன்னை விடுவிக்கப் போராடிய போது அதன் முன்னங்கால் முறிந்து விட்டது. விடிந்ததும் தோட்டக்காரன் வந்து பெரியதொரு தடியால் பல முறை அடித்தான். பின் பன்றி இறந்து

விட்டதென்று நினைத்து அதைத் தூக்கி வெளியே கொண்டு சென்று வீசினான்”

“சிறிது நேரத்தில் பன்றிக்கு உணர்வு வந்தது. எனினும் தன்னை மனிதர்கள் கண்டு விடுவார்களென நினைத்துச் செத்தது போலப் படுத்துக் கிடந்தது. காட்டு எறும்புகள் அதன் இரத்தத்தில் மொய்த்து இரத்தத்தைக் குடித்தன. பன்றி வேதனையால் கத்தவும் முடியாது வருந்தியது”.

“இரவானதும் மெல்ல மெல்ல நடந்து காட்டிற்குச் சென்றது. பன்றியைக் காணவில்லையெனப் பன்றியின் குடும்பத்தினர் காடு முழுவதும் தேடி அலைந்தனர்.”

“பன்றி காயங்களுடன் எழும்ப முடியாது படுத்திருந்தது. அதைப் பார்க்க வந்த மான் சொன்னது; “தீமை செய்தவர்கள் அத்தீமையாலேயே அழிவர் என்று நான் உனக்குச் சொன்னேன். நீ கேட்கவில்லை. இனியாவது திருந்தி நட என்றது” ஆகையால் தீமை செய்தோரை அத்தீமையே அழிக்கும். அதற்காக யாரும் வருந்தக் கூடாது” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*காழார மார்பரீ கசடறக் கைகாவாக்*
*கீழாயோர் செய்த பிழைப்பினை மேலாயோர்*
*உள்ளத்துக் கொண்டுநேர்ந்து ஊக்கல், குறுநரிக்கு*
*நல்லநா ராயங் கொளல்.*

கீழோரை அழிக்கச் சான்றோர் முயலக் கூடாது. அவர் தாமே அழிந்து விடுவர். “**குறுநரிக்கு நல்ல நாராயங் கொளல்’** என்பது பழமொழி.

4 “அன்பானவர்களே, ஒரு செயலைச் செய்யு முன் நன்கு ஆராய்தல் வேண்டும். தான் செய்யப் போகும் செயலின் தன்மையை அறிந்து , அதனால் ஏற்படக்கூடிய இடையூறுகளையும் அறிந்து, செயலைச் செய்பவனைப் பற்றியும் அறிந்த பின்பே செயலைச் செய்வானென முடிவெடுத்தவனிடம் செயலை ஒப்படைத்தல் வேண்டும்”.

“செயலை அவனிடம் ஒப்படைத்த பின் அவன் அதைச் சரியாகச் செய்கிறானா எனக் கண்காணிக்க வேண்டுமே தவிர அவனைச் சந்தேகித்தல் கூடாது. இதைச் செய்து முடிக்க இவன் தகுதியானவன் என்றறிந்த பின்பு அச்செயலின் பொறுப்பை முழுமையாக ஒப்படைத்தவனைப் பிறர் கூறும் கருத்துக்களைக் கேட்டு நீக்கக் கூடாது. அப்படிச் செய்வது சிறுபிள்ளைகள் கோலை நட்டு விளையாடுவதைப் போன்றதாகும்.”

“கடம்பவனத்தில் வாழ்ந்த மிருகங்கள் விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்தத் திட்டமிட்டன. அதனால் அவை யானையின் தலைமையில் ஒன்று கூடின”.

“யானை சொன்னது; “ஒரு விளையாட்டுப் போட்டியை எம் மத்தியில் நடத்த வேண்டும் என்று எருமை விரும்புகிறது. எமக்கும் பொழுது போக்குத் தேவை. விளையாட்டின் மூலம் போட்டி பொறாமைகளைத் தவிர்க்கலாம். தோல்வியை ஏற்றுக் கொள்ளும் பண்பை உண்டாக்கலாம். உடலும் உறுதி பெறும். அதனால் விளையாட்டுப் போட்டியை நடத்துவோம். அதற்கு ஒரு மைதானம் தேவை. காட்டில் வெளியான பிரதேசம் இல்லை. மழை பெய்வதால் காடு முழுவதும் புதர்களாக உள்ளன. காட்டின் கிழக்குப் பகுதியைத் துப்பரவு செய்து ஒரு மைதானம் தயாரிப்போம். அதற்கு விளையாட்டு விதிகள் தெரிந்த ஒருவர் தேவை. அவர் முயற்சியுள்ளவராகவும், சுறுசுறுப்புள்ளவராகவும், மற்றைய மிருகங்களோடு அன்பாகப் பழகி வேலை செய்விப்பவராகவும் இருத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தன்னால் என்னென்ன செய்யமுடியு மென்றும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அறிந்திருந்தல் வேண்டும். அப்படியானவர்கள், தாம் என்ன செய்யப் போகிறோம் என்பதைச் சொல்லவும்” என்றது”.

“எருமை சொன்னது; “தொழிலில் ஆர்வமும் வல்லைமையும் சகிப்புத் தன்மையும், தொழிலைப் பற்றிய அறிவும் உள்ள மானை நான் தலைவராகத் தெரிவு செய்கிறேன்” என்றது”.

“தான் எடுத்த செயலை நல்ல முறையில் செய்து முடிக்கும் வரை ஓயாது உழைப்பது மான். அதைத் தலைவராக்குவதில்

எனக்குப் பிரச்சினை இல்லை. மற்றவர்கள் தமது கருத்தைக் கூறலாம்" என்றது யானை".

"பன்றி எழுந்து சொன்னது; "முயல் தான் எமது இனத்தில் அறிவாளி. எனவே முயலைத் தலைவராக்குங்கள்"

"குதிரை சொன்னது; " எருது தான் வீரன். எருதைத்தான் தலைவராக்குங்கள்"

"எல்லா மிருகங்களும் ஆலோசனை நடத்தின. பின் அவை எல்லாமாகச் சேர்ந்து மானைத் தலைவராக்கின".

"இரண்டு தினங்களில் வேலை தொடங்க வேண்டும் என்று யானை சொன்னது".

"இரண்டு தினங்கள் கழிந்தன. வேலை செய்வதற்கு எல்லா மிருகங்களும் வந்து கூடின. ஆனால் மானைக் காணவில்லை. மான் முல்லை வனத்தில் தனது இனத்தவரின் மரண வீட்டிற்குச் சென்றிருந்தது. அதனால் பன்றி சொன்னது; " வந்த நாம் வேலையைச் செய்யத் தொடங்குவோம். மான் வரட்டும்" என்றது.

"வேலை ஆரம்பமான சில மணி நேரத்துள் மான் வந்து சொன்னது; "யானையாரே, நான் வடக்குப் பகுதியில் இருந்து வேலையை ஆரம்பிக்க நினைத்தேன். நீங்கள் கிழக்குப் பகுதியில் இருந்து ஆரம்பித்திருக்கிறீர்கள். வடக்கே காடு அடர்த்தி குறைவு. சமவெளியும் உண்டு. நாம் வடக்கிலே வேலையைத் தொடங்கினால் வெட்டப்படும் மரங்களைச் சமவெளியில் போட்டுக் கொழுத்தலாம்.

கிழக்கே போட்டால் காடு அடர்த்தியாக உள்ளதால் நாம் கொழுத்தும் போது காடும் தீப்பற்றி விடும்" என்றது".

"தொடங்கிய வேலையைத் தொடர்ந்து செய்வோம். மான் விரும்பினால் தன் எண்ணப்படி செய்யட்டும்" என்றது யானை.

"மிருகங்கள் யானை சொல்வதை ஆமோதித்தன. அதனால் மான் ஆலோசனை சொல்வதை நிறுத்தி விட்டு அவர்களுடன் சேர்ந்து வேலை செய்தது. பத்துத் தினங்கள் முடியக் கிழக்குப் பக்கத்தில் குவித்த மரங்களைப் பன்றி கொழுத்தியது. கிழக்குப் பகுதி அடர்த்தியாக இருந்தமையால் தீ காட்டுப் பகுதியில் பரவி பெரும் நஷ்டத்தை உண்டு பண்ணியது. அதனால் செயல்களை அறிந்தோரின் ஆலோசனையைக் கேட்காவிட்டால் பெரும் தீமை உண்டாகும்." என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***உறுமக்க ளாக ஒருவரை நாட்டிப்***
***பெறுமாற்றம் இன்றிப் பெயர்த்தே யொழிதல்***
***சிறுமைக்கு அமைந்ததோர் செய்கை; அதுவே,***
***குறுமக்கள் காவு நடல்.***

சிறுவர்கள் கோலை மாறி மாறி நட்டு விளையாடுவர். அது போலச் செயலுக்குத் தகுதியானவனின் சொல்லைக் கேளாது பலரது சொல்லைக் கேட்பது தீமையைத் தரும். "**குறுமக்கள் காவு நாடல்**" என்பது பழமொழி.

5 “அன்பானவர்களே, எதற்கும் தெய்வம் உதவி செய்தல் வேண்டும். தெய்வத்தின் உதவியில்லாவிட்டால் செய்யும் காரியங்கள் தோல்வியடைவதுடன் பொருள் நட்டமும் துன்பமும் அவமானமும் உண்டாகும்”.

“எல்லாவற்றிலும் தொடர்பு கொண்டுள்ள செம்பொருளான தெய்வம் தான் ஒருவனை உயர்த்துவதும் தாழ்த்துவதும் தெய்வம். பக்கச் சார்பில்லாதது. அவரவர் செய்யும் கருமங்களுக்கு ஏற்பப் பயனைக் கொடுப்பது. தீமைகள் செய்பவனுக்குத் தீமையும், நல்லவை செய்பவனுக்கு நல்லவையும் கொடுப்பது தெய்வம்.

“ஆசைகளால் தான் துன்பங்கள் உண்டாகின்றன. அந்த ஆசையை அறுத்தால் என்றும் இன்பமாக வாழலாம். எல்லா நாடுகளையும் வெற்றி கொண்ட ஒரு பேரரசன் இன்னொரு சிறிய நாட்டுள் புகுந்த விடத்து, அந்நாட்டையாளும் குறு நில மன்னன் அவனைப் பணிந்து போகாமல் எதிர்த்தால் அவன் அழிந்து விடுவான். அது போலவே பொருளைத் தேடும் முயற்சியில் துன்பம் தான் வர வேண்டுமென்று தெய்வம் நினைத்தால், அவனது முயற்சிகளெல்லாம் வீணாகி விடும்”

“பொன்னம்பலம் பெரும் வர்த்தகர். வெளிநாடுகளில் இருந்து தரமான பொருட்களை இறக்குமதி செய்து மலிவான விலையில் விற்பனை செய்பவர்”.

"அருணாசலம் சிறிய வர்த்தகன். அவன் பட்டணத்தில் தனது வியாபாரத்தைத் தொடங்க விரும்பினான். தான் வாழும் ஊரில் ஒரு சிறு வர்த்தக நிலையம் அமைத்து வியாபாரஞ் செய்து வந்தான். அவனது முதலீட்டிற்குத் தகுந்த இலாபம் அங்கு கிடைக்காததால் தனது வர்த்தக நிலையத்தைப் பட்டணத்தில் நிறுவி பல இலட்ச ரூபா பெறுமதியான பொருட்களை வாங்கி வைத்திருந்தான். ஆனால் பெரிதாக வியாபாரம் நடக்கவில்லை".

"பொன்னம்பலம் விற்பனை செய்யும் அதே பொருட்களை அவர் விற்கும் விலைக்கு விற்றான். பின் அதிலும் பார்க்கக் குறைத்து விற்றான். அவன் மலிவாக விற்கும் பொருட்கள் தரமில்லாதவை என மக்கள் நினைத்தனர். அவன் வியாபாரத்தைப் பிடிப்பதற்காகச் செய்யும் செயல்கள் யாவும் நட்டத்தையே கொடுத்தது".

"பொன்னம்பலத்திடம் கொள்வனவு செய்து அவரிலும் பார்க்க தனக்கு வரும் இலாபத்தைப் பாராது அவரிலும் பார்க்கக் குறைத்து விற்ற போதும் வியாபாரம் நடைபெறவில்லை. அவனது மனைவி சொன்னாள்; "நாதா, ஒருவனுக்குச் செல்வம் வருவதற்குப் பூர்வபுண்ணிய பலன் உதவுதல் வேண்டும். பொருளின் தரத்தில் எதுவும் தங்கியிருப்ப தில்லை. பொன்னம்பலத்திடம் தான் நீங்கள் பொருட்களைக் கொள்வனவு செய்து உங்கள் விற்பனை நிலையத்தில் வைத்து அவரிலும் பார்க்க விலை குறைத்து விற்கிறீர்கள். அப்படியிருந்தும் அப்பொருட்கள் தரமில்லாதவை என்று மக்கள் நினைக்கின்றனர். மலிவாக நீங்கள் கொடுக்கும் பொருட்கள்

தரமில்லாதவை என்றும் விலை கூட்டிக் கொடுத்தாலும் பொன்னம்பலத்தின் மலிவான பொருள் தான் சிறந்தவை என்றும் நினைப்பதற்கு காரணம் விதி. எமது தொழில் விருத்தியடையக் கூடாதென்று தெய்வம் நினைக்கிறது. அதனால் நீங்கள் உங்கள் வியாபார நிலையத்தை மூடி விட்டு வேறு தொழில் செய்யுங்கள் அப்படிச் செய்தாலும் தெய்வ அனுக்கிரகம் இருந்தால் தான் அத்தொழிலும் சிறப்படையும். அதனால் நீங்கள் சில காலத்திற்குப் பொன்னம்பலத்தின் நிறுவனத்தில் வேலை செய்யுங்கள்" என்றாள்".

"நீ சொல்வது சரிதான். தெய்வத்தின் அருள் இருந்தால் தான் முயற்சியும் பலிக்கும். இல்லாவிட்டால் தடைகளும் தாமதங்களும் உண்டாகும். அதனால் மனச் சோர்வும், துன்பமும் உண்டாகிச் செய்யும் முயற்சியைக் கைவிடவேண்டிய நிலை உருவாகும். ஆகையால் நீ சொல்வதைப் போல சில காலத்திற்கு நான் எனது வியாபார நிறுவனத்தை மூடி விட்டுப் பொன்னம்பலத்திடம் வேலை செய்யலாம் என்ற நினைக்கிறேன்" என்றான் அருணாசலம்".

"அதனால் அன்பானவர்களே, தெய்வத்தை எந்நேரமும் தொழுங்கள், தீமையானவற்றை மற்றவர்களுக்குச் செய்யாதீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள.

***எவ்வம் துணையாய்ப் பொருள்முடிக்கும் தாளாண்மை***
***தெய்வம் முடிப்புழி என்செய்யும்? – மொய்கொண்டு***
***பூப்புக்கு வண்டார்க்கும் ஊர! குறும்பியங்கும்***
***கோப்புக் குழிச் செய்வது இல்.***

நல்ல ஊழ்வினை இல்லாது போனால் செல்வம் தேடும் முயற்சி பயனளிக்காது. “**குறும்பியங்கும், கோபுக் குழிச்செய்வது இல்”** என்பது பழமொழி.

6 “அன்பானவர்களே, பழக்கத்தை மாற்ற முடியாது. அதனால் நல்ல பழக்கங்களைப் பழக வேண்டும். தீய பழக்கங்களைப் பழகக் கூடாது. காடை என்ற குருவியைப் பிடித்து வந்து கையில் வைத்து அது விரும்பி உண்ணும் தானியங்களைக் கொடுத்தாலும் அதன் மனம் வயற்புறங்களில் தான் இருக்கும். காட்டில் வேட்டையாடி வாழும் வேடர்களை அழைத்து வந்து சகல வசதிகளும் உடைய அரண் மனையில் இருத்தினாலும் அவர்கள் தமது பழக்கவழக்கங்களைக் கைவிட மாட்டார்கள்.”

“கடம்பவனத்தில் மிருகங்கள் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்தன. இருப்பினும் அவை தமது குலமுறைகளையே பின் பற்றி வந்தன. பசுக்கள் புற்களை உண்டன. மான்களும் புற்களையும் இலை குழைகளையும் உண்டன. யானை இலை குழைகளை உண்டது. பன்றி மட்டும் நாற்றமடிக்கும் அழுகிய பழங்களையும் மலத்தையும் உண்டு வந்தது. அத்துடன் குளத்தைக் கலக்கிச் சேற்றையும் உண்டு வந்தது. எருமை குளத்தைக் கலக்கி விட்டுச் சேற்றில் உருண்டு பிரண்டு விளையாடும். அவற்றைப் பார்க்க மற்றைய மிருகங்களுக்கு அருவருப்பாக இருக்கும். அத்துடன் அவற்றின் உடலில் இருந்து வீசும் துர்நாற்றம் அவர்களின் வயிற்றைப் புரட்டும்”. யானை சொன்னது; “ பன்றியும் எருமையும்

குளிக்காது தம் உடலில் சேறு பூசுகின்றன. அத்துடன் பன்றி உண்ணக் கூடாதவற்றையெல்லாம் உண்பதால் அதன் உடலில் இருந்து துர்நாற்றம் வீசுகிறது. அதனால் பன்றிக்கும் எருமைக்கும் புத்திமதி கூறுங்கள்" என்றது".

"எருமை நண்பா, நீ பன்றியைப் போன்று உண்ணக் கூடாதவற்றை உண்பவனல்ல. ஆனால் குளிக்கும் போது சேறு பூசுகிறாய். அப்படிச் செய்யாது சுத்தமாக இரு. சேறு பூசுவதால் நோய்கள் உண்டாகும். அது போலப் பன்றி உண்ணக்கூடாதவற்றை உண்கிறது. அது உடல் நலத்திற்குக் கேட்டை விளைவிக்கும். அத்துடன் மற்றவர்களை வெறுக்கப் பண்ணும். காட்டில் எவ்வளவு கனிகள் உள்ளன ; காய்கள் உள்ளன; கிழங்குகள் உள்ளன அவற்றை உண். குளத்தைக் கலக்காது குளித்து விட்டு நறுமணமுள்ள பூக்களைச்சூடு. சந்தனத்தைப் பூசு" என்றது மான்."

"சுத்தமாக இருந்தால் எல்லோரும் விரும்புவார்கள். அத்துடன் உடலும் ஆரோக்கியமாக இருக்கும்" என்றது குதிரை.

"என்னைப் போலச் சுத்தமாகவும் அழகாகவும் இருந்தால் எல்லோரும் விரும்புவார்கள்; விளையாடுவார்கள் என்றது முயல்"

"உண்மைதான் என்னைக் கண்டதும் முகம் சுழிக்கிறார்கள் ; மூக்கைப் பொத்துகிறார்கள். அதனால் எனக்கு அவமானமாக இருக்கிறது. இனிமேல் நான் குளிக்கப் போய் சேறு பூசமாட்டேன்" என்றது எருமை"

“என்னோடு பேசக்கூட மற்றவர்கள் விரும்புவதில்லை. சிலர் என்னைக் கேலி செய்கின்றனர் ; சிலர் எனது முகத்தில் விழிக்க கூடாதென்கின்றனர். சிலர் என்னைத் தங்களின் அருகில் வரக்கூட அனுமதிப்பதில்லை. அதனால் இனிமேல் நான் உங்களைப் போல காய்கனிகளையும், இலைகுழைகளையும்,கிழங்கு வகைகளையும் சாப்பிடுகிறேன்” என்றது பன்றி”.

“பன்றியும் எருமையும் தாம் கூறியபடி இரண்டு, மூன்று தினங்கள் வாழ்ந்தன. பின் அவைக்கு அந்த வாழ்வு வெறுத்து விட்டது. பன்றி பழைய படி தானுண்ட கழிவுகளை உண்டது. எருமை குளத்தைக் கலக்கி உடலெங்கும் சேறு பூசியது. அதன்பின்பு தான் அவற்றிற்கு நிம்மதி உண்டானது. “காய்கனிகளைத் தின்று நாக்கு மரத்து விட்டது. அழுகிய கழிவுப் பொருட்கள் தான் சுவையானவை” என்றது பன்றி”.

“குளத்தைக் கலக்கிச் சேறு பூசாது குளிப்பதும் ஒரு குளிப்பா” என்றது எருமை.”

“மற்றைய மிருகங்கள் எவ்வளவோ சொல்லியும் எருமையும் பன்றியும் திருந்தவே இல்லை. அவை முன்பு போல நடந்து கொண்டன. மற்றைய மிருகங்கள் அவற்றைக் கண்டதும் தூர விலகிச் சென்றன; கேலி செய்தன. ஆனால் அவை அவற்றைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. மிகவும் மகிழ்வுடன் தமது பழக்கப்படி வாழ்ந்தன”.

“அதனால் அன்பானவர்களே, பழக்கம் பொல்லாதது. கூடாத பழக்கங்களைப் பழகினால் பின் அதிலிருந்து விடுபடவே முடியாது” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*காடுறை வாழ்க்கைக் கருவினை மாக்களை*
*நாடுறைய நல்கினும் நன்கொழுகார் - நாடொறும்*
*கையுள தாகி விடினும், குறும்பூழ்க்குச்*
*செய்யுள தாகு மனம்.*

மக்கள் பழகிய வாழ்க்கை முறைகளை மாற்றுவது எளிதானதல்ல. எது நடந்தாலும் அவர்களின் இயல்பான குணம் மாறாது. **“குறும்பூழ்க்குச் செய்யுள தாகும் மனம்”** என்பது பழமொழி.

7 “அன்பானவர்களே, எப்பொழுதும் நம்பிக்கையும் விசுவாசமும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். நாம் ஒருவருக்கு ஓர் உதவியும் செய்யாதிருக்கும் போது அவர் கைம்மாறு கருதாமல் எமக்கு உதவி செய்தால் அதை உயிர் உள்ள வரை மறக்கக் கூடாது. தேவை ஏற்படும் போது செய்யும் உதவி சிறிதாக இருந்தாலும் அதன் தன்மையை எடுத்துப் பார்த்தால் அது உலகத்தை விடப் பெரியதாகும். பயன் கருதாது செய்யப்படும் உதவிக்கு ஈடானது உலகில் எதுவும் இல்லை. அப்படியாக உதவி செய்தவர்களுக்குத் துரோகஞ் செய்தால், அதனால் வரும் தீமை செய்பவரை அழிந்து விடும்”

"சிங்கவனத்தை சிங்கம் ஒன்று ஆண்டு வந்தது. அது மிகவும் நல்ல சிங்கம். தனது ஆட்சியின் கீழ் வாழும் மிருகங்களைத் துன்பப்படுத்தாது ஆண்டு வந்தது. அதற்குப் பேராசை இல்லை. சிங்கவனத்து மிருகங்கள் யாவும் இன்பமாக வாழவேண்டுமென நினைத்து ஆண்டு வந்தது"

"முல்லை வனத்தை யானை அரசாண்டது. அது மிகவும் நல்ல குணமுடையது. எந்த வேளையிலும் தன் ஆட்சிக்குட்பட்ட மிருகங்களுக்குத் தொல்லைகள் கொடுக்காது ஆண்டு வந்தது. முல்லை வனத்திலுள்ள மிருகங்கள் எந்த நேரத்திலும் யானையைக் கண்டு தமது குறைகளைக் கூறலாம்".

"ஒரு நாள் யானையின் அரச சபைக்குச் வந்த நரி, யானையைப் புகழ்ந்து கவிதை பாடியது. அதனால் மகிழ்ந்த யானை நரிக்கு ப் பெறுமதியான பொருட்களைக் கொடுத்தது. பின் தான் அணிந்திருந்த நவரத்தின மாலையைக் கழற்றி நரியின் கழுத்தில் போட்டது. அதன் பின், அடிக்கடி வந்து தன்னைச் சந்தித்து மகிழ்ச்சிப் படுத்தும் படி கூறியது. அதனால் நரி அடிக்கடி அரண்மனைக்கு வந்து யானையைப் புகழ்ந்து பாடிப் பெறுமதியான பொருட்களைப் பெற்றுச் சென்றது".

"யானை தனது உற்ற நண்பனாக நரியை ஏற்றுக் கொண்டது. அதனால் அது அரண்மனையில் செல்லப் பிள்ளையாக இருந்தது."

"ஒரு நாள் நரி சிங்கவனத்திற்கு சென்று அரச சபையில் சிங்கத்தைப் புகழ்ந்து பாடல் ஒன்றைப் பாடியது. அதனால் மகிழ்ந்த சிங்கம் பலவகையான இறைச்சிகளைக் கொடுத்தது. அதன் சுவையில் மயங்கிய நரி சிங்கத்தை அளவுக்கதிகமாகப் புகழ்ந்ததோடு யானையை இகழ்ந்து பாடியது. சிங்கம் வீரமுள்ளது. என்று சொன்னது. யானையைப் பற்றித் தரக்குறைவாகச் சொல்லி முல்லை வனத்தைப் பற்றிப் புகழ்ந்தது சொன்னது".

"முல்லை வனத்தின் செழிப்பைப் பற்றி நரி புகழ்ந்ததால் சிங்கத்திற்கு முல்லை வனத்தைக் கைப்பற்றும் யோசனை உருவானது. அதை அறிந்த நரி, சிங்கம் முல்லை வனத்தைக் கைப்பற்றினால் தான் அங்கு தங்கியிருந்து தினமும் விதம் விதமான இறைச்சி வகைகளை உண்ணலாமென நினைத்தது, யானையைக் கொன்று முல்லை வனத்தைக் கைப்பற்றும்படி ஆலோசனை கூறி, முல்லை வன அரண்மனையின் இரகசியங்கள் முழுவதையும் கூறியது."

"நரியின் ஆலாசனைப்படி சிங்கம் மிகவும் இலகுவாக முல்லை வனத்தைக் கைப்பற்றியது. அதன் பின் முல்லை வனத்தைச் சுற்றி சுற்றிப் பார்த்தது. அதன் எழிலும் வளமும் அதைக் கவர்ந்தது".

"முல்லை வனத்தைக் கைப்பற்றியமையைக் கொண்டாடுவதற்காக விழா ஒன்றைச் சிங்கம் எடுத்தது.

அவ்விழாவிற்கு நரி மிகவும் ஆடம்பரமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு வந்து சிங்கத்தின் அருகே நின்று சொன்னது; “ மன்னா, நான் முல்லை வனத்தின் இரகசியங்கள் அனைத்தையும் சொன்னதால் தானே தாங்கள் மிகவும் இலகுவாக யானையைக் கொன்று முல்லை வனத்தைக் கைப்பற்றினீர்கள். இது போலப் பூங்காவனத்தையும் கைப்பற்றுங்கள்” என்றது”.

“யாரை நம்பினாலும் துரோகிகளை நம்பக்கூடாது. யானையிடம் நீ எவ்வளவு பொன்னையும் பொருளையும் பெற்றிருப்பாய். அப்படிப் பெற்ற போதும் நீ அதற்கு விசுவாசமுள்ளவனாக நடக்கவில்லை. நான் தந்த இறைச்சிக்காகவும் பொருட்களுக்காகவும் உண்மையாகப் பழகிய ஒருவனைக் காட்டிக் கொடுத்தாய். இவ்வாறு நீ பொருளுக்காக என்னையும் காட்டிக் கொடுப்பாய். அதனால் உன்னை உயிருடன் விடக்கூடாது” என்று சொல்லி அதன் மேல் பாய்ந்து அதைக் கொன்றது”.

“அதனால் அன்பானவர்களே, நம்பிக்கைக்குத் துரோகஞ் செய்வோர் தர்மத்தால் அழிக்கப்படுவர்.” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***மெய்ம்மையே நின்று மிக நோக்கப் பட்டவர்***
***கைமேலே நின்று கறுப்பன செய்தொழுகிப்***
***பொய்ம்மேலே கொண்டவ் விறைவற்கென்றார், குறைப்பர்***
***தம் மேலே வீழப் பனை.***

நம்பியவருக்குத் துரோகம் செய்வோரை அறம் அழிக்கும். நம்பிக்கைத் துரோகஞ் செய்வோர் பனையைத் தம்மேல் விழுமாறு தறித்து வீழ்த்துபவர்கள் போலாவர். "**குறைப்பர் தம் மேலே வீழப் பனை**' என்பது பழமொழி.

8 "அன்பானவர்களே,மக்கள் ஒவ்வொருவரும் உயர்ந்தவர்களாக வாழ வேண்டும். உயர்ந்தவர்கள் மற்றவர்களுக்குத் தீமைகள் செய்ய மாட்டார்கள். மற்றவர்கள் தீமை செய்தாலும் அதைத் திருப்பிச் செய்யாது பொறுமையுடன் வாழ்வார்கள். அத்துடன் தீமைகள் செய்தவர்களுக்கும் நன்மை செய்வார்கள். அதனால் நல்லவர்களாக வாழுங்கள். அயலவர், பகைவர், நண்பர், இனத்தவர் என எத்தரப்பினராக இருந்தாலும் நடுவுநிலைமையுடன் நடந்து கொள்ளல் வேண்டும். அப்போது தான் உயர்ந்தவர்கள் மதிக்கப்படுவார்கள். உயர்ந்தவர்கள் சிறிய குற்றச் செயல்களைச் செய்தாலும் அது குன்றில் வைத்த விளக்குப் போல ஊரவர்கள் எல்லோருக்கும் தெரியும். தீயவர்கள் அளவு கடந்த தீய செயல்களைத் தினமும் செய்தாலும் அதை நல்லவர்கள் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை"

"நாவலடி என்ற கிராமத்தில் வாழ்ந்த ஞானசேகரம் என்பவர் மிகவும் ஒழுக்கமான உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர். அவர் வர்த்தகம் செய்வதற்காகக் கருணாகரனிடம் பெருந்தொகைப் பணத்தை வட்டிக்கு வாங்கினார். குறித்த தவணையில் வாங்கிய பணத்தை வட்டியுடன் திருப்பித் தந்துவிடுவதாகக் கூறியிருந்தார். அவர்

மீதிருந்த நம்பிக்கையால் கருணாகரன் பொறுப்பு எதையும் பெறவில்லை".

"ஞானசேகரம் வர்த்தக நிமித்தம் அயல் நாட்டிற்குச் சென்றார். குறிப்பிட்ட நாள் கழிந்ததும் கருணாகரன் ஞானசேகரத்தின் வீட்டுக்குச் சென்றார். ஞானசேகரத்தின் வீடு பூட்டியிருந்தது. அவர் அருகில் இருந்த ஞானசேகரனின் சகோதரனிடஞ் சென்று ஞானசேகரத்தைப் பற்றி விசாரித்தார். ஞானசேகரத்தின் மேல் அவருக்குப் பகை இருந்தது. அதனால் சொன்னார்; "கருணாகரா, ஞானசேகரம் அயல் நாடொன்றின்குச் சென்ற பின் தனது மனைவி மக்களை அங்கு வரும்படி சொல்லி அவர்கள் சென்று விட்டனர். வீட்டையும் விற்று விட்டார்" என்றார்".

"கருணாகரனுக்குத் தலைசுற்றியது. அவருக்கு ஐந்து பெண்பிள்ளைகள். அவர்களைக் கரைசேர்ப்பதற்காகச் சேர்த்து வைத்திருந்த பெருந்தொகைப் பணத்தை ஞானசேகரனின் ஒழுக்கம் காரணமாகக் கொடுத்தார். ஞானசேகரன் பணத்தைப் பெற்று இரண்டு வருடங்களில் திருப்பித் தருவதாகச் சொன்னவர். அது பற்றிக் கதைக்காது அவர் தனது வீட்டையும் விற்றுவிட்டு மனைவி மக்களையும் அழைத்துச் சென்று விட்டார். கடைசி ஒரு வார்தை சொன்னாலாவது நிம்மதியாக இருக்கும். யாரை நம்புவது" என்று கவலைப்பட்டார் கருணாகரன்"

“மேலும் ஆறு மாதங்கள் கழிந்தன. ஞானசேகரன் பணத்தைப் பற்றி எந்தத் தகவலையும் கருணாகரனுக்கு அனுப்பவில்லை. அதனால் கருணாகரன் கவலைப்பட்டார். அச்செய்தி ஊர் முழுவதும் பரவியது. ஞானசேகரனின் சகோதரன் தனது பகையைத் தீர்க்க ஞானசேகரனைப் பற்றி அவதூறாகக் கதைத்தார்”.

“மேலும் ஆறு மாதங்கள் கழிந்த பின் ஞானசேகரம் ஊருக்கு வந்தார். பெரியவர்கள் அவரைப் பார்த்து முகஞ்சுழித்தனர். ஞானசேகரன், கருணாகரனின் வீட்டுக்குச் சென்று கருணாகரனிடம் வாங்கிய பணத்தையும் அதன் வட்டிப் பணத்தையும் தான் தாமதித்ததற்காகப் பெருந்தொகைப் பணத்தையும் கொடுத்தார். அப்பொழுது கருணாகரன் சொன்னார்; “ஐயா, தங்கள் பணம் தரத் தாமதமாகும்”' என்று ஒரு செய்தி அனுப்பியிருக்கலாம் தானே”.

“கருணாகரா, நான் ஒரு விபத்தில் சிக்கிக் கடுங்காயங்களுக்காளாகி மயக்க நிலையில் ஆறு மாதங்கள் வைத்தியசாலையில் இருந்தேன். அதனால் தான் எனது மனைவி பிள்ளைகளை அழைத்தேன். மகன் தான் எனது தொழிலைக் கவனித்தான். இப்போது என்னிடம் நிறையப் பணம் இருந்தது. நான் மிகவும் ஒழுக்கமாக வாழ்ந்தேன். இருப்பினும் எனக்கு அப்பாற்பட்ட சக்தியால் தான் தவறு செய்ய நேர்ந்தது” என்றார் ஞானசேகரம்”.

"பெரியவர்கள் தவறு செய்தால் அதை மக்கள் பெரிதாகக் கதைப்பார்கள். இதை ஒரு கீழ்மகன் செய்தால் அது அவனின் இயல்பு என்று கூறிப் பேசாது இருப்பார்கள். அது தான் உலக இயற்கை. கவலைப்படாதீர்கள்" என்றார் கருணாகரன். இருப்பினும் பெருந் துன்பப்பட்டார் ஞானசேகரம்".

"உயர்ந்தவர்கள் தமக்கு அப்பாற்பட்ட சக்தியால் தாக்கப்பட்டுத் தீமை செய்தாலும் அது சந்திரனில் உள்ள களங்கத்தைப் போல உலகிற்குத் தெரியும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கன்றி முதிர்ந்த கழியப்பன் னாள்செயினும்***
***ஒன்றும் சிறியார்கண் என்றானும் - தோன்றாதாம்***
***ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்***
***குன்றின்மேல் இட்ட விளக்கு.***

உயர்ந்தவர்கள், உயர் குடியினர் உயர்நிலையிலுள்ளோர் செய்யும் சிறு குற்றங்கள் பெரிதாகத் தெரியும். ஆகையால் பெரியவர்கள் சிறுகுற்றங்களையும் செய்யாதிருத்தல் வேண்டும். "**குன்றின்மேல் இட்ட விளக்கு"** என்பது பழமொழி.

9 "அன்பானவர்களே, தன்னை அண்டி வந்தவர்களின் துன்பங்கள் முழுவதையும் தீர்ப்பவராகவும், தான தருமங்களைச் செய்பவராகவும் இருப்பவர் ஒழுக்கமாக வாழாவிட்டால் அவர் செய்கின்ற உதவி ஒத்தாசைகள், தான தர்மங்கள் மதிக்கப்படமாட்டா. அவை அவரின் சிறு சிறு ஆசைகளால் பாதிக்கப்படும். பிராமணர்கள்

தாம் கற்ற வேதத்தை மறந்தாலும் கூடத் திரும்ப அதைப் படித்து உணரலாம். ஆனால் ஒழுக்கத்திலிருந்து தவறினால் இழிந்தவர்களாகவே கருதப்படுவார்கள். ஒழுக்கம் தவறுவதால் மேலும் மேலும் பல குற்றங்கள் செய்ய வேண்டிய நிலை உண்டாகும். சிலர் தமது ஆசைகளைத் தீர்ப்பதற்காகவே தான தர்மம் செய்கிறார்கள்; உதவிகள் செய்கிறார்கள்".

"நல்லவரென்றும் கொடை வள்ளலென்றும் காட்டச் சிலர் உதவிகளும் தான தர்மங்களும் செய்கிறார்கள். பலர் புகழுக்காக உதவிகளும் தான தர்மங்களும் செய்கிறார்கள். மனதை அடக்க முடியாதவனின் தர்மம், பசு புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு அயலவரின் பயிரை மேய்வதைப் போன்றதாகும்"

"காவலூரில் நடேசன் என்றொருவர் இருந்தார். அவரிடம் பணம் தாராளமாக இருந்தது. ஆனால் அவருக்குப் பிள்ளைகள் இல்லை. அத்துடன் அவருக்குப் பெண்கள் மீதும் புகழின் மீதும் ஆசை இருந்தது. யாராவது பொருள் தேவையானவர்கள் அழகான பெண்ணுடன் சென்று கேட்டால் பெருந்தொகைப் பணம் கொடுப்பார். பெண்கள் இல்லாது சென்று கேட்டால் கேட்டதினும் பார்க்கக் குறைத்துக் கொடுப்பார்".

"கோயிலுக்கு நன்கொடை கொடுத்தால் ஒலிபெருக்கியில் அது பற்றிப் பூசை முடிந்த பின் புகழ்ந்து பேசுதல் வேண்டும். பாடசாலை, சனசமூக நிலையங்களுக்கு உதவி செய்தால் மாலை

அணிவிக்க வேண்டும் ; பொன்னாடை போர்த்துதல் வேண்டும். தீயவர்கள் அவரது பலவீனத்தைப் பயன்படுத்திப் பிழைப்பு நடத்தினர்”.

“காவலூரில் நாராயணன் என்றொரு பெரியவர் இருந்தார். அவர் மிகவும் ஏழை. நன்கு கற்றவர் ஒழுக்கம் மிக்கவர். ஊர் மக்களுக்குச் சோதிடம் பார்ப்பார்; கிரகதோஷம் செய்வார்; ஆலோசனைகள் வழங்குவார். இவையெல்லாவற்றையும் அவர் இலவசமாகவே செய்வார். அவரில்லாமல் அக்கிராமத்தில் எந்தவொரு நிகழ்வும் நடைபெறமாட்டாது, அவர் ஆசீர்வதித்த பின்பே நிகழ்வுகள் நடைபெறும். அவருக்கு மாலை அணிவது, பொன்னாடை போர்த்துவது, அவரைப் பற்றிப் பேசுவதெல்லாம் பிடிக்காது. தான் எவ்வளவோ அள்ளிக் கொடுத்தும் தன்னை மதிக்காது தான் கொடுக்கும் பொருட்களையே மதிக்கின்றார்கள் என்று நினைத்து நடேசன் கவலைப்படுவார்” .

“ஆகையால் அன்பானவர்களே, பயன்கருதிக் கொடுக்கும் கொடை கொடையாகாது. நடேசன் கொடுத்த பணத்திற்கு வாங்கியவர்கள் போடும் மாலை மரியாதைகள் சமமாகி விடும். அதனால் அதைக் கொடையென்று யாரும் நினைப்பதில்லை” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***பேதுறவு தீரப் பெருக்கத், தலையளித்து***
***ஆசறு செய்யாராய் ஆற்றப் பெருகினும்***
***மாசற மாண்ட மனமுடையர் ஆகாத***
***கூதறைகள் ஆகார் குடி.***

எவ்வளவு தான் கொடுத்துதவினாலும் நல்லொழுக்கமில்லாதவர்கள் மதிக்கப்பட மாட்டார்கள். "**கூதறைகள் ஆகார் குடி**" என்பது பழமொழி.

**10** "அன்பானவர்களே, எந்தக் காரியத்தையும் அது வெற்றியுடன் முடிக்கும் வழிவகையினை ஆராய்ந்து, முயற்சியில் தளர்வில்லாது முயன்று முடிக்க வேண்டும். கூர்மையான அம்பு அடிபொருந்தக் குறிபார்த்து இழுத்துச் செலுத்தப்படும் போது, அது தாக்காது தடுப்பதற்குரிய பாதுகாப்பு எவையும் இல்லை".

"வெற்றி பெற வேண்டுமானால், செய்யப்போகும் காரியத்தை நன்கு ஆராய்ந்து அறிதல் வேண்டும். அறிய முடியாதவற்றை அறிந்தவர்களிடம் கேட்டுக் கற்றுக் கொள்ளல் வேண்டும். அதைவிட முழுமையாகச் செய்து வெற்றியடையும் வாய்ப்பு ஏற்படும் வரை எந்தச் செயலையும் தொடங்கக்கூடாது. அத்துடன் செய்யப் போகும் காரியத்தை இலகுவானது என்று எண்ணவும் கூடாது. தொடங்கிய செயலை இடை நடுவில் விடவும் கூடாது. செய்யும் வழிகளை நன்கு அறிந்து, அச்செயலை மேற்கொள்ளும் போது ஏற்படும் இடையூறுகளைத் தாங்கிக் கொண்டு, தனக்கு உதவியாக வருபவனை

சந்தேகித்து வோறொருவருடன் செயலைச் செய்யக் கூடாது. இவ்வாறு செய்யப்படும் செயலைப் பலபேர் சேர்ந்தாலும் தடுக்க முடியாது"

"சைவத்திற்கும் கல்விக்கும் பெருந்தொண்டாற்றிய ஆறுமுகநாவலர் 1872ஆம் ஆண்டு கோப்பாய் மக்கள் கல்வியறிவும் சமய அறிவும் பெற வேண்டுமென்ற நோக்கில் நாவலர் தமிழ் வித்தியாலயத்தை நிறுவினார். அவர் 1872 ஆம் ஆண்டு கட்டிய கட்டடங்களில் தான் இன்றும் (2010) அறுநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இரண்டு கட்டிடங்களும் நூற்றாண்டுகளைக் கடந்த போதும் அவற்றைத் திருத்தவோ புனரமைக்கவோ யாரும் எண்ணவில்லை. அரசாங்கம் வருடா வருடம் பாடசாலைகளில் கட்டிடங்களை அமைக்கவெனக் கோடிக் கணக்கில் பணம் கொடுத்த போதும் சம்பந்தப்பட்டவர்கள் நாவலர் தமிழ் வித்தியாலயத்திற்குக் கட்டிடடம் கட்டவில்லை. தமக்கு வேண்டியவர்களுக்குக் கட்டிடம் தேவையில்லாதிருந்த போதும் கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்தனர். மேடைகள் தோறும் நாவலரின் உபதேசங்களைப் பின்பற்றிச் சைவத்தையும் தமிழையும் வளர்க்க வேண்டுமென்று முழங்குபவர்கள். நாவலர் அமைத்த பாடசாலை அழிந்து போகட்டும் என்று விட்டு விட்டனர்."

"1989ஆம் ஆண்டு அப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட அதிபர் 2009 ஆம் ஆண்டு ஓய்வு பெறும் வரை அரசாங்க அதிபரில் இருந்து நாவலர் நிறுவிய நிறுவனங்கள் வரை சென்று நிலைமையை விளக்கி இரந்து கேட்டபோதும் கட்டிடங்கள் கட்டப்படவில்லை. வேறு

கட்டடங்களில்லாததால் அக்கட்டிடத்திலேயே வகுப்புக்கள் நடைபெற்றன. முயற்சியில் சற்றும் தளர்ச்சியடையாத அதிபர் வடமாகாண ஆளுனர் சந்திரசிறி அவர்களுக்கு இது பற்றி அறிவித்தார். அறிவித்த சில தினங்களில் ஆளுனர் தனது உத்தியோகத்தர்களை அனுப்பிப் பாடசாலையைப் பார்வையிடச் செய்தார். வந்தவர்கள் இப்பாழடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடத்தில் அறுநூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர் என்று கண்ணீர் விட்டனர். நாவலரின் பெருமைகளை மேடைக்கு மேடை பேசும் சைவர்களை விட நாவலரைப் பற்றி அறியாத பௌத்த சிங்கள மக்கள் கவலைப்பட்டனர். அவர்கள் ஊவா மாகாண சபை முதல்வருக்கு அறிவித்து, அவர் வந்து பார்த்து விட்டு எட்டு வகுப்பறைகளைக் கொண்ட இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்றைக் கட்டிக் கொடுத்தார். அவரைப் பின்பற்றி இன்னொரு நிறுவனம் இன்னொரு மாடிக் கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்க முன் வந்துள்ளது. முயற்சியைக் கைவிடாது தொடர்ந்து முயற்சித்து வந்தால் ஆகாத காரியங்கள் எவையும் இல்லை".

"பலர் கூடி நல்ல செயல்களைத் தடுப்பார்கள். தமது இலாபத்திற்காகத் தர்மத்தை விலை பேசுபவர்களே அதிகமானோர். தர்மசிந்தனையும், உண்மையை உணரும் தன்மையும் உள்ளவரைச் சந்திக்கும் வரை முயற்சி செய்து கொண்டே இருத்தல் வேண்டும். வலியாரைச் சந்திக்கும் வரை ஏமாற்றமும் தோல்வியும் உண்டாகிக் கொண்டே இருக்கும். கடவுள் தான் தடையென்று தெரிந்தாலும் முயற்சியை விடாதவரை யாரும் வெல்ல முடியாது.

இலக்குத் தவறாத கூர்மையான அம்பைப் போல் முயற்சிப்பவர் இருத்தல் வேண்டும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பின்***
***தூங்கும் எயிலும் தொலைத்தலால் - ஆங்கு***
***முடியும் திறத்தால் முயல்க; தாம், கூரம்பு***
***அடியிழுப்பின் இல்லை அரண்!***

எதையும் நன்கு ஆராய்ந்து மனம் சலியாது தொடர்ந்து முயற்சிப்பதன் மூலம் வெற்றியடையலாம். **“கூரம்பு, அடியிழுப்பின் இல்லை அரண்”** என்பது பழமொழி.

11 “அன்பானவர்களே, வலிமை உள்ளவர்களின் நட்பைப் பெற்றவர்கள் வலிமை இல்லாதவராக இருந்தாலும் வலிமையுடைவர்களாக மாறுவர். அவர்களை வெல்ல யாராலும் இயலாது வலிமையுள்ளவர்களைப் போற்றித் தமக்கு சுற்றமாய் ஆக்கிக் கொள்ளுதல், ஒருவன் அடையும் பெருஞ்சிறப்புக்கள் எல்லாவற்றிலும் முதன்மையானதாகும். அத்துடன் தம்மை விட வலிமை உள்ளவரைத் தமக்குச் சொந்தமாய்க் கொண்டு அவர்கள் வழி நடப்பது வல்லமைகளுளெல்லாம் பெரும் வல்லமை ஆகும். அது போல அறிவிற் சிறந்தவர்களை தம் உறவாக்கிக் கொண்டு அவர்களின் ஆலோசனைப்படி நடக்கிறவனுக்குப் பகைவரால் தீமைகள் செய்ய முடியாது.”

“கடம்பவனத்திலே மிருகங்களின் குட்டிகளும் பறவைக் குஞ்சுகளும் படிக்க ஒரு பாடசாலை இருந்தது. பாடசாலையின் அதிபராகக் கடமை புரிந்த எருது வயது வந்து ஓய்வு பெற்றது. அதனால் அப்பாடசாலைக்குப் புதிதாக ஓர் அதிபரை நியமிக்க அக்காட்டின் இராசாவன யானை விரும்பி அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரியது”.

“அப்பாடசாலையில் முன்நூறுக்கும் அதிகமான குட்டிகள் படித்தன. பதினைந்து ஆசிரியர்கள் பணி புரிந்தனர். பசுவும், மானும், குரங்கும், குதிரையும் அதிபர் பதவிக்கு விண்ணப்பித்தன. குரங்கு பெரிய திறமை சாலியல்ல. அது பட்டப்படிப்புகள் எதுவும் படிக்கவில்லை. குதிரை பட்டதாரி. பின் கல்வி பற்றி ஆய்வு செய்து பட்டம் பெற்றிருந்தது. பசு பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றதுடன் வெளிவாரியாகப் படித்துப் பட்டம் பெற்றிருந்தது. மான் கல்வி சம்பந்தமான போட்டிகளில் கலந்து பல சான்றிதழ்களை வைத்திருந்தது”.

“நேர் முகப் பரீட்சைக்கு குரங்கும் பசுவும் குதிரையும் மானும் சென்றன. யானை நேர்முகப் பரீட்சைக்குத் தலைமை தாங்கியது. எருமையும் பன்றியும் யானைக்கு உதவியாக இருந்தன. நேர்முகப் பரீட்சையின் பின் காடு கலகலப்பாக இருந்தது; ‘பசுவிற்குத்தான் அதிபர் பதவி கிடைக்கும்’ என்று கிளி சொன்னது. அதைக் காட்டுக் கோழி அனுசரித்துப் பேசியது. புறா சொன்னது; “குதிரை தான்

கல்வியறிவு கூடியது. கல்வியைப் பற்றி ஆய்வுகள் செய்தது. அதனால் குதிரைக்குத்தான் அதிபர் பதவி கிடைக்கும்"என்றது".

"நரி அதை மறுத்துச் சொன்னது ; "இப்போ படிப்பைவிடச் செல்வாக்குத்தான் முக்கிய இடம் வகிக்கிறது. யானைக்குத் தொண்டு துரவு செய்பவை, பழங்கள் காய்கறிகள் பறித்துக் கொடுப்பவை, பொன்னாடை போர்த்துபவைக்குத் தான் பதவி கிடைக்கும். யார் கல்வியைப் பார்க்கிறார்கள். பெரியவர்களைப் பற்றிப் பேசுவதாலோ அல்லது மேலே படிப்பதாலோ பிரயோசனம் இல்லை. சென்ற முறை எருமையை விடக் குதிரை தான் தகுதியாக இருந்தது. வலிமை உள்ளவர்கள் மேடைகளில் பிரசங்கம் செய்வார்களே தவிர செயலில் காட்ட மாட்டார்கள். தமது சுயநலத்திற்காக எதையும் செய்வார்கள். முன்பே குதிரைக்குத் தான் அதிபர் பதவி கொடுத்திருத்தல் வேண்டும். கொடுக்கவில்லை, இப்போதும் கொடுப்பார்கள் என்று சொல்ல முடியாது" என்றது"

"நரி சொல்வது அத்தனையும் உண்மை. காட்டு மிருகங்களின் கல்வியில் அக்கறை காட்டுவதாக நடிக்கும் யானை தனது இனத்தின் தேவைகளைத் தான் கவனிக்கிறது. பறவைக் குஞ்சுகள் கூடு கட்டிப் பழக உபகரணங்கள் கொடுப்பதில்லை. காட்டில் தேடி எடுக்கும் படி கூறுகிறது. யானைக் குட்டிகளுக்கு கணனி வாங்கிக் கொடுத்துள்ளது. யானை வலியது. அது தான் அரசன் . அதனால் அது தனக்கு விரும்பியவரைத் தான் நியமிக்கும். குரங்கு பழங்கள், காய் கனிகள், தேன் என்பன கொடுப்பது வழக்கம். அதைவிடக் குரங்கு யானை

செய்யும் தவறுகளைக் கண்டிக்காது அதைப் புகழும். நாம் யாராவது யானையைப் பற்றிக் கதைத்தால் அதை ஒருவரிகூடப் பிழைக்காமல் அப்படியே சொல்லும், ஆகையால் வலியவரான யானையின் நண்பனான குரங்கிற்குத் தான் அதிபர் பதவி கிடைக்கும். பதவிக்கும் மேற்படிப்புக்கும் தொடர்பில்லை. அதை நீங்கள் காட்டில் நடைபெறும் நிகழ்வுகளில் இருந்து கண்டு கொள்ளவில்லையா?" என்று கேட்டது முயல்".

"ஒரு வாரம் கழிந்தது. குரங்கு தன்னை ஆடம்பரமாக அலங்கரித்துக் கொண்டு வந்து அதிபரின் ஆசனத்தில் அமர்ந்தது. முயல் தலையாட்டிச் சிரித்து விட்டுச் சொன்னது; "வலியவர்களின் தோழரும் வலியவராவர். அதனால் மறு பேச்சுப் பேசாது கடமையைச் செய்யுங்கள். இல்லாவிட்டால் பழிவாங்கப்படுவீர்கள்" என்றது.

"எனவே அன்பானவர்களே, வலிமையுள்ளவர்களின் சுற்றத்தினரும் வலிமையுடையவர்களாகவே உலகினரால் கணிக்கப்படுவார்கள். வலிமையுள்ளவர்கள் நடுவு நிலையில் நின்று காரியங்களைச் செய்யா விட்டால் தகுதியானவர்கள் புறக்கணிக்கப்படுவர். அதனால் பல தீமைகள் உண்டாகும்.

"எருது வலியதானால் அதன் கொம்பும் வலிமை உடையதாக இருக்கும். அது போல வலிமையுடையவர்களோடு சேரும் வலிமையற்றவர்களும் வலிமையுடையவர்களாகக் கருதப்படுவர்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***செருக்கெழு மன்னர் திறனுடையார் சேர்ந்தார்***
***ஒருத்தரை அஞ்சி உலைதலும் உண்டோ?***
***உருத்த கணங்கின் ஒளியிழாய்! கூரிது***
***எருத்து வலியதன் கொம்பு.***

எருது வலிதானால் அதன் கொம்பும் வலிமை உடையதாக இருக்கும். அதனால் பகையை அழிக்கும் ஆற்றலைப் பெறும். அது போல வலிமையற்றவர் வலிமையுடையவருடன் சேர்ந்தால் அவரும் வலிமையுடையவராவர். "**கூரிது எருத்து வலியதன் கொம்பு"** என்பது பழமொழி.

**12** "அன்பானவர்களே எதையும் புகழுக்காகச் செய்யக்கூடாது. புகழைத் தேடியும் செல்லலாகாது. அது உங்களைத் தேடி வரும்படி நீங்கள் நடந்து கொண்டீர்களானால் வந்த புகழ் உங்களுடன் தங்கிக் கொள்ளும். நீங்கள் மரணமடைந்த பின்பும் நிலைத்து நின்று உங்கள் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கும். பின்பு அதை விடுத்து புகழ்வர் வேண்டும் என்பதற்காகச் செயலைச் செய்வது கூலிக்காரன் கூலிக்காக வேலை செய்வதைப் போன்றதாகும்".

"வறுமைப்பட்டவர்களுக்குப் பிரதியுபகாரத்தை எதிர்பாராது கொடுத்துதவுவது நீங்காத புகழைத் தரும். மக்கள் அதைத் தான் பெருமையாகப் பேசுவார்கள். ஒருவர் பெற்ற புகழைத் தவிர இவ்வுலகில்

அழியாமல் இருப்பது வேறு எதுவுமில்லை. வாழ்ந்தால் ஒருவர் புகழுடன் தான் வாழ வேண்டும் என்று பெரியவர்கள் கூறியுள்ளார்கள். சிலர் அடுத்தவர்களுக்குத் தெரியாமல் தானதர்மம் செய்கிறார்கள். அது போல அவர்கள் அரிய பல செயல்களையும் செய்கிறார்கள். சிலர் புகழுக்காகத் தான தர்மம் செய்கிறார்கள். இன்னும் சிலர் பணம் கொடுத்துப் புகழை வாங்கிக் கொள்கிறார்கள்."

"நாவற்காடு என்ற ஊரில் சிவஞானம் என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவர் புகழில் மிகுந்த விருப்புள்ளவர். தன்னைப் புகழ்வோருக்குப் பணம் கொடுப்பவர். அத்துடன் மேடை அமைத்து விழா வைத்துத் தம்மைப் போற்றிப் புகழ்வதற்காக ஆட்களை நியமித்துப் புகழ்பெறுபவர். தான தர்மங்கள் செய்வதால் உண்டாகும் பலனைப் பற்றி அவர் சிந்தித்துப் பார்த்ததில்லை. அத்துடன் எதையும் ஆராய்ந்து பார்க்குமளவிற்கும் அவருக்கு அறிவு இல்லை. அதனால் அவரைப் புகழ்ந்து ஏமாற்றிப் பலர் வாழ்ந்து வந்தனர்".

"சிவஞானத்தின் நண்பன் அருணாசலம். அவன் அவ்வப்போது வந்து சிவஞானத்தைப் புகழ்வான். அன்று அவன் சொன்னான்; " நண்பா, பிள்ளையாருக்கு ஒரு எலி வாகனம் செய்து கொடுத்தல் வேண்டும். வாகனத்தைக் கொடுக்கும் போது மேள தாளங்களுடன் உன்னை அழைத்துச் சென்று வாகனத்தைக் கோயிலில் கொடுத்த பின்பு வீதியில் மேடை அமைத்து உனது புகழை ஒலிபெருக்கியில் சொல்லுதல் வேண்டும். ஐம்பதினாயிரம் ரூபா வரை அதற்குச் செலவாகும். அப்படிச் செய்தால் உனது புகழ்வாழும்.

அத்துடன் கோயில் தலைவர் பதவிக்கும் நீ போட்டியிட்டு வெல்லலாம்" என்றான்".

"புகழின் மீது அவாக்கொண்ட சிவஞானம் அதற்குச் சம்மதித்து ஐம்பதினாயிரம் ரூபாவை அருணாசலத்திடம் கொடுத்தார். அவன் இருபதினாயிரம் ரூபா செலவு செய்து விழாச் செய்தான். மாலைகளும் பொன்னாடைகளும் வாங்கித் தனது நண்பர்களிடம் கொடுத்து அதைப் போடுவதற்கான கூலியையும் கொடுத்தான். விழாவில் பணம் வாங்கியவர்கள் சிவஞானத்தைப் புகழ்ந்து பேசினர். சிவஞானத்திற்குத் தலைகால் புரியாத மகிழ்ச்சி அதனால் ஏழை மக்கள் சிலரை மேடைக்கு அழைத்துப் பணம் கொடுத்தான்."

"சில வாரங்களின் பின் சிவஞானத்தின் தாயார் காலமானார். மரண வீட்டிற்கு இனசனத்தவரைத் தவிர யாரும் வரவில்லை. அது சிவஞானத்திற்குக் கவலையைக் கொடுத்தது. அவன் அருணாசலத்தை அழைத்துத்' தான் விழா வைக்கும் நாட்களில் வந்து வாழ்த்துவோரும் கௌரவிப்போரும் ஏன் வரவில்லை?" என்று கேட்டான்".

"அதற்கு அருணாசலம் சொன்னான்; "நண்பா, நாம் ஒவ்வொரு முறையும் அவர்களுக்குப் பணமும் மாலையும் பொன்னாடையும் கொடுத்துத் தான் மேடைக்கு அழைக்கிறோம். அவர்கள் கூலிக்கு வேலை செய்பவர்கள். அவர்கள் இங்கு வந்தால் அவர்களின் சீவியம் கஷ்டமாக இருக்கும். கூலிக்கு வேலை

செய்பவர்கள் கூலியைக் கருத்திற் கொள்வார்களே தவிர செய்யும் வேலையின் தராதரங்களையோ, அல்லது அதனால் வரும் பயன் களையோ கருத்திற் கொள்ள மாட்டார்கள். உனது தாயாரின் அந்திரட்டிக்குச் சொல்வோம். வந்து சாப்பிட்டு விட்டுப் போகட்டும். அத்துடன் வாழ்த்துவோருக்கும் பணம் கொடுப்போம். அவர்கள் வந்து உயர்வாகப் பேசுவார்கள்" என்றான்".

"அதனால் அன்பானவர்களே, தான தர்மம் செய்வதால் வரும் பயனைப் பற்றிக் கருதாது புகழைக் கருத்திற் கொண்டு செய்யும் தான தர்மங்கள் பயனற்றவை. அத்துடன் அப்படியானவர்களுக்குப் பகுத்தறிவும் கிடையாது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***பயன்நோக்காது ஆற்றவும் பாத்தறிவொன் றின்றி***
***இசைநோக்கி ஈகின்றார் ஈகை – வயமாப்போல்***
***ஆலித்துப் பாயும் அலைகடல் தண்சேர்ப்ப!***
***கூலிக்குச் செய்துண்ணு மாறு.***

கூலிக்கு வேலை செய்பவன் வேலையைப் பற்றி நினைக்க மாட்டான். தனது கூலி வந்தால் சரியனெ நினைப்பான். அது போன்றது தான் புகழுக்காகக் கொடுக்கும் கொடையும். **"கூலிக்குச் செய்துண்ணு மாறு**" என்பது பழமொழி.

13 “அன்பானவர்களே, மரணத்தை வென்றவர்கள் யாரும் இல்லை. செல்வம் வளத்தைத் தரும்; புகழைத் தரும் ; வலிமையைத் தரும் ; வனப்பைத் தரும்; அதனால் செல்வத்தால் செய்ய முடியாதனவற்றையெல்லாம் செய்யலாமென்று செல்பவர்கள் அறிவிலிகள். செல்வம் ஒருவனுக்கு எல்லா நன்மைகளையும் கொடுக்கும். ஆனால் மரணத்தைத் தடுக்கும் சக்தி அதற்கில்லை. அத்துடன் அது நிலையில்லாதது. யாரும் எதிர்பாராத வேளையில் செல்வம், உள்ளவரைக் கை விட்டுச் சென்று விடும்”.

“பெருஞ்செல்வம் இருக்கும் போது நாடக மேடைக்கு மக்கள் கூடுவதைப் போலக் கூடுவார்கள். செல்வம் இல்லாது போனால் நாடகம் முடிந்ததும் மக்கள் வெளியேறுவது போலச் சென்று விடுவார்கள். நாள் என்பது வாழ்வைத் தேய்க்கும் அரம். ஒரு நாள் கழிந்தால் வாழ்விலும் ஒரு நாள் குறையும். உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பானது கூட்டிற்கும் பறவைக்கும் உள்ள தொடர்பு போன்றது. அதனால் பெரியவர்கள், நேற்று இருந்தவன் இன்றில்லை என்று சொல்லும் பெருமையை உடையது இந்த உலகம் என்று கூறுவார்கள். அதனால் செல்வ முள்ளபோது நாளைக் கடத்தாது. நல்ல செயல்களைச் செய்யுங்கள்.”

“நாவலூரிலே ஒரு செல்வந்தர் இருந்தார். அவர் தான தர்மம் செய்பவர். ஒழுக்கமுள்ளவர். செல்வத்தின் கடாச்சத்தால் அறுபது வயதிலும் இளமை மிக்கவராக இருந்தார். அவரின் மனைவியும் பிள்ளைகளும் அவருக்கு எதிர் மாறானவர்கள். அவர் தான தர்மம்

செய்வது அவர்களுக்குப் பிடிப்பதில்லை. அதனால் அவருடன் பிரச்சினைப்பட்டுக் கொண்டே இருப்பார்கள்.”

“அவர் அந்த ஊரில் உள்ள பாடசாலைக்குக் கட்டிடம் ஒன்றைக் கட்டிக் கொடுக்க விரும்பினார். அதை அவர் ஊரவர்களுக்கு அறிவித்தும் இருந்தார். பாடசாலை வேலையை ஆரம்பிக்குமாறு அவர் அதிபரை அடிக்கடி கேட்பார். அதற்கு அதிபர்; “கல்வித் திணைக்களத்தின் அனுமதி வந்தவுடன் ஆரம்பிக்கலாம். இன்று திங்கட்கிழமை புதன் கிழமை ஆரம்பிப்போம்” என்றார்.”

“அந்தச் செல்வந்தர் தனது மனைவியையும் பிள்ளைகளையும் அழைத்துச் சொன்னார்; “தானங்களில் சிறந்த தானம் கல்வித் தானம். நான் கற்ற பாடசாலையில் கட்டிடப் பற்றாக்குறையுள்ளது. அதனால் மாணவர்கள் சிரமப்படுகிறார்கள். அதற்கு ஒரு கட்டிடம் கட்டிக் கொடுக்க விரும்புகிறேன். நீங்கள் நான் செய்யும் தர்மகாரியங்களை விரும்புவதில்லை. எனது தந்தை செய்த தானதர்மங்களால் தான் நான் இந்தப் பெரு வாழ்வு வாழ்கிறேன். அது போல நீங்களும் செய்தல் வேண்டும். நான் மட்டுமல்ல நீயும் உனது தாய் தந்தை சகோதரர்களும் எமது பிள்ளைகளும் அங்கு தான் கற்றனர். அதனால் நீயும் மனமுவந்து செய்தல் வேண்டும்” என்றார். அவரது மனைவி எதுவும் பேசவில்லை.”

“நல்ல காரியத்தை இவ்வளவு காலமும் செய்யாததையிட்டு நான் மிகவும் மனம் வருத்துகிறேன். கட்டிட வேலைகளைத்

தொடக்கலாமென்றால். கல்வித் திணைக்களம் தடையாக உள்ளது" என்றார்."

"அன்று இரவு படுக்கைக்குச் சென்ற அவர் மறுநாள் எழும்பவில்லை. அவரது ஈமைக்கிரியைகள் முடிந்ததும் அதிபர் அவரது வீட்டுக்கு வந்து பாடசாலையில் கட்டிடம் கட்ட அனுமதி வந்து விட்டதாகச் சொன்னார். அதற்கு அவரின் மனைவி சொன்னாள்; "எனக்கு அவர் அதைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. அத்துடன் கட்டிடம் கட்டிக்கூடிய பணமும் எம்மிடமில்லை. அவர் இருந்தால் எப்படியோ கட்டித் தருவார். எம்மால் அது முடியாது" என்றாள்.

"அதனால் அன்பானவர்களே. மரணம் சொல்லி விட்டு வருவதில்லை. அது வரும்வேளையை யாராலும் அறிந்து கொள்ளவும் முடியாது. அதனால் உயிருள்ள போது நல்லவற்றைத் தாமதியாது செய்யுங்கள். உதவி பெற நினைப்பவர்களும் அவ்வுதவிகளை அவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் இன்று உயிருடன் உள்ளவர் நாளை இருப்பார் என்று சொல்ல முடியாது." என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வளமையும் தேசும் வலியும் வனப்பும்***
***இளமையும் இற்பிறப்பும் எல்லா – உளவாய்***
***மதித்தஞ்சி மாறுமஃ தின்மையால், கூற்றம்***
***குதித்துய்ந்து அறிவாரோ இல்.***

வாழும் போது உள்ள வளங்கள் எதுவும் சாவினைத் தடுக்கும் சக்தியுடையன அல்ல. அதனால் நல்ல நெறியில் வாழ்ந்து நல்லவற்றைத் தாமதியாது செய்தல் வேண்டும். “**கூற்றம் குதித்து ய்ந்து அறிவாரோ இல்”** என்பது பழமொழி.

14 “அன்பானவர்களே, பகையை வளர்த்தல் கூடாது. அத்துடன் பகையைத் தேடிக் கொள்ளவும் கூடாது. சிலர் பகையை கைகொட்டி வலிய அழைப்பார்கள். அப்படி அழைப்பது கூற்றுவனான எமனை அழைப்பதைப் போன்றதாகும்”.

“இராவணன் சீதையைக் கவர்ந்த செயல் இயமனைக் கைதட்டி அழைத்த செயலாகும். தம்மை விட வலியவரோடு பகை கொள்ளக் கூடாது. கோபத்தை நீக்காமலும், நெஞ்சத்தில் பொறாமையை வளர்த்தும் வந்தால் பகை தானாக வரும். அறிவுள்ளவர்கள், தனவந்தர்கள், மேலதிகாரிகள் ஆகியோரைத் தேவையின்றிப் பகைத்தால் நீங்காத கேடு உண்டாகும். அதனால் பகைவனை நண்பனாக்கிக் கொள்ளல் வேண்டும்.”

“முல்லைவனம் பெரும் வனாந்திரம். அதை அரசனான யானையால் நல்லமுறையில் கவனிக்க முடியவில்லை. முல்லை வனத்தின் நான்கு கரைகளிலும் புதர்க்காடுகள் இருந்தன. அக்காடுகள் வளமில்லாதவை. அதனால் அக்காடுகளில் உள்ள மிருகங்கள் முல்லைவனத்துள் நுழைந்து முல்லை வனத்திலுள்ள செழிப்பான மரங்களை கண்டபடி உண்டு அழித்தன. மிருகங்களைக் கொன்று

தின்றன. அதனால் அரசனான யானை முல்லை வனத்தை நான்காகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொரு குறுநில மன்னர்களை நியமித்திருந்தது."

"முல்லை வனத்தின் மேற்குப் பகுதி அடர்ந்த காடு. அங்கு பலவிதமான மரங்கள் செழித்து வளர்ந்திருந்தன. அந்தப் பகுதியின் குறுநில மன்னனாக எருது நியமிக்கப்பட்டிருந்தது. எருது திமிர் பிடித்தது. தான் தான் எல்லாம் அறிந்தவன் என்று ஆணவமுள்ளது".

"எருது காரணமின்றிக் குதிரையோடு முரண்படும். குதிரை சாதுவானது; பொறுமை மிக்கது. அதனால் அது எருது செய்யும் கொடுமைகளைப் பொறுத்து வந்தது. அதைக் குதிரையின் பலவீனமாகக் கருதிய எருது தொடர்ந்து பல தீமைகளைச் செய்து வந்தது. குதிரையும் மானும் சேர்ந்து எல்லையை இரவில் காவல் செய்வது வழக்கம். அன்று இரவு எருது எல்லைப் பகுதி நன்கு காவலிடப்படுகிறதா எனப் பார்க்கப் பன்றியுடன் வந்தது".

"அந்த நேரம் குதிரை காவலில் இருக்கவில்லை. அது முல்லை வனத்தின் எல்லையைத் தாண்டி முருகவனத்தின் உள்ளே சென்றிருந்தது. முருகவனத்தில் வாழும் மிருகங்கள் அடிக்கடி முல்லை வனத்துள் வரும். அவற்றைக் குதிரை துரத்தும். அன்றும் ஒரு கூட்டம் முயல்கள் முல்லை வனத்துள் வந்து விட்டன. அவற்றைக் குதிரை அந்நேரம் துரத்திச் சென்றிருந்தது".

“குதிரை காவலில் இல்லாததால் எருது, மானை குதிரை எங்கே? என்று கேட்டது. மான் நடந்ததைக் கூறியது. ஆனால் எருது அதை நம்பவில்லை”.

“மான், குதிரைக்காகப் பொய் சொல்கிறது என்று நினைத்து வெகுநேரம் குதிரை வரும் என்று காத்திருந்தது. ஆனால் குதிரை வரவில்லை. அதனால் கோபங்கொண்ட எருது அவ்விடமிருந்து சென்றது”.

“மறுநாள், குதிரை முதல் நாள் காவலுக்கு வரவில்லை என்பதற்காக அதைக் கிழக்குப் பகுதியில் சென்று வாழும்படி கட்டளையிட்டது. கிழக்குப் பகுதி வளம் குறைந்தது. அது பற்றைக் காடு. குடிப்பதற்கு நீர் கூட எடுப்பது கஷ்டம்.”

“மான் வந்து எருதிற்குச் சொன்னது; “ஐயா, குதிரை அறிவுள்ளது; தராதரம் உள்ளது; வலிமையுள்ளது; செல்வாக்குள்ளது ; அத்துடன் ஒழுக்கமும் நல்ல நடத்தையும் உள்ளது. அது உண்மையில் முல்லை வனத்துள் நுழைந்த மிருகங்களைத் துரத்திச் சென்ற போது நேரமாகி விட்டது. அதற்காக நீங்கள் குதிரைக்கு வசதி குறைந்த இடத்திற்கு இடமாற்றம் கொடுக்கக் கூடாது. அத்துடன் வலியவர்களைப் பகைப்பது இயமனைக் கைதட்டி அழைப்பதைப் போன்றது. நீங்கள் பல குற்றச் செயல்களைச் செய்கிறீர்கள். உங்களுக்கு விருப்பமானவர்கள் காவலுக்கச் செல்வதில்லை. பன்றியை நீங்கள் உங்கள் உதவியாளராக வைத்திருக்கிறீர்கள்.

பன்றி வீரமில்லாதது ; படிக்காது; விவேகம் இல்லாது. ஒழுங்காக வேலை செய்வோரை மதிக்கா விட்டாலும் அவர்களோடு பகை கொள்ளக் கூடாது" என்றது."

"எருது அதைக் கேட்கவில்லை. மான் குதிரைக்காகப் பரிந்து பேசியமையால் அது மானையும் கிழக்குப் பகுதிக்கு இடமாற்றம் செய்தது. மறு நாள் யானை, எருதை அழைத்துச் சொன்னது; நீ வயது கூடியவன் என்ற காரணத்தால் தான் மேற்குப் பகுதியின் குறுநில மன்னனாக நியமித்தேன். நீ உனக்கு வேண்டியவர்களுக்கு ஒரு சலுகையும், வேண்டாதவர்களுக்கு துன்பமும் செய்கிறாய். உன்னைப் புகழ்பவர்களும், உனக்கு இலஞ்சம் கொடுப்பவர்களும் தான் மேலானவர்கள். நேர்மையுடன் கடமை தவறாது வேலை செய்வோர் உன்னை மதிக்காத கீழோர் என எண்ணிப் பல துன்பங்களைச் செய்கிறாய். குதிரை மிகவும் ஒழுக்கமான கடமை வீரன். அது தான் வாழும் பகுதியில் வாழும் மிருகங்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பது. எனக்கு மிகவும் வேண்டியது. அதையும் உன்னையும் வெகு நாட்களாக நான் கண்காணித்து வருகிறேன். நீ செய்வதெல்லாம் தீமையான செயல். அதனால் உன்னையும் பன்றியையும் கிழக்குப் பகுதிக்குச் செல்ல உத்தரவிடுகிறேன். மேற்குப் பக்க குறுநில மன்னனாகக் குதிரையை நியமிக்கிறேன்." என்றது".

"மான், எருதின் அருகே சென்று சொன்னது ; "ஒருவன் வலிமை இல்லாவிட்டாலும் வலிமையுள்ளவனின் ஆதரவைப் பெற்றால் அவனும் வலிமையாகி விடுவான் . வலிமையானவருடன் பகை

கொள்வது இயமனைக் கைதட்டி அழைப்பதைப் போன்றது. குதிரை உனது தீய செயல்களைப் பல முறை பொறுத்தது. நீ எல்லை மீறியதால் தான் யானையிடம் சொன்னது. யானையின் நெருங்கிய நண்பன் குதிரை என்பதை குறு நில மன்னனான நீ அறியாதது வியப்பானது" என்றது".

"அதனால் அன்பானவர்களே, புகழுக்காகவும், திமிராலும் ஒருவனைப் பகைத்தால், அவனால் பகைப்பவனுக்குப் பெருங்கேடு உண்டாகும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஆற்றப் பெரியார் பகைவேண்டிக் கொள்ளற்க***
***போற்றாது கொண்டரக்கன் போரில் அகப்பட்டான்***
***நோற்ற பெருமை உடையாரும் கூற்றம்***
***புறங்கொம்மை கொட்டினார் இல்.***

பகைமையை உண்டாக்கிக் கொள்வது தீது. அது இயமனைக் கைதட்டி அழைப்பதைப் போன்றது. "**கூற்றம் புறங் கொம்பை கொட்டினார் இல்"** என்பது பழமொழி.

15 "அன்பானவர்களே, மேலானவர்கள் செய்யத்தகாத காரியம் ஒன்றைச் செய்தவரை, அவர் யாராக இருந்தாலும் அவரின் குற்றத்தை ஆராய்ந்து இரக்கம் காட்டாமல் நடுவுநிலையில் நின்று தக்க தண்டனை அளித்தல் வேண்டும். அப்படியில்லாது வெளியே காட்டிக் கொள்வதற்காகக் கடிந்து பேசிவிட்டுப் பின் பொறுத்து மன்னிப்பதால், மன்னிக்கப்பட்டவன் அஞ்சாது மேலும் மேலும் தவறுகளைச் செய்யும்

நிலையை அடைவான். ஆசைக்கு ஆளாகி முறையற்ற செயல்களைச் செய்யும் கொடியவர்கள், தண்டனைக்கு மட்டுமே அஞ்சுவர். தண்டனை இல்லாது போனால் அவர்கள் தாம் வைத்தது தான் சட்டம் என்று நினைத்துத் தலைகால் புரியாமல் செயற்படுவர். இதற்குக் காரணம் மேலானவர்கள் தான். அதனால் எத்துறையில் ஒருவர் மேலானவராக இருக்கிறாரோ அத்துறையில் அவருக்குக் கீழ்ப்பணி புரிபவர் அனைவரையும் அவர் சமமாகக் கொள்ளல் வேண்டும்.”

“நாவலூரின் கிராமத் தலைவர் பரமசிவம். அந்தக் கிராமத்தில் வாழ்ந்த குணசீலன் அடுத்தவர்களுக்குத் தெரியாது அவர்களின் பொருட்களைத் திருடுபவன். அவனும் அவனது கூட்டத்தினரும் கிராமத்தில் அடிக்கடி திருட்டுக்களில் ஈடுபட்டு வந்தனர். இரவில் விவசாய நிலங்களுட் புகுந்து அங்கு விளைந்திருக்கும் விளை பொருட்களைத் திருடி விற்பனை செய்து வந்தனர். மிகவும் இரகசியமான முறையில் திருட்டு நடப்பதால் யார் திருடுகிறார்கள் என்பதை மக்கள் அறியாதிருந்தனர். ஒரு நாள் மக்கள் அனைவரும் சேர்ந்து திருடுபவனைப் பிடிக்க ஒரு குழுவை அமைத்தனர். அக்குழுவில் ஓர் உறுப்பினராகக் குணசீலன் தெரிவு செய்யப்பட்டான். குணசீலன் பரமசிவத்தின் மீது அளவில்லாத பற்றுக் கொண்டவன் போல நடிப்பான். அவரின் வீட்டு வேலைகள் அனைத்தையும் செய்து கொடுப்பான். திருடும் வேளைகளில் அனேகமாகப் பரமசிவத்தின் வீட்டில் இருப்பான். அவனது கையாட்களே திருடுவார்கள். அத்துடன் பரமசிவத்தின் நம்பிக்கைக்குரியவனாகவும் குணசீலன் இருந்தான்.”

“குழு அமைத்துக் காவலில் ஈடுபட்டபோதும் அடிக்கடி திருட்டுக்கள் இடம் பெற்றன. அதனால் குழுவிற்குள் உள்ள ஒருவருக்குத் திருடனுடன் உறவு இருப்பதாகக் கஜேந்திரன் நினைத்தான். அதனால் அவன் தனது நண்பர்கள் சிலருடன் சேர்ந்து குழுவிற்குத் தெரியாமல் காவலில் ஈடுபட்டான். அன்று இரவு குணசீலன் கையும் மெய்யுமாகக் கஜேந்திரனால் பிடிக்கப்பட்டு ஊர்த் தலைவரான பரமசிவத்தின் முன் நிறுத்தப்பட்டான்.”

“பரம சிவம் நன்கு ஆராய்ந்தார். குணசீலன் மீது கொண்ட பாசம் அவரது கண்களை மறைத்தது. அதனால் குணசீலனை மக்களின் முன் கண்டித்தார், பின், “இனிமேல் திருடினால் பெருந்தண்டனை வழங்குவேன்” என்று கூறினார்”.

“அதன்பின்பும் திருட்டு நடைபெற்றது. பரமசிவம் தன்னைக் கண்டிக்க மாட்டார் எனத் தெரிந்து குணசீலனும் அவனது நண்பர்களும் செயற்பட்டனர். அதை உணர்ந்த கஜேந்திரனும் நண்பர்களும் ஊர்ச்சிவன் கோயிற் பொருட்களைத் திருடிச் சென்று பரமசிவத்தின் வீட்டின் பின் புறத்தே புதைத்து வைத்தனர்”.

“மறுநாட்காலை கோயிலில் திருடப்பட்டதால் ஊர் மக்கள் அல்லோல கல்லோலப்பட்டனர். அன்று காலை முதல் மறுநாட் காலை வரை குணசீலன் பரமசிவத்தின் வீட்டில் இருந்தான். ஊர்மக்கள் குணசீலன் தான் திருடியவன் என்றனர். அதைப் பரமசிவம் மறுத்தார். அப்போது கஜேந்திரன் எழுந்து சொன்னான் ; “ஊரில் நடைபெறும்

திருட்டுக்களுக்குக் குணசீலனும் அவனது நண்பர்களும் தான் காரணம் என்று நினைத்தோம். ஆனால் ஊர்த்தலைவருக்கும் திருட்டுக்கும் தொடர்பிருக்கிறது. இல்லாவிட்டால் அன்று கையும் மெய்யுமாக அகப்பட்ட குணசீலனை ஊர்மக்கள் மத்தியில் கண்டிப்பதாக நடித்து விட்டு அவனுக்குத் தண்டனை கொடாது விட்டதால், குணசீலன் ஊர்த்தலைவரின் வீட்டில் இருக்கும் போது அவனது நண்பர்கள் திருடுவார்கள். இதற்கு ஊர்த்தலைவரான பரமசிவமும் உதவி செய்கிறார். இரவு வேளையில் திருடப்பட்ட பொருட்களைப் பாதுகாப்பாகக் குணசீலன் பரமசிவத்தின் வீட்டில் வைத்திருக்கிறான்" என்றான்."

"ஊரவர்கள் திரண்டு சென்று பரமசிவத்தின் வீட்டைச் சோதனையிட்ட போது புதைத்திருந்த பொருட்கள் வெளிப்பட்டன. அதனால் பரமசிவத்தையும் குணசீலனையும் ஊரவர் காவல்துறையினரிடம் ஒப்படைத்தனர்".

"அதனால் அன்பானவர்களே, மேலானவனாக இருப்பவன் முறையற்ற வழிகளில் நடப்பவர்களை நடுநிலை நின்று தண்டிக்கா விட்டால், அவரே தண்டிக்கப்படுவார். என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்." இது முதுகில் உள்ள கட்டியைப் போல் என்றும் வேதனையைத் தரும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*உறா அ வகையது செய்தாரை வேந்தன்*
*பொறஅன் போலப் பொறுத்தால் - பொறா அமை*
*மேன்மேலும் செய்து விடுதல் அதுவன்றோ*
*கூன்மேல் எழுந்த குரு.*

மேலதிகாரியாக இருப்பவர்கள் தனக்கு வேண்டியவருக்கு நீதியில் பாரபட்சம் காட்டினால், அது அவருக்குத் தீமையை உண்டாக்கும். **“கூன் மேல் எழுந்த குரு”**

16 “அன்பானவர்களே, நெடுங்காலமாகப் பழகியவர்களென்றாலும் தீயவர்கள் பழகிய தன்மையையோ அல்லது சான்றோர் செய்த உதவிகளையோ சிறிதளவாவது நினைத்துப் பார்க்க மாட்டார்கள். அவர்கள் தமக்குத் தேவையென்று கருதிய பொருளுக்காக உதவிய சான்றோரைக் கொல்லவும் தயங்கமாட்டார்கள். ஆனால் சான்றோர் உலகமே அழியும் ஊழிக்காலம் வந்தாலும், தம் நிலையில் இருந்து வேறுபட மாட்டார்கள். ஒருவனது வாழ்க்கையை உயர்த்துவது அறம். அறநெறிப்படி வாழ்பவனின் வாழ்க்கையைக் கெடுக்க நினைப்பவர்கள் தான் கெடுவார்களே தவிர அறத்தைத் தம் உயிராகப் பேணுவோர் பாதிக்கப்பட மாட்டார்கள். பொறாமை, ஆசை, சினம், பிறரைப் புண்படுத்தல் ஆகிய நான்கையும் ஒதுக்கி வாழ்வது தான் அறவாழ்க்கை. அறவான் தீயவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று மனதாற் கூட நினைக்க மாட்டான். ஆனால் அவர்கள் மிகவும் வருந்துவார்கள். அந்த வருத்தம் கொடிய செயல்களைச் செய்த குடும்பத்தை அழித்து விடும்.”

“காரையூரில் ஜெயபாலன் என்றொருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்குப் பத்துப்பிள்ளைகள். கூலி வேலை செய்து பிழைக்கும் அவனது குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டே வாழ்ந்து வந்தது. அவனின் வீட்டுக்கருகில் தருமரத்தினம் என்றொரு பெரியவர் வசித்து வந்தார்.

அவரின் வீட்டில் தான் ஜெயபாலனின் பிள்ளைகள் எந்நேரமும் இருப்பார்கள். அவர், அவர்களுக்கு உண்ண உணவும் உடையும் கொடுப்பார். அவர்களைப் பாடசாலைக்குக் கொண்டு சென்ற விடுவார். கற்றல் உபகரணங்கள் வாங்கிக் கொடுப்பார். வீட்டிலும் பாடம் சொல்லிக் கொடுப்பார்".

"ஜெயபாலன் தீயவன். நன்றாகக் குடித்து விட்டுத் தனது பிள்ளைகளைக் கூலி வேலை செய்யவிடாது பாடசாலைக்கு ஜெயபாலன் அனுப்புவதையிட்டு அடிக்கடி அவருடன் சண்டை பிடிப்பான். ஜெயபாலனின் மூத்த மகன் அங்குசன். தீய நடத்தை உடையவன். அவனுக்கு பதினெட்டு வயது. கல்வியில் ஆர்வம் இல்லாததால் அவன் வெளிநாட்டிற்குச் செல்ல விரும்பினான். அதற்குப் பல இலட்ச ரூபா பணம் வேண்டும். ஆனால் அவர்களிடம் ஒரு சதம் கூட இல்லை. அதனால் திருடிச் செல்ல விரும்பினான். அதற்கு ஜெயபாலன் ஊக்கம் கொடுத்தான்."

"தருமரத்தினத்தின் ஒரே மகள் மாலதி. அவளுக்குத் திருமணம் நிட்சயிக்கப்பட்டு நாள்க் குறிக்கப்பட்டிருந்தது. பல இலட்ச ரூபா பணமும் தங்க நகைகளும் பெண்ணுக்குக் கொடுக்கத் தருமரத்தினம் சம்மதித்திருந்தார். திருமணத்திற்கு இரண்டு தினங்களுக்கு முன் ஜெயபாலனும் அங்குசனும் வேறும் சிலரும் கத்தி, வாள், கோடரி போன்ற ஆயுதங்களுடன் தருமரத்தினத்தின் வீட்டுள் நுழைந்து தருமரத்தினத்தைக் கட்டி வைத்து விட்டு நகைகளையும் பணத்தையும் கொள்ளையிட்டுச் சென்றனர்."

“திருமணத்தன்று மாப்பிள்ளைக்குக் கொடுக்க வேண்டிய பணத்தையம் நகைகளையும் ஊரவர்கள் கடனாகக் கொடுக் கமுன் வந்தனர். தருமரத்தினம் நல்லவர்களான ஊரவர்களிடம் கடன் வாங்க நினைத்தார். அதை மாப்பிள்ளையும் அவரது தகப்பனும் விரும்பவில்லை. ஊரவரிடம் கடன்பட வேண்டாம். நீங்கள் ஆறுதலாகத் தாருங்கள்” என்று கூறினர்”.

“வீட்டைக் கொள்ளையடித்த ஜெயபாலனும் பிள்ளைகளும் என்று தருமரத்தினத்திற்கும் ஊரவர்களுக்கும் தெரியும். அதனால் ஊரவர்கள் காவல்துறையில் புகாரிடுமாறு கோரினர். ஆனால் தருமரத்தினம் மறுத்து விட்டார்”.

”நாம் ஜெயபாலனையும் பிள்ளைகளையும் சந்தேக்கி – றோமே தவிர உறுதியாகக் கூறமுடியாது. அவர்கள் தீயவர்கள். எதையும் ஆராயாது சண்டைக்கு வருவார்கள். நான் மிகவும் கஷ்டப்பட்டே பணத்தைச் சேமித்தேன். யாரும் மனம் நோகும்படி நடந்ததில்லை. எனது வீட்டில் உண்டு உறங்கியவர்கள் நன்றியில்லாமல் நடந்துள்ளனர். தீயவர்கள் காவல்துறைக்கும் பணம் கொடுத்துத் தப்பி விடுவார்கள். ஆனால் கடவுளுக்குத் தப்ப இயலாது கடவுள் பார்த்துக் கொள்வார்” என்றார்”.

“அங்கிருந்த ஒருவன் சொன்னான்” ஈ எறும்புக்குக் கூடத் தீமை செய்யாத தருமரத்தினம் ஐயாவுக்குத் துரோகம் செய்தவர்களின் குடும்பம் நாசமாய்ப் போய் விடும். நல்லவர்கள் மனம்

வருந்தினால் தீயவர்களின் குடும்பம் நாசமாய்ப் போய் விடும்." என்றான்

"அங்குசன் திருடிய பணத்தைக் கொண்டு சென்று பட்டணத்தில் உள்ள வெளிநாட்டு முகவரிடம் கொடுத்துத் தன்னை வெளிநாட்டிற்கு அனுப்புமாறு கேட்டுக் கொண்டான். அதற்கு அந்த முகவர் பத்து நாட்களில் அனுப்பவதாக ஒப்புக் கொண்டார். அங்குசன் மிகுந்த மகிழ்வுடன் வீட்டுக்கு வந்தான்".

"பத்தாவது நாள் அங்குசன் வெளிநாட்டு முகவரிடஞ் சென்ற போது அவர் தங்கியிருந்த வீடு பூட்டப்பட்டிருந்தது. அங்கு பலர் கூடி நின்றனர். அவர்களும் அங்குசனைப் போல வெளிநாடு செல்லப் பணம் கட்டியவர்கள். பணத்தைப் பலரிடம் பெற்றுக் கொண்ட அந்த முகவர் தலைமறைவாகி விட்டான்".

"அதன் பின் அங்குசன் ஊரில் திருட ஆரம்பித்தான். ஜெயபாலன் குடியிருப்பது இன்னொருவரின் காணி. அவரும் ஊரவரும் திரண்டு வந்து ஜெயபாலன் குடியிருந்த வீட்டைக் கொழுத்தி விட்டு அவர்களை ஊரை விட்டுத் துரத்தினர். தருமரத்தினத்தின் வீட்டுக்குச் சென்ற ஜெயபாலன் தான் குடியிருக்கக் காணி தருமாறு கேட்டான். ஊரவர்கள், அவனும் பிள்ளைகளும் இவ்வூரில் இருந்தால் ஊரவர்கள் வாழ முடியாது" என்றனர். அதனால் தருமரத்தினத்தால் எதுவும் செய்ய முடியவில்லை".

“ஜெயபாலனும் பிள்ளைகளும் அவ்வூரை விட்டு வெளியேறி ஜெயபாலனின் மனைவியின் ஊருக்குச் சென்றனர். அதனால் அன்பானவர்களே, சான்றோருக்குத் தீமை செய்யாதீர்கள். சான்றோர் தீமை செய்ய மாட்டார்கள். மனம் வருந்துவார்கள். அந்த மன வருத்தம் தீமை செய்தவரது குடியை அழிக்கும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்..

***நெடுங்காலம் வந்தார் நெறியின்மை கண்டு***
***நடுங்கிப் பெரிதும் நலிவார் பெரியர்***
***அடும்பார் அணிகானற் சேர்ப்ப! கெடுமே***
***கொடும்பாடு உடையான் குடி.***

சான்றோரின் மனதை வருத்துபவர்களின் குடும்பம் வேருடன் அழிந்து விடும். **“கெடுமே கொடும்பாடு உடையான் குடி” என்பது பழமொழி.**

17 “அன்பானவர்களே, அறத்தைத் தவிர உலகில் நிலையானது எதுவும் இல்லை. செல்வம் நிலையில்லாதது; அதிகாரம் நிலையில்லாதது ; பதவி நிலையில்லாதது ; இவை எல்லாம் இருக்கும் போது ஊரில் உள்ளவர்கள் எல்லாம் வருவார்கள் ; புகழ்வார்கள் ; தமக்கு வேண்டியவற்றைப் பெற்றுச் செல்வார்கள். இவையில்லாமற் போனால் யாரும் வர மாட்டார்கள். இருந்தால் ஆயிரம் பேர் ; “இழந்தால் வருபவரோ யாரும் இல்லை” என்றொரு முதுமொழி உண்டு. பதவி அதிகாரம், செல்வம் தான் மதிக்கப்படுபவை. மனிதன் மதிக்கப்படுவதில்லை. மரம் பழுத்தால் பறவைகள் யாவும் வந்து

மகிழ்ந்திருந்து பழங்களை உண்ணும். பழம் முடிவடைந்தால் எந்தப் பறவையும் வராது. அவை வேறு பழுத்த மரங்களைத் தேடிச் சென்று விடும்”

“முருங்கைவனம் என்ற காட்டில் அரிகரன் என்ற சிங்கம் அரசனாக இருந்தது. அது அரசனாக இருந்த போது முருங்கைவனத்திலுள்ள மிருகங்களெல்லாம் தினமும் வந்து சிங்கத்தின் பெருமைகளைக் கூறிப் புகழ்ந்து பாடிச் செல்லும்”.

“காட்டிலுள்ள பாடசாலை ஒன்றிற்கு நரி ஆசிரியராக இருந்தது. திடீரென அதற்குப் பாடசாலையின் அதிபராக வேண்டும் என்ற ஆசை பிறந்தது. அதனால் அது தான் வாழும் காட்டுப் பகுதியில் ஒரு விழா எடுத்தது. சிங்கத்திற்குப் பல மாலைகள் போட்டது; பொன்னாடை போர்த்தியது. தனது குடும்பத்தினரைக் கொண்டு சிங்கத்தைப் புகழ்ந்தது ; விருந்து வைத்தது; பணம் பொருள் யாவும் கொடுத்தது. சிங்கத்திற்கு எல்லையில்லாத மகிழ்ச்சி உண்டானது. அதனால் அப்பாடசாலையில் அதிபராக இருந்த குதிரையைச் சிறிய பாடசாலை ஒன்றிற்கு இடம்மாற்றி விட்டு நரியை அப்பாடசாலைக்கு அதிபராக்கியது”.

“குதிரை பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினரை அழைத்துக் கொண்டு சிங்கத்திடம் சென்று தனக்கு நேர்ந்த அவலத்தைக் கூறியது. அதைக் கேட்டுக் கோபங் கொண்ட சிங்கம் சொன்னது ; “உனக்குக் கற்பிக்கத் தெரியாது. ஆசிரியர்களை

நிர்வகிக்கத் தெரியாது. பாடசாலையின் கல்வித் தரம் குறைந்து விட்டது. அதனால் தான் இடம் மாற்றினேன். கண்டபடி நீ கதைத்தால் தண்ணி இல்லாக் காட்டுக்குத்தான் போவாய்" என்றது."

"குதிரை எதுவும் பேசத் தோன்றாமல் துக்கத்துடன் வந்தது. அதைப் பார்த்த முயல் சொன்னது ; "நண்பா, உனக்குக் கல்விப் புலத்தைப் பற்றித் தெரியாதா? காட்டில் உள்ள பெரிய பெரிய பாடசாலைகளிலெல்லாம் அதிபர் தரம் இல்லாத சிங்கத்தின் உறவினர்களும் நண்பர்களும் தான் இருக்கிறார்கள். சிறிய பாடசாலைகளுக்குத் தான் தரமுள்ள அதிபர் தேடுவினை. உன்னால் முடிந்தால் சிங்கத்திற்கு வேண்டியவரக்ளைப் பிடித்து ஏதாவது கொடு. எமது பாடசாலையில் அறுநூறு மிருகங்களின் குட்டிகள் படிக்கின்றன. நமக்கெல்லாம் வழிகாட்டி, எம்மைப் பாதுகாத்த பெரியவர் ஒருவர் நிறுவிய பாடசாலை அது. அப்பெரியவரைப் பற்றி மேடைகளில் பிரமாதமாகப் பேசுவார்கள். போட்டிகள் வைப்பார்கள். குரு பூசை கொண்டாடுவார்கள். ஆனால் அப்பெரியவர் கட்டிய கட்டிடத்தைத் திருத்தித் தர மாட்டார்கள். கட்டிடடம் தேவையான பாடசாலைகளுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுக்க மாட்டார்கள். ஐம்பது நூறு பிள்ளைகள் கற்கும்கட்டடிடங்கள் உள்ள பாடசாலைகளுக்குக் கட்டிடடம் கட்டிக் கொடுப்பார்கள். இதுக்கெல்லாம் தரகராக நரி செயற்பட்டு வந்தது. நரியால் சிங்கத்திற்கு நல்ல வருமானம். அதற்காகத்தான் சிங்கம் நல்ல சேவை செய்த உன்னை இடம் மாற்றி விட்டு அந்த இடத்தை நரிக்குக் கொடுத்தது. அதை அறியாமல் துன்பப்ட்டு என்ன பிரயோசனம்?" என்றது".

“அடுத்த வாரம் சிங்கத்தின் மாமனார் இறந்து விட்டார். அந்தக் காட்டு மிருகங்கள் மட்டுமன்றி அயற் காட்டு மிருகங்களும் முருங்கைவனத்தில் கூடின. பிரேதம் எடுக்கு முன் இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அதற்கு யானை தலைமை தாங்கியது. இறந்தவரைப் பற்றிப் பேசாது ஆட்சியில் உள்ள சிங்கத்தின் வீரதீரப் பிரதாபங்களையே எல்லா மிருகங்களும் பேசின. காட்டில் முப்பத்தொரு தினங்கள் துக்கம் அனுட்டிக்கப்பட்டது. காட்டில் உள்ள பாடசாலைகளிலும் முன் பள்ளிகளிலும் சனசமூக நிலையங்களிலும் இரங்கற் கூட்டங்கள் நடைபெற்றன. துக்க தினம் போலல்லாது மிகவும் கோலாகலமாக அக்கூட்டங்கள் நடைபெற்றன. கூட்டத்தைப் பற்றி மற்றைய மிருகங்கள் சிங்கத்துடன் கூடி ஆராய்ந்து மகிழ்ந்தன. “இப்படியான கூட்டம் இதுவரை நடந்ததில்லை” என்று நரி சொன்னது.”

“சில வருடங்கள் செல்லச் சிங்கத்திற்கு வயது வந்துவிட்டது. அது தளர்வடைந்தமையால் மிருகங்களெல்லாம் ஒன்று கூடி யானையை அரசனாக்கின. யானை அரசனாகிச் சில மாதங்களில் முன்னைய அரசனான சிங்கத்தின் மனைவி இறந்து விட்டது. காடெங்கும் அச்செய்தி பரவிய போதும் மிருகங்கள் எவையும் வரவில்லை. சிங்கத்தின் உறவினர் மட்டும் வந்து சென்றனர். சிங்கத்தின் மைத்துனன் சொன்னது ; “அரிகரன், பதவியிலிருந்த காலத்தில் உறவினர்களுக்கு எதுவும் செய்யவில்லை. பணம் பொருளை வாங்கிக் கொண்டு மற்றைய மிருகங்களுக்கே உதவி செய்தது. எனக்கு இரத்த உருத்து அதனால் வந்தேன்” என்றது”.

"பிரேதம் எடுக்கும் நேரத்தில் சிலர் வந்தனர். நரி வரவே இல்லை. குதிரை தான் பிரேதத்தைத் தூக்கிப் பாடையில் வைத்துச் சுமந்து சுடலை வரை சென்றது. சுடலைக்குச் சென்றவர்கள் சிங்கத்தின் வீட்டுக்கு வராமற் சென்று விட்டனர். சிங்கத்திற்குச் சரியான துக்கம். பதவியில் இருக்கும் போது எவ்வளவு பேர் வந்து உதவி பெற்றார்கள். இப்போ துக்கம் விசாரிக்கவே யாரும் வரவில்லை. நரிக்கு நான் எவ்வளவு உதவிகள் செய்திருப்பேன். அது முயலுக்கு 'உவர் சும்மாவோ உதவி செய்தவர். இலஞ்சம் வாங்கிக் கொண்டு தானே உதவி செய்தவர், இலஞ்சம் வாங்கிய பின் உதவி என்று எப்படிச் சொல்வது? கடையில் பணம் கொடுத்து வாங்கும் பொருளைக் கடைக்காரன் தானம் செய்வதாகச் சொல்லலாமா..?" என்று சொன்னதாம். ஆகையால் அன்பானவர்களே, நீங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்யும் போது எதையும் கேட்டுப் பெறாதீர்கள். அவர்கள் திரும்பத் தரவேண்டும் என்றும் எதிர்பாராதீர்கள். மரம் பழுத்தால் தான் பறவைகள் வரும். இல்லாவிட்டால் வராது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***முட்டின்று ஒருவர் உடைய பொழுதின்கண்***
***அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே***
***கட்டலர்தார் மார்ப! கலியூழிக் காலத்துக்***
***கெட்டார்க்கு நட்டாரோ இல்.***

ஒருவர் வளமாக இருக்கும் போது வந்து கூடுவோர் பலர். அவர் வளமில்லாத போது வருவோர் மிகச் சிலரே. "**கெட்டார்க்கு நட்டாரோ இல்" என்பது பழமொழி.**

**18** “அன்பானவர்களே, ஒருவர் இன்னொருவருடன் நட்புக் கொண்டிருந்தால், அந்த நட்பை இருவரும் நல்ல முறையில் காத்துக் கொள்ளல் வேண்டும். நட்பென்பது ஒருவருக்கொருவர் சிரித்து மகிழ்வதற்காக ஏற்பட்டதன்று. நண்பர் நிலைதவறிச் செல்லும் போது கண்டித்து திருத்துவதற்காகவும், நண்பர்களுக்கிடையே துன்ப மேற்பட்டால் அதைத் தாங்கி உதவவும், அதில் பங்கு கொண்டு அதைத்தமது துன்பமாகக் கருதி உடனிருந்து துன்பப்படவும் ஏற்படுத்தப்படுவது தான் நட்பு, அன்பின் மிகுதியால் நலம் செய்வார் போல நடித்துத் தனது காரியங்கள் நிறை வேற்றப்பட்டதும் அவரைத் தூற்றுபவர்தான் அனேகர். ஒருவரோடு நட்பாக இருந்துவிட்டுப் பின் அவர்கெடுதிசெய்தாலும் அவரைத் தூற்றக்கூடாது. அப்படியில்லாது தூற்றுபவர்கள் தான் அனேகர். ஒருவரோடு நட்பாக இருந்து விட்டுப் பின் அவர் கெடுதி செய்தாலும் அவரைத் தூற்றுபவரக இருந்தால், இன்னொருவர் அவருடன் நட்புக் கொள்ளக்கூடாது. ஏனெனில் அவர் மற்றவரைத் தூற்றுவது போலவே காரியம் முடிவடைந்ததும் உங்களையும் தூற்றுவார்”

“நாவலூரிலே நடராசசிவம் என்றொரு ஒழுக்கசீலர் இருந்தார். அவர் வறியவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்வார். பொதுத்தொண்டுகள் செய்வார். கோயில்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்களுக்குப்பண உதவி செய்வார். ஆனால் எல்லோருடனும் கலகலப்பாக பேச மாட்டார். மிகமிக நல்லவரான அவருடன் நெருங்கிப் பழக ஊரில் உள்ள பலர் முயன்றும் முடியவில்லை. யார் கதைத்தாலும் அவர் கதைப்பார். யார் கேட்டாலும் அவர் தன்னாலியன்றதைக்

கொடுப்பார். அதனால் ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் அவரை மதித்தனர். அவருடன் நட்பு கொள்வது தமக்குப் பெருமை என்று நினைத்தனர்.அவர் விழாக்களுக்கு நிதி கொடுப்பார். ஆனால் விழாக்களுக்குச் செல்லமாட்டார். விழாக்களுக்கு விருந்தினாராக அழைக்க ஊரில் உள்ள பிரமுகர்கள் பலர் விரும்பிக் கேட்டபோதும் அவர் மறுத்து விடுவர். இது அவ்வூர் வாசிகளுக்குப் பெரும் குழப்பமாக இருந்தது".

"ஒரு நாள் அவ்வூரின் பெரும் அறிஞரான சிவசிதம்பரம் என்பவர் நடராசசிவத்தின் வீட்டுக்குச் சென்றார். மற்றவர்கள் வந்தால் முற்றத்தில் நிற்க வைத்தே வந்த பிரச்சினை பற்றிக் கேட்டுத் தெரிந்து அதற்கான பரிகாரத்தைச் செய்வார். சிவசிதம்பரம் கற்றவர். பெரும் பதவி வகிப்பவர் என்ற காரணத்தால் உள்ளே அழைத்துச் சென்று ஆசனத்தில் அமர்த்தினார்"

"சிவசிதம்பரம் ஆசனத்தில் அமர்ந்த பின் சொன்னார்; "ஐயா, நான் எந்தத் தேவையும் கருதி வரவில்லை. தங்களைப் பற்றிய சில தகவல்களை அறிந்து கொள்ளவே வந்தேன். நீங்கள் ஒழுக்கமானவர். தருமவான். கேட்டவர்க்குக் கேட்டதெல்லாம் கொடுக்கிறீர்கள். ஆனால் யாருக்கும் சொல்வதில்லை. ஊரில் உள்ள நடராசா பத்து ரூபா கொடுத்து விட்டு நூறுரூபா கொடுத்ததாகச் சொல்வான். அவன் ஒரு சுயநலக்காரன். கொடுத்த பணத்திற்குப் பிரதியுபகாரமாகத் தன்னைப் புகழ விழா எடுக்கும்படி சொல்வான். நடராசா தன்னைப் புகழ்பவர்களுக்கு அள்ளிக்கொடுப்பான். நவரத்தினம் கொடுப்பதால்

ஏதாவது நன்மை இருக்கிறதா என்று பார்த்துத்தான் கொடுப்பான். இவர்களெல்லாம் சுயநலவாதிகள். வேறு இடங்களில் அநீதியான முறையில் பணத்தைப் பெற்றுத் தான தர்மம் செய்கிறார்கள். நவரத்தினம் தான் செய்யும் தீமைகளை மறைக்கத்தான் பொது விஷயங்களுக்குப் பணம் கொடுக்கிறார். பொதுவாகப் பலர் தாம் செய்யும் பாவங்களுக்குப் பிராயச்சித்தம் பெறவே தீயவழியில் தேடிய செல்வத்தைத் தான தருமம் செய்து புண்ணியம் தேட முயல்கின்றனர். ஆனால் நீங்கள் கொடுப்பதைப் பிறர் அறிவதில்லை. அத்துடன் எல்லோருடனும் நட்புடன் பழகுவதில்லை. இது ஏன்?"

"கேள்வியையும் கேட்டுப்பதிலையும் சொல்லிவிட்டீர்கள்"என்று சிரித்தார் நடராசசிவம் , சிவசிதம்பரம் விளங்காது தடுமாறுவதைக்கண்டு சொன்னார்; "ஐயா நட்பென்பது, நண்பர்கள் உரிமையோடு செய்யும் தவறுகளைப் பெரிதுபடுத்தாது அதைச்சுட்டிக் காட்டி உணரச் செய்வதாகும் அதைவிட்டுவிட்டு அவரின் குறைபாடுகளை மற்றவர்களுக்குச் சொல்வதல்ல. நாம் சிறந்தவரென்று நண்பராகக் கொண்டிருக்கும் ஒருவர் இன்னெருவரைப் பற்றி கூடாதவற்றை கூறினால், அவரை எப்படி நண்பராகக் கொள்ள முடியும்? அவர் என்னைப் பற்றியும் தவறாகக் கூறுவார். அதனால் தான் நான் கண்டவர்களோடும் நட்புக் கொள்வதில்லை. நீங்கள் வந்த நேரம் முதல் பலரைப் பற்றிக் குறை கூறினீர்கள் இதனால் என்ன இலாபம்? சம்பந்தப்பட்டவருக்குத் தவறைச் சுட்டிக்காட்டித் திருத்துங்கள். அது தான் உண்மையான நட்பு என்றார். பிறரைப் பற்றி உங்களிடம் குறை கூறுபவன், உங்களைப் பற்றியும் பிறரிடம் குறையாகச் சொல்வான்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*தெற்ற ஒருவரைத் தீதுரை கண்டக்கால்*
*இற்றே அவரைத் தெளியற்க -மற்றவர்*
*யாவரே யாயினும் நன்கொழுகார் கைக்குமே*
*தேவரே தின்னினும் வேம்பு*

பிறரைப்பற்றிக் குறையாகக் கதைப்பவர்களுடன் நல்லவர்கள் நட்புக்கொள்ள மாட்டார்.” **கைக்குமே தேவரே திண்னினும் வேம்பு”** என்பது பழமொழி.

19 “அன்பானவர்களே, உங்களிடம் யாராவது வந்து எதையாவது இரந்து கேட்டால் கொடுத்து விடுங்கள். அதனால் புண்ணியம் வருமென்றோ அல்லது இரந்து உதவி கேட்டவர் உங்களுக்கு உதவ வேண்டுமென்றோ நினைக்காதீர்கள். இரப்பவர்கள் பெரும்பாலும் நன்றியுடையவர்களாக இருப்பதில்லை. அவர்கள் தமது தேவை முடிந்ததும் செய்த உதவிகளையெல்லாம் மறந்து விடுவார்கள். உங்களிற் பார்க்க இன்னொருவர் கூடக் கொடுப்பாரேயானால், அவர்கள் உங்களைத்தாழ்த்தித் தாம் இரக்கப்போபவரை உயர்த்திச் சொல்வார்கள். இரப்பவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் இரந்து கொண்டே இருப்பார்கள். கொடுப்பவர்கள் யாரும் கொடுப்பதால் ஏழையாகி வருந்துவதில்லை என்பதை நினைவில் வைத்திருங்கள்”.

“நாவலூரிலே நடனபாதம் என்றொரு பெரும் விவசாயி இருந்தார். அவர் விதைக்காகச் சகல தானியங்களையும் அளவுக்கதிகமாகச் சேமித்து வைத்திருப்பார். ஏழை எளியவர்கள் தாம் விதைப்பதற்கெனச் சேமித்து வைத்திருக்கும் தானியங்களுக்குத்

தட்டுப்பாடு ஏற்படும் போது விற்று விடுவார்கள். அல்லது உண்டு விடுவார்கள். அதனால் நடனபாதத்திடம் விதைக்கும் நேரம் வந்து கையேந்துவார்கள்".

"அவ்வூரில் வாழ்ந்த ஆறுமுகம் பெருங் குடிகாரன். அவன் நன்றாகக் குடித்து விட்டு மேலும்குடிப்பதற்காக நடனபாதத்திடம் வந்து பணம் கேட்பான். அவர் கொடுக்க மாட்டார். ஆனால் ஆறுமுகத்தின் மனைவி பிள்ளைகளுக்கு உதவி செய்வார். அந்த ஊரில் சிவகுரு என்றொருவன் வாழ்ந்து வந்தான். அவன் தீயவர்களுக்குத் தான் உதவி செய்வான். உதவி செய்து விட்டு அவ்வுதவிக்குப் பிரதியுபகாரமாக உதவி பெறுவர்களைத் தீய செயல் களைச்செய்யுமாறு தூண்டுவான்".

"ஆறுமுகம் ஒரு நாள் நன்றாகக் குடித்துவிட்டுத் தனது நண்பனையும் அழைத்துக்கொண்டு சிவகுருவின் வீட்டுக்குச் சென்று பணம் கேட்டான். சிவகுரு கொடுத்து விட்டு நடனபாதத்தின் உழவுமாடுகளைக் களவாக அவிழ்த்து வரும்படி கூறினான். ஆறுமுகமும் நண்பனும் நடனபாதத்தின் உழவு மாடுகளை திருடிச் சென்று சிவகுருவிடம் கொடுத்தனர். அதைச் சிவகுரு அயலூருக்குக் கொண்டு சென்று விற்றான்".

"அந்த வருடம் மழை பெய்யாததால் அந்தக் கிராமத்தில் பஞ்சம் நிலவியது. அதனால் பெரும்பாலான விவசாயிகள் விதைப்பதற்கென வைத்திருந்த நெல்லை உணவுக்குப் பயன் படுத்திவிட்டனர். மழைபெய்தது. பலர் வந்து நடனபாதத்திடம் விதை

நெல்லைப் பெற்றுச் சென்றனர். ஆறுமுகம் தனது மனைவியுடன் விதை நெல் பெற வந்தான். அவன் தனியே வந்தால் நடனபாதம் கொடுக்கமாட்டார். கொடுத்தால் அவன் அதைக் கொண்டு சென்று விற்றுவிட்டுக் குடித்து விடுவான். ஆறுமுகத்திற்குத் தேவையான விதை நெல்லை நடனபாதம் கொடுத்தார்".

"அதைப் பார்த்த அங்கிருந்த ஒருவர் சொன்னார்"; ஐயா இவனும் இவனது நண்பனும் சேர்ந்து தான் உங்களது உழவு மாடுகளைத் திருடினார்கள். அத்துடன் இவன் சிவகுருவோடு சேர்த்து குடித்துவிட்டுச் சந்திகளிலும் தெருக்களிலும் மிகவும் கேவலமாக உங்களை ஏசுவான். அப்படிப்பட்டவனுக்கும் கொடுக்கிறீர்கள்" என்றார்".

"காகம் திட்டி மாடு சாகாது. யார் எப்படித் திட்டினாலும் தர்மமாக வாழ்வோர் நலிவடைய மாட்டார்கள். இரப்பவன் எதை எதையோவெல்லாம் சொல்லி இரப்பான். இரப்பது கிடைத்ததும் அவன் இன்னோர் இடத்திற்குச் செல்வான். இது உலக இயல்பு. கொடுத்துக் கெட்டவன் யாரும் இல்லை. ஊற்றுள்ள கிணறு போலத் தர்மவானின் செல்வம் பெருகும்" என்றார் நடனபாதம்".

"ஆகையால், அன்பானவர்களே, நீங்கள் கொடுத்து உதவியவர் உங்களைப் பற்றிக் கேவலமாகப் பேசினாலும் கலக்க மடையாதீர்கள். திட்டுபவர்களுக்கே திட்டுச் சென்று சேரும்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*அடுத்தொன் றிரந்தார்க்கொன் றீந்தாரைக் கொண்டார்*
*படுத்தேழை யாமென்று போகினும் போக*
*அடுத்தேறல் ஐம்பாலாய் !யாவர்க்கே யாயினும்*
*கொடுத்தேழை யாயினர் இல்.*

வாங்கிச் சென்றவர் பழித்துச் சொன்னாலும், கொடுத்தவர் ஏழையாக மாட்டார். '**கொடுத் தேழையாயினார் இல்**' என்பது பழமொழி.

20 "அன்பானவர்களே, கொடையைக் கொடுப்பவர், தனது தகுதிக்கேற்றவாறு கொடுப்பர். வாங்குபவருக்குத் தகுதியில்லை. வாங்குபவர்களின் தகுதிக்கேற்பக் கொடுப்பவரால் கொடுக்க முடியாது. பெரும் புலவரான கோதுமன் தனது குறையைச் சேரமானின் அரச சபையில் பாடலில் வெளிப்படுத்த சேரமான் அவனின் குறையைத் தீர்க்கப் பெரும் யாகமொன்றைச் செய்தான். அது போலக் கொடுப்பவர்கள் தமது தகுதிக்கேற்பவே கொடுப்பார்கள் அதையிட்டு யாரும் மனங்கலங்கலாகாது".

"புலியூரில் வாழ்ந்த அம்பலவாணர் என்பவர் பெரும் புலவர். அவர் அரச சபைகளுக்குச்சென்று அரசர்களின் வீரதீரப் பிரதாபங்களைப் புகழ்ந்து பாடிப்பரிசு பெறுவர். அவர் தனது மூத்தமகளான கஜனிக்குத் திருமணம் செய்யவிரும்பினார். அதனால் வரன் பார்த்தார். அவ்வூரில் உள்ள பெரிய தனவந்தர் ஒருவன் தனது மகனிற்குப்புலவரின் மகளைத் திருமணம் செய்து வைக்கவிரும்பிப் புலவரிடம் சம்மதம் கேட்டார். புலவர் சம்மதித்தார். இருப்பினும்

மாப்பிள்ளையின் தகுதிக்கேற்பப் பொருள் கொடுக்க விரும்பிய அம்பலவாணர், முதலில் புலியூர் மன்னனைச் சந்தித்துத் தனது மகளின் திருமணத்திற்கு வருகை தருமாறு அழைத்தார்".

"மன்னன் மனம் மகிழ்ந்து ஆயிரம் பொற்காசுகள் கொடுத்தான். அதைப் பெற்றுக் கொண்ட புலவர் உறையூர் மன்னனிடம் சென்று தனது மகளின் திருமனத்தைப் பற்றிச் சொன்னார். மன்னன் மணமக்களை வாழ்த்தி விட்டு ஐந்நூறு பொற்காசுகள் கொடுத்தான். அதன் பின் புலவர் நரையூர் மன்னனிடம் சென்று தனது மகளின் திருமணத்தைப் பற்றிச் சொன்னார். அவன் ஆயிரத்து ஐந்நூறு பொற்காசுகள் கொடுத்தான். புலவர் மூன்று மன்னர்களைப் பற்றியும் அறிந்தவர்கள். அது போல அரசர்களும் புலவரைப் பற்றி அறிந்தவர்கள். நாரையூர் மன்னன் பேரரசன். உறையூர் மன்னன் நாரையூர் மன்னனின் சிற்றரசன். புலியூர் மன்னன் பெரிதாகக் கொடாதவன். அதனால் புலவர் மகிழ்வுடன் நாடு திரும்பித் தனது மகளின் திருமணத்தை மிகவும் விமர்சையாகச் செய்து முடித்தார்".

"திருமண நாளன்று திருமணத்திற்கு வந்த வணிகர்களும், செல்வந்தர்களும், குடிமக்களும் மண மக்களுக்குப் பொருள்களை அன்பளிப்பாகக் கொடுத்து வாழ்த்திச் சென்றனர். புலவர் செல்வாக்குள்ளவர்; மக்கள் அனைவர் மீதும் அன்பு கொண்டவர் . ஏழை ஒருவன் வாழைப்பழங்களை கொண்டு வந்து கொடுத்தான்"

"திருமணவிழா முடிந்த பின்பு மணமக்கள் பரிசுப் பொருட்களைப் பிரித்துப் பார்த்தனர். தனவந்தர்கள் சிலர் பெறுமதியான பொருட்களைக் கொடுக்கவில்லை. அதைப் புலவரின் மகளான கஜனி சுட்டிக்காட்டிக் கேலி செய்து சிரித்தாள்".

"அதற்குப்புலவர் சொன்னார்; "மகளே, கொடை கொடுப்பவரின் தகுதியை ஒட்டியதே தவிர வாங்குபவனின் தகுதியை ஒட்டியதல்ல. ஒவ்வொருவரும் தத்தமது தகுதிக்கேற்பவே கொடுத்துள்ளனர். ஓர் ஏழை விவசாயி வாழைப்பழங்களைக் கொண்டு வந்து தந்தான். அது தான் அவன் கொடுக்கக் கூடிய பொருள். தகுதிக்கு மிஞ்சி ஆடம்பரத்திற்காகவும், பெருமைக்காகவும், புகழுக்காகவும் கடன்பட்டுக்கொடுத்து விட்டுப் பின் கடனை அடைக்க முடியாது திண்டாடுதல் வேண்டும். கொடுப்பவன் தனது தகுதிக்கு மேற்கொடுத்தால் அவன் எதிர் காலத்தில் கஷ்டப்படுவான், அவமானப்படுவான்"

"ஆகையால் அன்பானவர்களே, எதையும் உங்கள் தகுதிக்கு மிஞ்சிக் கொடுக்காதீர்கள்; செய்யாதீர்கள் " என்றார் நமசிவாயம் சுவாமிகள்

*தொடுத்த பெரும்புலவன் சொற்குறை தீர*
*அடுத்தர என்றாற்கு வாழியரோ என்றான்:*
*தொடுத்தின்னர் என்னலோ வேண்டா, கொடுப்பவர்*
*தாமறிவார் தம்சீர் அளவு.*

கொடை, கொடுப்பவனின் தகுதியை ஒட்டியதே தவிர வாங்குபவனின் தகுதியை ஒட்டியதல்ல. **“கொடுப்பவர் தாமறிவார் தம் சீர் அளவு”** என்பது பழமொழி

21 “அன்பானவர்களே, ஒருவன் ஒரு பொருளை உங்களுக்குக் கடனாகத் தந்தால், அப்பொருளை உரிய தவணையில் கொடுத்து விடுவது தான் சிறப்பு. சில வேளைகளில் கடன் தந்தவனுக்கு அவசர தேவை ஏற்படும். அப்படி ஏற்பட்டு அவன் வந்து தான் தந்த பொருளைக் கேட்டால், அதை அவனிடம் மனங்கோணாமல் கொடுப்பதே முறையாகும். அதைவிட்டு விட்டு அவனது மனம் நோகும்படி விளையாட்டாகக் கூடக் கொடுஞ் சொற்களைக் கூறக் கூடாது. அதனால் கடன் கொடுத்தவரும், வாங்கியவரும் தீராத பகையாளியாவர்”

“ உமையாள் புரத்தில் தனசேகரன் என்றொருவர் இருந்தார். அவர் வசதியானவர். அதனால், நண்பர்கள், இனத்தவர்கள், அயலவர்களுக்குப் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டால் கொடுத்து உதவுவார். அவ்வூரில் நாகராசா என்றொருவன் இருந்தான். அவன் வட்டிக்குப் பணம் கொடுப்பவன். யாராவது வட்டிக்குப் பணம் கேட்டால் தன்னிடமில்லாவிட்டாலும் ஊரில் உள்ளவர்களிடம் வாங்கிக் கொடுத்து விடுவான். பின்பு தனக்குப் பணம் வந்ததும் திருப்பிக் கொடுத்து விடுவான். அதுவும் இரண்டொரு நாளிற் கொடுத்து விடுவான். கூடுதலான நாட்களானால் வாங்கிய பணத்திற்கு வட்டி கொடுக்க வேண்டும் என்பதற்காக உடனே வட்டியில்லாமல் கொடுத்து விடுவான்”.

“அவன் அடிக்கடி கடன்படுவது தனசேகரனிடத்தில். தனசேகரம் பணத்தைத் திருப்பிக் கொடுக்காவிட்டாலும் கேட்கமாட்டார். அத்துடன் வட்டிப் பணமும் பெறமாட்டார். அதனால் அவன் தனசேகரனிடம் வாங்கிய பணத்தைக் காலதாமதம் செய்தே கொடுப்பான்” .

“அன்று தனசேகரனுக்குப் பெருந்தொகையாகப் பணம் தேவைப்பட்டது. அவரின் தங்கையின் மகளுக்குத் திருமணம் முற்றாகியிருந்தமையால் அவரது தங்கை அவரிடம் பணம் கேட்டிருந்தாள்”.

“ஒரு மாதத்திற்கு முன் ஓரிரு நாட்களில் பணத்தைத் திருப்பித்தருவதாகக் கூறிப் பணத்தைப் பெற்றுச் சென்ற நாகராசா, ஒருமாதம் கழித்தும் பணத்தைத் திருப்பிக் கொடுக்காததால் தனசேகரன் நாகராசாவின் வீட்டுக்குச் சென்றார். அவர் சென்றபோது நாகராசா வீட்டில் இருக்கவில்லை. அதனால் அவர் தான் வந்த விஷயத்தை நாகராசாவின் மனைவியிடம் கூறி விட்டுவந்தார்”.

“இரண்டு தினங்கள் கழிந்தும் நாகராசா பணத்தைக் கொடுக்கவும் இல்லை வந்து சந்திக்கவும் இல்லை. அதனால் தனசேகரன் மீண்டும் நாகராசாவின் வீட்டுக்குச் சென்றார். நாகராசா அவரை அன்புடன் வரஏற்று ஆசனத்தில் இருத்திவிட்டுச் சென்னான்; “இப்போ எனக்குப் பணத் தட்டுப்பாடு ஒருமாதம் கழியத் தருகிறேன் உங்களிடம் இல்லாத பணமா......? பார்த்துக் கொடுங்கள். நான் வட்டி தருகிறேன்” என்றான்”.

“தனசேகரனுக்குக் கோபம் வந்தது ஏசிவிட்டு வந்து விட்டார். தங்கைக்கு அவர் வட்டிக்குப் பணம் பெற்றுக் கொடுத்தார். ஒரு வார காலத்தில் நாகராசா பணத்தைக் கொண்டு வந்து கொடுத்தான்”

“நாகராசாவின் மகளுக்குத் திருமணம் பேசப்பட்டது. மாப்பிளை பகுதியினர் காசாகப் பதினைந்து இலட்சம் ரூபா கேட்டனர். நாகராசா பணத்தை வட்டிக்குக் கொடுத்ததால், அவனிடம் கையில் காசு இருக்கவில்லை; திருமணத்தை நிட்சயம் செய்யுங்கள், இரண்டு மாதத்தில் பணத்தைத் தந்து விடுகிறேன்” என்றான் நாகராசா. மாப்பிளையின் தந்தை அதற்குச் சம்மதிக்கவில்லை; “பேச்சு மாறுபவன் நீ. அதனால் காசைத் தந்தபின்பு தான் திருமணம்” என்றார் மாப்பிளையின் தந்தை”.

“நாகராசா, தனசேகரனிடம் வந்து தனது நிலைமையைக் கூறிப் பணம் கேட்டு இரந்தான். அப்போது தனசேகரன் சொன்னார் ”என்னிடம் இருந்த காசு யாருக்காவது பயன்படட்டும் என்று தான் உனக்குத் தந்தேன. நீ என்னை நடத்தியவிதம் பிழை. அதனால் எனது தங்கையிடம் நான் அவமானப்பட்டேன். கொடுத்த பணத்தைக் கொடுத்தவன் கேட்டதும் கொடுத்து விடவேண்டும்.அதைவிட்டு விட்டு விளையாட்டாகக்கூடக் குதர்க்கம் பேசினால் கொடுத்தவனுக்குக் கோபம் வரும். என்னிடம் பணம் உள்ளது. ஆனால் தரமாட்டேன்” என்றார் தனசேகரன்”.

“நாகராசா பல முறை கெஞ்சியும் தனசேகரன் பணம் கொடுக்கவில்லை. அதனால் நாகராசாவின் மகளின் திருமணம் நடைபெறவில்லை. ஆகையால் அன்பானவர்களே, கடன் தந்தவன். கேட்டால், எப்பாடுப்பட்டாலும் கொடுப்பது தான் நன்மைகளைத் தரும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்

***கடங்கொண்ட பொருளைக் கைவிட்டிருப்பார்***
***இடங் கொண்டு தம்மினே என்றால் - தொடங்கிப்***
***பகைமேற்கொண் டார்போலக், கொண்டார்வெகுடல்***
***நகைமேலும் கைப்பாய் விடும்.***

“வாங்கிய பொருளைத்தந்தவர் கேட்டதும் கொடுக்காமல் விடுவது பெருந்தவறு. அது அவமானத்தையும் துன்பத்தையும் தரும் **“கொண்டார் வெகுடல் நகை மேலும் கைப்பாய் விடும்**” என்பது பழமொழி.

22

“அன்பானவர்களே, உள்ளத்தில் எழும் ஆசைகளை அடக்கி ஐம்புலன்களையும் அவை செல்லும் போக்கிற்குச் செல்லவிடாமல் தடுத்து, தம்வாழ்க்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தனக்கும் தன்குடும்பத்தினருக்கும், தனது உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்களுக்கும் பயன்பட வாழ்பவர்களே உண்மையான மனிதர்களாவர். அப்படிச்செய்யாது தீமைகளைத் தமது உடலின்பத்திற்காகச் செய்வோர், விதை நெல்லால் உண்டாகும் பயன்களை அறியாது அதைத் தீயிலிட்டு அவித்து உண்பவர்களாவர். பயனை எதிர்பாராது பிறருக்குதவி செய்வதே மனித உடலைப்

பெற்றதன் பயனாகும். அதை உணராத பலர் வாழ்க்கையின் பயனை உணராது தமக்கும் தீமை செய்து பிறருக்கும் தீமை செய்து வாழ்கிறார்கள்"

"நாவலூரில் நல்லைக்குமரன் என்றொருவன் வாழ்ந்து வந்தான். அவன் நல்ல செயல்கள் எதையும் செய்வதில்லை. மனைவி கூலி வேலை செய்து உழைக்கும் பணத்தைப் பறித்துச் சென்று குடித்து விடுவான். தீபாவளி, வருடப் பிறப்புக் காலங்களில் பிள்ளைகளுக்கு மனைவி கூலிவேலை செய்து வாங்கிப் போடும் புத்தாடைகளைக் கூடக் கழற்றிச் சென்று விற்றுவிட்டுக் குடிப்பான். இதனால் அவனது குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டது. யாராவது அவர்களது நிலையைக் கண்டு இரங்கி உதவினாலும் அதை அவன் பலாத்காரமாகப் பறித்துச் சென்று அரைவிலை, கால்விலைக்கு விற்று விட்டுக் குடித்து விடுவான்"

" அவனது நண்பன் ஒருவன் வெளிநாட்டிலிருந்து வந்திருந் தான். அவனுக்கு உதவி செய்தால், அவன் குடித்து அழித்து விடுவான் என்பதற்காக அவனது பிள்ளைகளின் பெயரில் வங்கிக் கணக்குகளைத் திறத்து பணத்தை அவர்களின் பெயரில் வைப்பிலிட்டான் நல்லைக்குமரனுக்கு அவ்வப்போதையச் செலவுக்குப்பணம் கொடுப்பான். ஒரு நாள் இருவரும் பட்டணத்திற்குச் சென்றனர். அங்கு அதிஷ்ட இலாபச் சீட்டு விற்பனை செய்து கொண்டிருந்தான் ஒருவன், நல்லைக்குமரனது நண்பன் ஓர் அதிஷ்ட இலாபச் சீட்டை நூறு ரூபா கொடுத்து வாங்கி; அதிஷ்டமிருந்தால்

உனக்கு முதலாம் பரிசான இருபத்தைந்து  இலட்ச ரூபா கிடைக்கும். கவனமாக வைத்திரு" என்று சொல்லிக் கொடுத்தான்".

" நூறு  ரூபாவைத் தந்தால் பிரயோசனமாக இருக்கும் எனக் கெங்கே இருக்கு அதிஷ்டம்? இது வீண்செலவு. குடித்தாலாவது உடம்பில் சேரும்" என்றான் நல்லைக்குமரன்".

"மறுநாள் குடிப்பதற்குக் காசு இல்லாததால் நல்லைக்குமரன் தான் வைத்திருந்த அதிஷ்ட இலாபச் சீட்டைத் தனக்குத் தெரிந்தவர்களிடம் காட்டி ஐம்பது ரூபா தருமாறு கெஞ்சினான். எவரும் அதை வாங்க விரும்பவில்லை. அதனால் அவன் துக்கத்துடன் வெளியே வந்தான். அப்பொழுது வீதியால் வந்த ஒருவனை நல்லைக்குமரன் மறித்து அதிஷ்ட இலாபச்  சீட்டைக் கொடுத்து ஐம்பது ரூபா தருமாறு கேட்டான். வந்தவன் தனக்கு அதிஷ்டம் இருப்பதால் தான் யாரோ தெரியாத மனிதன் அரை விலைக்குத் தருகிறான் எனநினைத்து ஐம்பது ரூபாவைக் கொடுத்துவிட்டு அச் சீட்டை வங்கிச் சென்றான்"

"ஒருவாரம் கழிந்தது. நல்லைக்குமரனின் நண்பன் அன்றைய பத்திரிகையோடு வந்து சொன்னான் ; "நல்லை, நீ அதிஷ்டசாலி. முதலாம் பரிசு உனக்குத்தான் விழுந்திருக்கு.  சீட்டை எடுத்து வா வங்கிக்குச் சென்று பணம் பெறுவோம்" என்றான். அதைக்கேட்ட நல்லைக்குமரன் அதிர்ச்சியால் நினைவிழந்தான். அவனது நன்பன் விஷயத்தை அறிந்து அதிர்ந்து போனான்".

“ஆகையால் அன்பானவர்களே, ஒரு பொருளின் முக்கியத்துவத்தை உணராமையால் தான் இத்துன்பம் நேர்ந்தது. பொருளின் பெறுமதியை உணரவேண்டும். ஒருபுசல் நெல்லை விதைத்தால் ஆறுமாத காலத்திற்கு உணவு கிடைக்கும். அந்நெல்லை அரிசியாக்கி உண்டால் பத்து நாட்களுக்குண்ணலாம். ஆகையால் பொருளின் தன்மையை உணருங்கள். பெறுமதியான பொருளைப் போன்றது தான் வாழ்கை. அதனால் வாழ்க்கையின் தத்துவத்தை உணர்ந்து நல்லவற்றைச் செய்து வாழுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

**அடங்கி அகப்பட ஐந்தினைக் காத்துத்**
**தொடங்கிய மூன்றினால் மாண்டிண்டு –உடம் பொழியச்**
**செல்லும்வாய்க் கேமம் சிறுகாலைச் செய்யாரே**
**கொள்ளிமேல் கொட்டு வைத்தார்.**

“ஒரு பொருளின் பெறுமதியை உணராது அதைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. வாழ்கையின் தத்துவத்தை உணராது தீயவழியில் நடக்கவும்கூடாது. **‘கொள்ளிமேல் கொட்டுவைத்தார்** ‘ என்பது பழமொழி **வித்துக்குற்றி உண்டாங்கு** ‘ என்பதும் இப்பழமொழி குறித்தது

23 “அன்பானவர்களே, வலியவர்களோடு பகை கொள்ளக் கூடாது. அத்துடன் விளையாட்டுக்குக் கூட மற்றவர்களுடன் பகைத்தல் கூடாது. பகையென்று சொல்லப்படுகின்ற தீய செயல், ஒருவன் தன்வாழ் நாளில்

வராமல் காத்துக் கொள்ளல் வேண்டும். அத்துடன் பகைவனை நண்பனாக்கிக் கொள்ளல் வேண்டும். அப்படி நண்பனாக்கும் பண்புடைமை உள்ளவர்கள்தான் உலகை ஆழ்பவர்கள் ஆவர் “

“கந்தவனம் என்ற நாட்டை வீரமாத்தாண்டன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். கந்தவனத்தின் அயல் நாடு கொக்கூர். அதன் அரசனாக வேல்மாறன் இருந்தான். வீரமாத்தாண்டனின் பேரனாரின் காலத்திலிருந்தே கொக்கூருடன் பகை இருந்தது. அதனால் வேல் மாறனின் தந்தை அடிக்கடி வீரமார்த்தாண்டனின் பேரனாருடன் போர் தொடுத்துக் கொண்டிருந்தார். இதனால் நாடுகளைக் கைப்பற்ற முடியா விட்டாலும் இரு நாட்டின் போர் வீரர்கள் பலர் மாண்டுகொண்டிருந்தனர். பல போர் வீரர்கள் அங்கவீனமாகினர். மக்கள் பெருந் துன்பப்பட்டனர். அதனால் வீரமார்த்தாண்டன் தனது பகைவனான வேல்மாறனை நண்பனாக்க விரும்பினான். அதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தான். பகைவனை நண்பனாக்குவது என்பது ஒருவன் வீட்டுத் தோட்டத்தில் பயன் தரும் மரங்களை நட்டு வளர்த்து, அதிலிருந்து பயன் பெறுவது போன்றது என்று நினைத்த வீரமார்த்தாண்டன் வேல்மாறனுடன் நட்புக்கொள்வதற்கான காலத்தை எதிர்பார்த்தி ருந்தான்”

“வசந்த காலம் ஆரம்பிக்கும் வேளையில் வருடா வருடம் கொக்கூரில் முத்தமிழ் விழா நடைபெறும். அந்த வருடம் நடை பெற்ற முத்தமிழ் விழாவுக்கு வீரமார்த்தாண்டன் புலவர்வேடமிட்டுச் சென்று அரச அவையில் வேல்மாறனின் வீரதீரங்களைப் புகழ்ந்து ஒரு காவியம்

பாடினான். அதில் வேல்மாறனின் வீரதீரங்களையும் அவனது பண்புகளையும் மிகவும் புகழ்ந்து பாடினான். அதனால் மகிழ்ந்த வேல்மாறன் அவனை அந்தப்புரத்தில் தங்கவைத்து ஓய்வான நேரங்களில் தன்னைப் புகழ்ந்து பாடுமாறு கேட்டுக் கொண்டான். அவன் மிகவும் பொருள் பொதிந்த பாடல்களைப் பாடியமையால் அவனை அரசிக்கும் இளவரசிக்கும் அறிமுகப் படுத்தி வைத்தான். வீரமார்த்தாண்டன் புலவர்வேடத்தில் சென்று கொக்கூர் இளவரசியான குந்தவையைச் சந்தித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியிருந்தான். குந்தவை அவனை அடிக்கடி சந்தித்தாள். அப்போது அவன் அவளின் அழகைப் பற்றிப் பல பாடல்களைப் பாடினான். அவளது கண்களின் மருட்சி, முகத்தின் கவர்ச்சி, கழுத்தின் செழுமை, அவளின் உடல் அழகு என்பவற்றைப் பற்றி அளவுக்கதிகமாகப் புகழ்ந்து பாடினான். அதனால் அவள், அவன் மீது மையல் கொண்டாள். சந்தர்ப்பம் வந்த போது தனது காதலை வெளிப்படுத்தினாள்”

“வேல்மாறனுக்கு எந்நேரமும் புலவரின் நட்புத் தேவைப்பட்டது. அதனால் அவன் இரவில் வெகு நேரம் அவனுடன் உரையாடுவான். அன்று பௌர்ணமி தினம். அத்துடன் இளவரசியின் பிறந்ததினம். அதனால் வேல்மாறன் இளவரசியின் திருமணத்தைப் பற்றி பிறநாடு அறிந்துகொள்ள அவளது அழகைப்பாடும்படி சொன்னான். அப்போது வீரமார்த்தாண்டன் சொன்னான்”.

“அரசே நீங்கள் வீரர்மட்டுமல்ல மிகவும் நல்லவர், பண்புள்ளவர், குடிகள் மீது அன்புள்ளவர். ஆனால் காரணமில்லாத பகையைக் கந்தவனத்துடன் வளர்க்கிறீர்கள். கந்தவன அரசன் வீரன், நல்லவன் ; குடிகளை அன்புடன் கவனிப்பவன். நீங்கள் இருவரும் நல்லவர்கள். முன்னோரின் பகையை வளர்ப்பதால் காரணமின்றி மக்கள் மடிகின்றனர். இது நல்லதல்ல” என்று நிறுத்தினான்”

“அதற்கு வேல்மாறன் சொன்னான் ; “புலவரே எனக்கும் அந்த எண்ணம் உண்டாகின்றது. அதைத் தடுக்கவேண்டும். ஆனால் அதற்கான வழிவகைகள் தான் தெரியவில்லை” என்று கவலைப்பட்டான்”.

“அதற்கு மார்த்தாண்டன் சொன்னான்; “அரசே மார்த்தாண்டன் பெரும் வீரன் என்கிறீர்கள். அதனால் அவனுக்குத் தங்கள் மகளைத் திருமணம் செய்து கொடுத்தீர்களானால் இருநாட்டிற்கும் நன்மை உண்டாகும்”

“உண்மைதான் அதற்கு அவன் சம்மதிப்பானா...?” என்று கேட்டான் வேல்மாறன்”

“அந்தப்பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள். நான் வீரமார்த் தாண்டனைச் சந்தித்துக் கதைத்துச் சம்மதிக்க வைக்கிறேன்”என்றான் வீரமார்த்தாண்டன்”,

“ஒரு வாரம் கழிந்தது. கந்தவன மன்னன் தனக்கு கொக்கூர் இளவரசியைத் திருமணம் செய்ய விருப்பமென்று தூதுவர்கள் மூலம் ஓலை அனுப்பினான்”

“அடுத்த சில வாரங்ககளில் வீரமார்த்தாண்டனுக்கும் குந்தவைக்கும் கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது. அவன் இளவரசியைத் தனிமையில் சந்தித்த போது புலவனின் வேட மிட்டு வந்தான். இளவரசி திகைத்துப் போனாள். பயத்தால் அலறினாள். வீரமார்த்தாண்டன் தனது புலவர் வேடத்தைக் கலைத்தான்”,

“இளவரசி, ஐம்பதுவருடங்களாக இரு நாடுகளுக்குமிடையில் இருந்த பகையை நீக்குவதற்காகத்தான் நான் புலவர் வேடமிட்டு வந்தேன். அந்த வேடத்தில் வந்த என்னை உனக்குப் பிடித்ததையும் அறிந்து கொண்டேன். மன்னர்கள் தமது பகைவரை அழித்தல் வேண்டும். அழிக்க முடியா விட்டால் அவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளல் வேண்டும். நான் உறவினன் ஆக்கிக்கொண்டேன்”. என்றான் வீரமார்த்தாண்டன். தான் விரும்பியவன் ஓர் அரசன் என்பதை அறிந்து மகிழ்ந்தாள் குந்தவை. வீரமார்த்தாண்டனைப் போல நடித்துப் பகைவரை வெல்ல வேண்டும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***எல்லையொன்று இன்னியே இன்னாசெய் தாரையும்***
***ஒல்லை வெகுளார் உலகாள்தும் என்பவர்***
***சொல்லின் வளா அய்த்த தாள்நிழல் கொள்பவே***
***கொல்லையுள் கூழ்மரமே போன்று.***

மன்னர்கள் தமது பகைவர்களைத் தமக்கு நண்பர்களாக்கிக் கொள்ளல் வேண்டும். "**கொல்லையுள் கூழ்மரமே போன்று**" என்பது பழமொழி. அது வீட்டுக் கொல்லைக்குள் நல்ல பழமரங்களை வளர்ப்பதைப் போன்றது.

24 "அன்பானவர்களே, நல்லகுடியில் பிறந்தவர்கள் பெரிதாகக் கற்காவிட்டாலும் நல்லறிவு உள்ளவர்களாகவே எப்பொழுதும் இருப்பார்கள். அவர்களுக்கு நன்றாகக்கற்றவர்கள் எதையும் எடுத்துக் கூறத்தேவையில்லை. அப்படிச் சொல்வது கொல்லர் தெருவிலே ஊசிவிற்பதைப் போன்றதாகும். நல்ல குடியிற் பிறந்தவர்கள் தம் குடும்பப்பெருமைக்கு உரிய கடமைகளைத் தவறாது செய்வார்களே தவிரக் கீழான செயல்கள் எவற்றையும் தவறிக் கூடச் செய்யமாட்டார்கள். இவர்களிடம் சிறந்த முயற்சி, நிறைந்த அறிவு, ஒழுக்கம், உண்மை, நாணம்,பொறுமை, முகமலர்ச்சி என்பன இயல்பாகவே அமைந்து காணப்படுவதால், பின்பு நடக்கவிருப் பவற்றையும் உணர்ந்து அதற்கேற்பத் தம்மைத் தயார் செய்து இழுக்கு வராதபடி தம்மைக்காத்துக் கொள்வர்"

"நாவலூரில் சபாபதி என்றொருவர் வாழ்ந்து வந்தார். அவர் பெரிதாகக் கற்றவரல்ல. உயர்ந்த குடியிலே பிறந்தவர். அதனால் எல்லா உயிர்கள் மீதும் பாகுபாடற்ற தன்மை கொண்டவர். அன்பு கொண்டவர்; பிறரது மனதைப் புண்படுத்தாதவர். முக்காலங்களையும் உணர்ந்தவர். அதனால், அவ்வூரவர்கள் அவரைத் தெய்வமாக மதித்தனர். தமது வீட்டில் நடைபெறும் சுபநிகழ்வுகளை எப்போ நடத்தலாம் எப்படி

நடத்தலாம் என அவரைக் கேட்டுத் தெளிவடைந்த பின்பே நடத்துவர். அவற்றை அவரே முன்னின்று நடத்தி வைப்பார் ஊரில் நடைபெறுகின்ற. விழாக்களெல்லாம் அவரின் தலைமையில் தான் நடைபெறும்".

"அதே ஊரில் அம்பலவாணர் என்றொரு பெருங்கல்விமான் இருந்தார். அவர்கல்வி கற்றாரே தவிர அதன்படி நடப்பதில்லை. தான் பெருங் கல்வி மான் என ஆணவம் கொண்டு மற்றவர்களுடன் திமிராக நடந்து கொள்வார். அதனால் ஊரவர்கள் அவரை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. அது அவருக்குப் பெரும் அவமானமாக இருந்தது".

"அப்பொழுது அந்த ஊரில் முத்தமிழ்விழா ஒன்றைச் சபாபதியின் தலைமையில் நடத்த ஊரவர்கள் தீர்மானித்தனர். ஊரவர் அம்பலவாணரிடம் அது பற்றிக் கருத்துக் கூடக் கேட்கவில்லை. அதனால் கோபம் கொண்ட அம்பலவாணர் அவ்வூர்க் கோயில் திருவிழாவின் போது ஊர்ப்பிரமுகர்களைச் சந்தித்துச் சொன்னார்".

"முத்தமிழ்விழா நடத்துவதாக இருந்தால் அதற்குப் பொருத்தமான கல்வி கற்றவரைத் தலைவராகக் கொள்ளல் வேண்டும். அதைவிடுத்து எதுவுமே கல்லாத ஒருவரின் தலைமையில் விழாவை எப்படி நடத்தலாம் ?" என்று கேட்டார்"

"அதற்கு அங்கிருந்த ஒருவன் சொன்னான் ; "ஐயா பண்போடு வாழக்கல்வி தேவையில்லை. அத்துடன் நல்ல குடியில் பிறந்தவர்கள்,

கற்காவிட்டாலும் மிகுந்த அறிவுடையவர்களாக இருப்பர் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். அத்துடன் உயர்ந்த குடியிற் பிறந்தவர்களுக்குக் கற்றவர்கள் எதையாவது சொல்வது கொல்லர்களின் குடியிருப்பிலே சென்று ஊசி விற்பதைப் போன்ற தென்றும் கூறியுள்ளதை நீங்கள் அறிய வில்லையா...? கற்பவன் கற்றபடி நடந்தல் வேண்டும். அப்படி நடப்பவனை மற்றவர்கள் பார்த்துப் பின்பற்ற வேண்டும். இது தான் உலக இயல்பு. கற்காதவர் மேதாவிகளாக இருக்கின்றனர். நாய் கற்றா நன்றியுள்ளதாகவும், பொறுப்பானதாகவும், வீரமுள்ளதாகவும் இருக்கிறது? காகங்கள் ஒற்றுமையைப் பற்றி எந்த நூலிற் கற்றன. பசு, குதிரை, எருது, யானை போன்ற மிருகங்கள் எங்கே கற்று மனிதனுக்கு உதவுகின்றன? நூல்களெல்லாம் அறத்தைப் பற்றியும் நீதியைப்பற்றியும் தானே கூறுகின்றன. இவற்றைக் கற்ற எத்தனை பேர் அதன்படி நடக்கின்றனர்? சபாபதி ஐயா பல்கலைக்கழகம் சென்று படிக்கா விட்டாலும், தான்படித்தபடி நடப்பவர். எல்லா நூல்களில் உள்ள அறம் நீதி ஒழுக்கக் கருத்துக்களை அவரின் வாழ்கை நடைமுறையிலிருந்து இக்கிராமத்தவர் கற்றுக் கொள்கின்றனர்" என்றான்".

"ஆகையால் அன்பானவர்களே, உயர் குடியிற்பிறந்தவர் நல்லநூல்கள் கூறும் தத்துவங்களை அறிந்தே வாழ்கின்றனர். அவர்களுக்குக் கற்றவர் கூறுவது பிழையானது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்

***கற்றதொன் றின்றி விடினும் குடிப்பிறந்தார்***

***மற்றொன் றறிவாரின் மாணமிக நல்லரால்***

***பொற்ப உரைப்பான் புகவேண்டா, கொற்சேரித்***

***துன்னூசி விற்பவர் இல்.***

உயர் குடியிற் பிறந்தவர்கள் நல்ல நூல்களின் பயனை உணர்ந்து அதன்படி நடப்பார்கள். **“கொற்சேரித் துன்னூசி விற்பவர்இல்”** என்பது பழமொழி.

25 “அன்பானவர்களே, பெண்களின் மருட்ச்சியான நாணம் கொண்ட பார்வையானது, ஆண்களின் திடமான மனத்தை வலுவிழக்கச் செய்து, அவர்தம் தகுதியையும் மறக்கச் செய்யும். இளம் பெண்களின் பார்வையானது ஆடவனுக்குத் தீராத காதல் நோயை உண்டாக்கும். அத்துடன் அவன் வருந்தும் போது பார்க்கும் நாணம் மிகுந்த பார்வை, நோயுற்ற அந்த ஆடவனைக் குணப்படுத்தும். அந்த மடமையான பார்வையில் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவற்றைவிடக் காமமே அதிகமாக இருப்பதால், அப்பார்வையின் கொடுமையில் ஆடவர்கள் தம் தகுதியை இழந்து விடுவர். ஆடவர்பார்க்கும் போது பாராமலும், அவர்கள் பாராத போது பார்க்கும் பார்வையால் ஆடவரின் அங்கங்கள் யாவும் செயலிழந்து விடும்.”

“சேனையூர் அரசன் கலைவண்ணன். அவன் குதிரை மேல் ஏறிச்சவாரி செய்வது வழக்கம். அப்படி அவன் சவாரி செய்யும் போது சகலரும் அவனைக் கைகூப்பித் தொழுவார்கள். பெண்கள் நாணத்தோடு வாசற்கதவை நீக்கி அவனைப் பார்த்துத் தொழுவார்கள்.”

“மன்னன் சேரிப் பக்கமாகக் குதிரையில் செல்கிறான். சேரி மக்கள் தம்குடிசைகளை விட்டு வெளியே வந்து அரசனுக்குப் பூப் போட்டு வணங்குகிறார்கள். அரசனது கண்கள் அவளது முகத்தில் மொய்க்கின்றன. ஒரு கணம் தான் அவள் அரசனை நிமிர்ந்து நாணத்துடன் பார்க்கிறாள். அந்தப் பார்வையின் குளிர்மை அரசனின் நெஞ்சை வேலைப் போலத்தாக்கிப் பிளக்கிறது. அரசன் மெய்மறந்து போனான். அவனுக்குத்தான் எங்கே நிற்கின்றேன்? என்ற உணர்வு தோன்றவில்லை. கடிவாளந் தளரக் குதிரை அக்குடிசையின் வாசலில் நிற்கிறது. அரசன் அக்குடிசை வாசலைப் பார்க்கிறான். பூரண சந்திரப் பிரகாசம் அவளது கண்களில் தெரிந்தது. அவள் குடிசைக் கதவைத் தாளிட்டு விட்டு உள்ளே செல்கிறாள். உலகெங்கும் இருண்டதைப் போன்ற பிரமை அரசனுக்கு”

“அரண்மனைக்கு வருகிறான். அவளது கண்கள் அவனது மனத்திரைக்கு வருகின்றது. பகல் இரவு எல்லாம் அவளது நாணம் மிகுந்த பார்வை, பார்க்கும் பொருட்களிலெல்லம் தெரிகிறது. அவள் முரசறைபவனின் மகள். அதனால் அவளை மறந்து விடும்படி தந்தை சொல்கிறார், முதலமைச்சர் ஆலோசனை வழங்குகிறார். இவையெல்லவற்றையும் அந்த நாணம்மிக்க மடமையான பார்வை தகர்த்து விடுகிறது. அரசன் தனது தகுதி, தராதரம் ஆகியவற்றை மீறி அந்தப் பார்வைக்குரியவர்களுக்கு அடிமையாகிறான். அவளின் நினைவால் அவன்படும் துன்பத்தைக் கண்டு பொறுக்க முடியாத அரசர் அவளையே அவனுக்குத் திருமணம் செய்து வைக்கிறார்”.

“ஆகையால் அன்பானவர்களே, மிகவும் கவனமாக இருங்கள். பெண்களின் நாணம் மிக்கமடமையான பார்வையானது உங்களைப் பலவீனப்படுத்தி விடும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***விழுமிழை நல்லார் வெருள்பிணைபோல் நோக்கம்***
***கொழுமிய நாணை மறைக்கும் - தொழுநையுள்***
***மாலையும் மாலை மயக்றுந்தாள் :அஃ்தால்***
***சால்பினைச் சால்பறுக்குமாறு.***

மகளிரின் வெகுண்ட நாணம் மிக்க பார்வை, ஆடவரின் மன உறுதியைக் குலைக்கும் **“சால்பினைச் சால்பறுக்குமாறு”** என்பது பழமொழி.

26 “அன்பானவர்களே, எதிரி வலியவனானால் அவனுடன் மோதுவதில் அர்த்தமில்லை. அதனால் அவனை எதிர்ப் பதைக்கைவிட்டு விட்டுத்தான் பலமடைந்தபின் அவனோடு பொருதி வெற்றி காண்பது தான் சிறந்த முறையாகும். அதைவிட்டு விட்டு விட்டுப் பலவீனமான நிலையில் எதிரியோடு மோதினால், மோதுபவன் அழிந்து போவான். பகைவனை எதிர்க்க முடியா விட்டால், பகைவனிலும் பார்க வலிமை உள்ளவனோடு சேர்ந்து கொள்ளல்வேண்டும். இல்லாவிட்டால் பகைவனுக்குச் சமமாகத்தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும். எதிரியை வெல்லது ஆண்மை. வென்ற பின் அவனை மதித்து உதவி செய்வது பேராண்மை”

“நாவலடியில் கந்தராசா என்பவன் ஒரு சிறு வியாபார நிலையத்தை நடத்திச் சீவித்து வந்தான். உலகநாதன் கந்தராசாவின்

பகைவன்; பெரும் தனவந்தன். கந்தராசன் உலகநாதனை மதியாது மிகவும் பொறுமையுடனும், ஒழுக்கத்துடனும் தனது தொழிலைச் செய்து வந்தான். அவனைப் பழிவாங்க எண்ணிய உலக நாதன் அவனது வர்த்தக நிலையத்துக்கு அண்மையில் தானும் ஒரு வர்த்தக நிலையத்தைத் திறந்து மிகவும் மலிவாகப் பொருட்களை விற்று வந்தான். இதனால் கந்தராசனிடம் பொருள்வாங்க எவரும் செல்வதில்லை. அதனால் கந்தராசன் தனது வர்த்தக நிலையத்தை மூடி விட்டுத் தனது மாமனாரின் ஊருக்குச் சென்று விவசாயம் செய்தான்".

"இரண்டு வருடங்கள் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்துப் பல இலட்சரூபாவை இலாபமாகப் பெற்றான். அவனின் மாமனின் நண்பன் நாகநாதன். அவரே கந்தராசனதும் அவனது மாமனிரினதும் விவசாய விளைபொருட்களைக் கொள்வனவு செய்பவர். அவர் கந்தராசனின் நேர்மையான நடத்தையைக் கண்டு மகிழ்ந்தார். அவனைத் தனது மகளுக்குத் திருமணம் செய்து கொடுத்தார். அதனால் கந்தராசன் பெரும் பணக்காரனானான்".

"நாகநாதனிடம் ஏராளமான விவசாய நிலம் இருந்தது. அதை அவர் குத்தகைக்குக் கொடுத்திருந்தார். கந்தராசன் திருமண மானபின் அந்நிலங்களில் பயிரிட்டான். அதில் பெரு விளைச்சல் ஏற்பட்டது. இப்போது உலக நாதனைவிடத் தான் பெரும் தனவந்தன் என உணர்ந்து கொண்ட கந்தராசன், நாவலடியில் பெரியதொரு வர்த்தக நிலையத்தைத் திறந்து மிகவும் தரமான பொருட்களை மலிந்த விலையில் விற்பனை செய்தான்".

“பட்டணத்தில் உள்ள கடைகளை விடக் கந்தராசனிடம் பொருட்கள் மலிவாகக் கிடைத்தன. அதனால் பட்டணத்தில் உள்ளவர்களும், அயல் ஊர்களில் உள்ளவர்களும் கந்தராசனிடம் பொருட்களைக் கொள்வனவு செய்தனர். உலகநாதனுக்குப் பொருட்களைக் கொடுக்கும் வர்த்தகரே கந்தராசனிடம் பொருட்களைக் கொள்வனவு செய்து உலகநாதனுக்கும் கொடுத்தார். அதனால் உலகநாதனிடம் பொருட்களின் விலை அதிகரித்துக் காணப்பட்டது. அதனால் உலக நாதன் தனது வர்த்தக நிலையத்தை மூடினான்”.

“ஊரில் உள்ள பெரும் பணக்காரனாக இருந்த உலகநாதன் வகித்த கோவில் தலைவர் பதவி, ஊர்த் தலைவர் பதவி, சனசமூக நிலை முன்பள்ளித் தலைவர் பதவி யாவும் கந்தாரசனிடம் வந்து சேர்ந்தன. அதனால் அவன் உலக நாதனை விடச்சிறப்பாகச் செயற்பட வேண்டுமென நினைத்துச் செயற்பட்டான்”.

“ஐந்து வருடங்களின் பின் உலகநாதனைப் பற்றி ஊரில் பேசுவார் யாரும் இல்லை. எவ்லாவற்றிற்கும் கந்தராசனே பொறுப்பாக இருந்தான்”

“ஆகையால் அன்பானவர்களே, பகைவன் வலிமையான - வனானால், அவனை எதிர்ப்பதை விட்டுவிட்டுத் தான் பலவானாக. வேண்டும். அதன் பின்பே பகைவனை எதிர்க்க வேண்டும்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்

***இகலின் வலியாரை எள்ளி எளியார்***
***இகலின் எதிர்நிற்றல் ஏதல் -அகலப்போய்***
***என்செய்தே யாயினும் உய்ந்தீக, சாவாதான்***
***முன்கை வனையுந் தொடும்.***

பகை பெரிதானால் அதை எதிர்த்து மோதி அழியாது, அதைவிடுத்து தக்க துணையுடன் பலம் பெற்ற பின் வெல்வதே வீரம் " **சாவாதான் முன்கைவனையும் தொடும்** " என்பது பழமொழி "

27 "அன்பானவர்களே, அறிவுடைய சான்றோர்கள் ஒரு போதும் நன்றி கெட்டதனமாக நடக்கமாட்டார்கள். தேவைப்படும் போது ஒருவர் செய்த உதவி, அது அளவில் மிகமிகச் சிறிதானாலும் கூட அதன் தன்மையைத்தான் சான்றோர் நினைத்துப் பார்ப்பார்கள். அவ்வுதவியை அவர்கள் மலையை விடப் பெரியதாக மதிப்பார்கள். தமக்குத் துன்பம் வந்தபோது அதைப் போக்க உதவியவரின் நட்பைச் சான்றோர் தம் உயிரிலும் மேலானதாக நினைப்பர். அப்படி உதவி செய்தவர் பின்னர் கொடுமையான துன்பங்களைச் செய்தாலும், சான்றோர் அதைத் துன்பமாகக் கருதாது முன்பு அவர்கள் செய்த உதவிகளை நினைத்து மகிழ்ச்சியடைவர். எந்த அறத்தை மறந்தவர்களுக்கும் தப்பிப் பிழைக்க வழியுண்டு, ஆனால் செய்நன்றியை மறந்தவர் தப்பிப் பிழைக்க வழியே இல்லை"

"முல்லை வனத்தின் அரசன் திலோத்தமன் என்ற யானை, அது அந்த வனத்தில் வாழ்ந்த மிருகங்களைத் தன்னைப் போல

நேசித்தது. அத்துடன் மற்றைய மிருகங்களுக்குத் துன்பங்கள் செய்யும் மிருகங்களை மீண்டும் அத்தகைய தீமைகளைச் செய்யாதவாறு மிகக் கொடுமையாகத் தண்டிக்கும்".

"ஒரு நாள் நரி முயலின் குட்டிகள் மூன்றைப் பிடித்து உண்டுவிட்டது. அதனால் மிகவும் கவலைப்பட்ட முயல் அதை அழுதவாறு யானைக்குச் சொன்னது ; "அரசே உயிர் நண்பனைப் போல எனக்குப் பல உதவிகள் செய்த நரியை நான் எனது வீட்டிற்கு நம்பி அழைத்து சென்றேன். ஆனால் நரி உள்நோக்கத்துடன் தான் வந்தது. நான் நரியை நம்பிப்பிள்ளைகளைப் பார்த்துக் கொள்'ளும் படி கூறிவிட்டு உணவு தேடச் சென்றேன். எனது பிள்ளைகள் நரி யோடு அன்புடன் பழகி விளையாடும். அதனால் தான் நம்பினேன். ஆனால் நரி சந்தர்ப்பத்தைப் பார்த்து எனது குட்டிகளை உண்டு விட்டது" என்று அழுதது".

"யானை வழக்கை விசாரித்துவிட்டு நரியைக் கூட்டில் உணவு கொடுக்காமல் அடைத்து வைத்தது. பத்துநாட்களுக்கு அதற்கு யாரும் உணவோ நீரோ கொடுக்க கூடாது என்று கட்டளையிட்டது. பத்துநாட்கள் முடிய யானை சொன்னது; "இனிமேல் அப்படி நடந்தால் உனக்கு மரணதன்டனை தான் தருவேன்"

"முல்லைவனத்தில் கஜேந்திரன் என்றொரு யானை வசித்து வந்தது. மிகவும் இளமையான அது மிகுந்த பலசாலி. பத்துப்புலிகளைத் தூக்கித் தரையில் மோதும் பலம் கொண்டது.

பழிவாங்கப்பட்ட நரி கஜேந்திரனிடம் சென்று கூறியது ; "கஜேந்திரா, நீ பெரும் பலசாலி. நீ ஏன் திலோத்தமன் என்ற கிழட்டு யானையின் கீழிருந்து கஷ்டப்படுகிறாய். அதைக் கொன்று விட்டு நீ அரசனானால் பக்கத்தில் உள்ள காடுகளையும் பிடிக்கலாம். சகல வசதிகளோடும் வாழலாம்" என்றது".

"கஜேந்திரன் மிகவும் ஒழுக்கமானது. நன்றி மறவாத தன்மையைக் கொண்டது. தன்னைத் தனது தாய் பிரசவிக்கும் போது அரசனாக இருக்கும் திலோத்தமன் பெரும் உதவிகள் செய்ததாக அதன் தாய் கூறியது அதற்கு நினைவில் வந்தது. அதனால் அது எதுவும் பேசவில்லை. ஆனால் நரி தினமும் வந்து அரச ஆசையைத் ஊட்டிக் கொண்டிருந்தது. ஆனால் கஜேந்திரன் அதைக் கேளாமையால் அதைப் பற்றித் தவறாகத் திலோத்தமனிடம் சொல்லி, அதைத் தண்டிக்க வைத்தால் இருவருக்குமிடையே மோதல் உருவாகும் என நினைத்துத்திலோத்தமனிடம் சென்றது; " அரசே, காட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் நடைபெற்ற போதும் நீங்கள் அதைக் கவனிக்காது இருக்கிறீர்கள். கஜேந்திரன் உங்களைக் கொன்றுவிட்டுத் தான் அரசனாக வர நினைக்கிறான். அதற்காக அவன் முல்லைவனத்திற்கு அருகே உள்ள முருககவனத்திற்குச் சென்று, அக்காட்டின் அரசனான வேலன் என்ற யானையைச் சந்தித்துக் கதைத்திருக்கிறான் இதை நீங்கள் அறியாமல் இருக்கிறீர்கள்" என்றது".

"திலோத்தமன், தனது படை வீரரை அழைத்து, நரியைக் கைது செய்யு மாறு கூறியது. பின் சொன்னது; "கஜேந்திரன் மிகவும்

நல்லவன்; ஒழுக்கமானவன்; நன்றி மறவாதவன். அவனது சகோதரிக்கு முருகவனத்தின் அரசனான வேலனுக்குத் திருமணம் பேசப்படுகிறது. அதனால் அது அங்கு அடிக்கடிசென்று வருகிறது. தான் சென்று வருவதை எனக்குச் சொல்லியுள்ளான். அது வீரன். எனக்குப் பின்பு இந்தக் காட்டிற்கு அது தான் அரசன். அது என்னைச் சந்திக்க வரும்வேளைகளில் கனிகளையும், இலை குழைகளையும் கொண்டு வரும். அப்படியானது என்னைக் கொல்ல முயலமாட்டாது, நீதான், நான் உன்னைப் பழிவங்கியதாகக் கருதி என்னைப் பற்றித் தவறாகக், கஜேந்திரனிடம் கூறியுள்ளாய். அதை அது கேட்காததால் இன்று என்னிடம் வந்து அதைப் பற்றித் தவறாகக் கூறி எம் இருவருக்குமிடையில் விரோதத்தை உண்டாக்கப் பார்க்கிறாய். அத்துடன்நீ முருகவனத்திற்குச் சென்று எமது இரகசியங்களை யெல்லாம் வேலனுக்குக் கூறி இலஞ்சம் பெற்றுள்ளாய். வேலனுக்குத் தனது மைத்துனன் தான் முல்லை வனத்தின் அடுத்த அரசன் என்பது தெரியும். அதனால் உன்னைப் பற்றி அறிவதற்காக உனக்குப் பொன்னும் பொருளும் தந்தது. நீ எமது காட்டின் இரகசியங்கள் அனைத்தையும் கூறியுள்ளாய். எனக்கே தெரியாத பல பிரச்சினைகள் உனக்குத் தெரிந்திருக்கிறது. அதனால் இனி உனக்கு மன்னிப்பே இல்லை" என்றது திலோத்தமன்".

"நரி பயத்தால் நடுங்கியது. அதனால் அன்பானவர்களே அறிவுடையவர்கள் இலஞ்சம் பெற்றுக் கொண்டு தனது நாட்டை எதிரிகளுக்குக் காட்டிக் கொடுக்க மாட்டார்கள். தேசத் துரோகிகள் தமது நலனுக்காக நாட்டை எதிரிகளுக்குக் காட்டிக் கொடுப்பார்கள். நீங்கள்

அன்புள்ளவர்களாகவும், பண்புள்ளவர்களாகவும், நன்றி உள்ள வர்களாகவும் வாழப் பழகுங்கள்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***மொய்கொண் டெழுந்து அமரகத்து மாற்றார்வாய்ப்***
***பொய்கொண் டறைபோய்த் திரிபவர்க்கு என்கொலோ?***
***மைமயுண் டமர்ந்தகண் மாணிழாய்! சான்றவர்***
***மையுண்டும் கூறுவர் மெய்.***

அறிவுள்ளவர்கள். பொருளுக்காக நாட்டுக்குத் துரோகம் செய்யமாட்டார்கள். அத்துடன் நன்றியும் மறக்கமாட்டார்கள். **“சான்றவர்மையுண்டும் கூறுவர் மெய்”** என்பது பழமொழி

**28** “அன்பானவர்களே, சான்றோர்கள் தமக்குத் தீமை செய்தவர்களுக்கும் உதவிசெய்வார்கள். தவம் என்பது ஓர் உயிரினையும் அழிக்காத அறத்தை அடிப்படையாகக் கொண்டது. அது போலச் சான்றாண்மை என்பது பிறர் தீமை செய்தாலும் அதைப் பொறுத்துத் தீமை செய்யாது, தீமை செய்பவர்களுக்கு உதவுவது. ஆற்றல் உடையவர்களது பெரும் ஆற்றல் என்பது, தமக்குத் தீமை செய்தவர்கள் கஷ்டப்படும் போது கஷ்டத்தில் இருந்து அவர்களை நீக்கிவிடுவதேயாகும்”

நமசிவாயம் சுவாமிகள் மக்களுக்கு உபதேசம் செய்யும் போது சபைக்குள் ஒரு விசப்பாம்பு நுழைந்தது. சபையினர் அல்லோல கல்லோலப்பட்டனர் ; “இது மிகவும் கொடிய நஞ்சுப்பாம்பு.

இதைக்கொல்ல வேண்டும்” எனக் கூறிய படி பலர் கம்புடன் வந்தனர். அதைக் கண்ட நமசிவாயம் சுவாமிகள் சொன்னார் ;

“அன்பானவர்களே, வந்திருப்பது கொடிய விஷப் பாம்பானாலும் அது மற்றவர்களுக்குத் தீமைசெய்யவென வரவில்லை. தற்செயலாக எங்கோ சென்ற பாம்பு வழிதவறி வந்துவிட்டது. விதியிருந்தால் தான் எதுவும்நடக்கும். கடிக்க வேண்டும் என்ற விதியிருந்தால் வந்த பாம்பு கடிக்காது செல்லாது. ஆகையால் அதைப் போகவிடுங்கள்’ என்றார்.

மக்கள் ஒதுங்கி நின்று ‘அரோகரா’ எனக்கோஷமிட்டனர். பாம்பு எதுவுஞ்செய்யாது தன்வழியே சென்றது; “சுவாமியார் இல்லா திருந்தால் பாம்பைக் கொன்று சுட்டெரித்திருப்பேன்” என்றான் ஒருவன்.

“அன்பானவர்களே, வந்தமருங்கள். விதியில்லாமல் எதுவும் நடக்காது. தீயவர்களானால் அவர்கள் தீமைதான் செய்வார்கள் அதுதான் விதி. இராவணனைப் போர்க்களத்தில் நிராயுதபாணி யாக்கிய இராமன் அவனைப்பார்த்து ; “நீ சென்று ஆயுதங்களுடன் நாளை வந்து என்னுடன் போரிடு” என்றார். இராமர் தான் ஆயுதங்களுடன் வந்த இராமனை நிராயுத பாணியாக்கியவர். இருந்தும் அவன் திருந்துவதற்காக அவனுக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் கொடுத்தார். இது தான் சான்றோரின் குணம்.”

“முல்லைவனத்தில் வாழ்ந்த மானுடன் நரி ஒன்று நட்பாக இருந்தது. மான் மிகவும் ஒழுக்கமுடையது. மற்றவர்களுக்கு உதவி

செய்வது. இருந்தும், அதற்கு நரியின் மீது நம்பிக்கை இருக்கவில்லை. முன்னொரு முறை அது மானைப் பிடித்து உண்ண முயன்றது. இன்னொருமுறை கிடங்கொன்றில் தள்ளி விழுத்தியது. அதைக் கண்ட முயல் ஒடிச் சென்று யானையை அழைத்து வந்து மானைக் காப்பாற்றியது. இருப்பினும் தன்னைத் தேடிவரும் நரியை வெறுக்காது மிகவும் அவதானமாகப் பழகிவந்தது”

“ஒரு நாள் வேடர்கள் காட்டில் உள்ள மிருகங்களைப் பிடிப்பதற்குப் பொறிகளை வைத்திருந்தனர். அதைக் கண்ட நரி மானை அப்பொறிக்குள் தந்திரமாக விழுத்தினால் வேடர்கள் வருமுன் அதைக் கொன்று தின்று விடலாமென நினைத்து மானை அந்தப் பக்கமாகத் தந்திரமாக அழைத்து வந்தது. நரியின் எண்ணத்தை அறியாத மான் நரிக்குப் பின்னால் வந்தது. வரும் வழியில் மான் திராட்சைக் கொடிக்குள்ச் சிக்கிவிட்டது. அதைக் கண்ட நரி சொன்னது; “நண்பா நான் சென்று யானையை அழைத்து வருகிறேன். நீ அவதானமாக இரு” என்றது”.

“நண்பா, நான் பெரும் ஆபத்தில் அகப்படவில்லை. சிறியகொடிதான் காலில் சிக்கியுள்ளது. அதை உனது பற்களால் கடித்துவிடு என்றது மான்

“ அதைக் கேளாதது போலச் சென்ற நரி, சற்று நேரத்தில் மான் இறந்து விடுமென நினைத்துக் காத்திருந்தது. அதை மான் கண்டது.

அது; "நண்பா, என்னைக் காப்பாற்று. இல்லாவிட்டால் முயலிடமோ அல்லது யானையிடமோ சென்று சொல்" என்றது".

"அதற்கு நரி சொன்னது; "நண்பா நான் யானையிடம் சொல்லத்தான் போகிறேன். காலில் முள்த்தைத்து விட்டது. நடக்க முடியவில்லை. அதை எடுத்து விட்டுச் செல்கிறேன்" என்றது".

"அதன் பின்பு பலமணி நேரம் கழிந்தும் நரி அவ்விடத்தியே நின்றது. அதனால் நரிதன்னை உண்ணக் காத்திருக்கிறது என்று உணர்ந்து கொண்ட மான் முயலைப் பலமாகக் கூவி அழைத்தது. முயல் மானைக் காணாமையால் தேடி அங்கே வந்தது. மான் வேதனையால் அலறுவதையும், நரி அதை வேடிக்கை பார்ப்பதையும் கண்டது. உடனே மானின் அருகே சென்று மானின் கால்களைச் சுற்றி இருந்த கொடிகளைத் தனது பற்களால் அறுத்தது. பின் மானும் முயலும் சென்று கொண்டிருருந்தன. திடீரென; "என்னைக் காப்பாற்றுங்கள்.என்னைக் காப்பாற்றுங்கள்" என்று நரி அலறும் சத்தம் கேட்டது. அவ்விடத்திற்கு மானும் முயலும் வந்தன. வேடர் வைத்த பொறிக்குள் நரி அகப்பட்டுக் கிடந்தது. மானைக் கண்டதும் அதுவேதனையுடன் சொன்னது; "நண்பா என்னைக் காப்பற்று"

"உனக்குச் சரியாக தண்டனை கிடைத்துள்ளது, முன்பும் பல தடவை நீ மானைக்கொன்று தின்னத் திட்டம் தீட்டினாய். இப்பொழுது மான்கொடிகளுக்குள்ச் சிக்குண்டபோது, அது எப்போது இறக்கும், அதன் மாமிசத்தை உண்ணலாம் எனக்காத்திருந்தாய் அதனால் நாம்

உன்னைக் காப்பாற்ற மாட்டோம். இப்படியே கிடந்து சா" என்று கூறிவிட்டு முயல் சென்றது".

"மான் நண்பா, என்னைக் காப்பாற்று. நான் அறியாமல் தவறு செய்துவிட்டேன். இனிமேல் அப்படி நடக்கமாட்டேன்" என்று நரி அழுதது"

" பாவம் நரி, அதைக் காப்பாற்றுவோம். தீயவர்களுக்குப் புத்திமதி கூறினாலும் அது அவர்களுக்கு விளங்கமாட்டது. உதவி செய்தாலும் அது புரியாது. ஆனால் அவற்றைப் புரிந்த நாம் தவறு செய்யக் கூடாது. அதனால் அதைக் காப்பற்றுவோம்" என்று கூறி மான் நரியைப் பொறியிலிருந்து விடுவித்தது. எனினும் அதன் காலொன்று முறிந்து தூங்கியது"

"இனியாவது திருத்தி நட" என்று கூறியது முயல். ஆகையால் அன்பானவர்களே, சான்றோராக வாழுங்கள். தீமை செய்தவர்களுக்குத் தீமை செய்யாதீர்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***தெற்றப் பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால்***
***மற்றுங்கண் ணோடுவர் மேன்மக்கள் - தெற்ற***
***நவைக்கப் படுத்தன்மைத் தாயினும் சான்றோர்***
***அவைப்படின் சாவாது பாம்பு.***

பகைவர்களுக்கும் துன்பத்தில் உதவுவது சான்றோரின் பண்பு ஆகும். **"சான்றோர் அவைப்படின் சாவாது பாம்பு'** என்'பது பழமொழி.

29 “அன்பானவர்களே, சான்றோர்கள் நல்லவை அனைத்தையும் செய்வது தங்கள் கடமை என நினைத்து, காலம் வரும்வரை காத்திராது உடனேயேசெய்து விடுவார்கள். தமக்கு அப்பாற்பட்ட விடயங்களானாலும் அவர்கள் கடல்கடந்து சென்றென்றாலும் செய்து முடிப்பர். தம்மிடல்லாதவற்றையும் கடன்வாங்கியாவது செய்து முடிப்பர்”

“நாவலடியில் பேரின்பநாதன் என்றொரு பெரியவர் இருந்தார். அவர் பெரிதாகக் கற்றவரல்ல. அத்துடன். பெரும் தனவந்தனுமல்ல. தேவைகளுக்கென இரப்பவர்களுக்கு இல்லை என்று கூறாது உதவி வந்தமையால் அவர் வறுமையுற்றிருந்தார். இருந்த போதும் தன்னிடம் உதவிகோரி வருபவர்களுக்கு அவர், அவர்கள் கேட்கும் உதவிகளைச் செய்து கொடுப்பார். அவரது ஒரேமகள் மல்லிகா. அவளுக்குத் திருமணம் பேசி நாளும் குறித்திருந்தார். திருமண நாளன்று சபையில் இரண்டு இலட்சம் ரூபா சீதனமாக மாப்பிளைக்குக் கொடுப்பதாக உறுதியளித்திருந்தார். அதற்கான பணம் அவரிடம் இருந்தது”.

“அந்த ஊரில் வர்த்தகம் செய்பவன் அருணாசலம். அவன் வியாபரத்தில் நட்ட மடைந்தபடியால் கடன்காரர் அவன் வாங்கிய பணத்தைத் தருமாறு வற்புறுத்தி வந்தனர். சிவராசா என்பவன் மிகவும் கொடியவன். அவனிடம் அருணாசலம் இரண்டு இலட்சம் ரூபா கடனாக வாங்கியிருந்தான். பல வருடங்களாக அப்பணத்தை அருணாசலத்தால் கொடுக்க முடியவில்லை. அவனும் பலமுறை அருணாசலத்தைக் கேட்டுக் கேட்டுக்களைத்து விட்டான். அன்று அவன் அருணாசலத்தின் வீட்டில் உள்ள பொருட்களை வெளியே தூக்கி வீசிவிட்டு

அருணாசலத்தின் மனைவி பிள்ளைகளை வீட்டை விட்டுத்துரத்தி விட்டான். அருணாசலத்தின் குமர்ப்பிள்ளைகள் மூன்றும் தெருவில் வந்து நின்றனர்".

"அருணாசலத்திற்கு ஊரில் யாரும் கடன் கொடுக்க மாட்டார்கள். அதனால் அவன் பேரின்ப நாதனது வீட்டிற்கு வந்து நிலைமையைச் சொன்னான். அவனது மனைவியும் பிள்ளைகளும் தெருவில் அனாதைகளாக நின்றனர். மழையும் தூறிக் கொண்டிருந்தது. அவர்களைப்பார்க்கப் பேரின்ப நாதனுக்குக் கவலையாக இருந்தது. மகளின் திருமணத்திற்காக வைத்திருந்த இரண்டு இலட்ச ரூபா பணத்தை எடுத்துக் கொண்டு வந்து அருணாசலத்திடம் கொடுத்தார்"

"விடிந்தால் திருமணம். கையில் ஒரு சதமும் இல்லாத பேரின்பநாதன் மாப்பிளையின் வீட்டுக்குச் சென்று நிலைமையை விளக்கிக் கூறித்திருமணம் முடிந்த சில நாட்களுக்குள்த் தான் பணத்தைத் தந்து விடுவதாகக் கூறினார். அதற்கு மாப்பிளையின் தகப்பன் ஒப்புக் கொள்ளவில்லை. காசு தந்தால் தான் திருமணம்" என்று கூறிவிட்டார்".

"மாப்பிளை இளகிய மனம் படைத்தவன். பேரின்ப நாதனின் சான்றாமையைக் கேள்விப்பட்டு மனங்கலங்கினான். அதனால் அவன் பேரின்பநாதனின் வீட்டுக்கு வந்து, "ஐயா,தங்கள் மகளின் திருமணத்தைவிட இன்னொருவரின் பிள்ளைகள் துன்பப்படுவதை

உணர்ந்து அவர்களின் துன்பத்தை நீக்கிய உங்களின் பெரிய மனதைப் பாரட்டுகிறேன். அதனால் என்னிடம் உள்ள இரண்டு இலட்சரூபாவை நான் உங்களுக்குத் தருகிறேன். அதை எனது தந்தையாரிடம் கொடுத்துத் திருமணத்தை உரிய நாளில் நடத்துங்கள்" என்றான்".

"மருமகனே, உங்கள் தாராள மனதையும் பண்பையும் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் உங்களது தந்தைக்குத் தெரியாது பணம் பெற நான் விரும்பவில்லை" என்றார் பேரின்பநாதன்."

"ஐயா, உரிய தினத்தில் திருமணத்தை முடித்தல் வேண்டும். நான் தரும் பணத்தை நீங்கள் கடனாகப் பெற்றதாக நினையுங்கள். கடன் பெறுவோர் தாம் கடன் பெறும் வழிகளையாருக்கும் சொல்லத் தேவையில்லை என்றான்".

" சரி என்று ஒப்புக் கொண்ட பேரின்பநாதன் திருமணத்தை மிகவும் கோலாகலமாக நடத்தி முடித்தார். இரண்டு மாதங்களின் பின் அவர் வெளியூரில் வசிக்கும் தனது நண்பன் நகுலனிடம் இரண்டு இலட்சரூபாவைக் கடனாகப் பெற்றுக் கொண்டுவந்து தனது மருமகனிடம் கொடுத்தார். அதன் பின்புதான் அவரது மனம் சாந்தியடைந்தது" என்றார் நமசி வாயம் சுவாமிகள்.

*அடர்ந்து வறியராய் ஆற்றாத போழ்தும்*
*இடங்கண் டறிவாமென் றெண்ணி யிரா அர்*
*மடங்கொண்ட சாயல் மயிலன்னாய்! சான்றோர்*
*கடங்கொண்டும் செய்வார் கடன்.*

சான்றோர் தமது கடமையென எண்ணுபவற்றை எப்பாடுபட்டாவது செய்து முடிப்பாரே தவிரப்பிற்போடமாட்டார்கள். **“சான்றோரார் கடங் கொண்டும் செய்வார் கடன்”** என்பது பழமொழி

30

“அன்பானவர்களே, முன்னயை காலத்தில் அரசர்கள் மிகவும் தந்திரமான முறையிற் பகைவர்களை வென்றனர். தன்னிலும் பார்க்க பகைவன் வலிமையுடையவனானால், பிற அரசர்களுடன் சேர்ந்து பகைவரைத் தாக்கி அழிப்பர். சிலர் தாம் போரிடாது அயல் நாட்டு அரசர்களை ஏவிவிட்டுப் பகைவர்களைத் தோற்கடிப்பர். இச் செயலானது குரங்கு இளநீர் குடித்த பின் அதனுள் இருக்கும் தேங்காயை எடுத்துத் தின்பதற்காக முதலில் சிறிய குரங்கின் கையை விட்டுத்துளாவி துளாவித் துவாரத்தைப் பெருக்கப்பண்ணிய பின் தனது கையை விட்டுத் தேங்காயை எடுத்து தின்பதைப் போன்றது”

“பருத்திமலை அரசன் வேல்மாறன். அவனுக்கு அயல் நாடான தில்லைநகரின் மன்னன் இளம்பருதி பெருந் தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தான். தில்லை நகரம் மிகவும் பெரியது; வலிமை உடையது. அதன் அருகில் உள்ளது சுவர்ணா நகரம். சுவர்ணா நகரத்தின் அரசன் தில்லைக் கூத்தன். தன்னால் இளம் பருதியை வெல்ல முடியாது என்று உணர்ந்த பருத்தி மலை அரசன், சுவர்ணா நகரத்தில் நடந்த முத்தமிழ்விழாவுக்குத் தனது மனைவியுடனும் மகளுடனும் சென்றான். வேல்மாறனின் மகள் கனிமொழி. பேரழகி, அவளின் அழகில் மயங்கிய தில்லைக் கூத்தன் வேல் மாறனுக்குப் பெரும் வரவேற்பளித்தான். அவனது எண்ணத்தை

உணர்ந்து கொண்ட வேல்மாறன் இளம்பரிதியைப் பற்றி இல்லாத பொல்லாத குற்றச் சாட்டுக்களைச் சுமத்தினான். அத்துடன் கனிமொழியை அவன் பலாத்காரமாக அடைய விரும்புவதாகவும் கூறினான். அதைக்கேட்டுவெகுண்டெழுந்த தில்லைக் கூத்தன் முத்தமிழ் விழா முடிந்தகையோடு தில்லைநகரத்தின் மீது போர் தொடுத்தான். போரில் வெற்றியடைய முடியாதென்பதை அறிந்த இளம் பருதி தலைமறைவானான். அதனால் தில்லைக் கூத்தன் தில்லை நகரத்தைக் கைப்பற்றினான்."

"ஆறு மாதங்களின் பின் தில்லைக்கூத்தன் அயலூர் புலவரான சிங்காரவேலனைத் தூதாக அனுப்பி தான் கனிமொழியைத் திருமணம் செய்ய விரும்புவதாக அறிவித்தான். அதற்கு வேல்மாறன் ஒப்புக்கொண்டான். சில நாட்கள் செல்லத்தில்லைக்கூத்தனுக்கும் கனிமொழிக்கும் வெகு விமர்சையாகத் திருமணம் நடைபெற்றது. தில்லைக்கூத்தன் பருத்திமலைக்கும், தில்லைநகருக்கும், சுவர்ணா நகருக்கும் அரசனானான். தான் பேரரசனாக வேண்டும் என்பதற்காக வேல் மாறன் போட்ட திட்டம் வெற்றியளித்தது".

"ஆகவே அன்பானவர்களே, நீங்கள் ஒருவிடயத்தில் வெற்றி பெற வேண்டுமானால் அதற்கான முயற்சிகளிலீடுபடல் வேண்டும். செய்யமுடியாத செயல்களானால் அவற்றைத் தந்திரமான முறையில் பிறரைக் கொண்டு செய்வித்தல் வேண்டும். என்னால் இயலாது என்று எந்த விடயத்தையும் கைவிட்டு விட்டுச் சோம்பியிருக்கக் கூடாது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***இயற்பகை வெல்குறுவான் ஏமாப்ப முன்னே***
***அயற்பகை தூண்டி விடுத்தோர் - நயத்தால்***
***கறுவழங்கிக் கைக்கெளிதாய்ச் செய்க அதுவே***
***சிறுகுரங்கின் கையாற் றூாழ.***

பகைவரை வெல்லமுடியாதென்று நினைத்தால், பிறரைத் தூண்டிவிட்டு பகைவர்களை வெற்றி கொள்ள வைத்துப் பின்தனது காரியத்தைச் செய்து முடித்தல் வேண்டும். **“சிறுகுரங்கின் கையாற்றுழா’** என்பது பழமொழி.

31 “அன்பானவர்களே, உலகில் வாழும் உயிரினங்கள் யாவும் தன்னுடைய நன்மையை விரும்பியே செயற்படுகின்றன. வெற்றியை உடைய பறவையான கருடனை வாகனமாகக் கொண்டவரும். உலகை மூன்றடியால் அளந்தவருமான திருமாலேயானாலும் தனக்குப் பிரியமானவற்றைத்தான் செய்வார். இது உலக நியதி. ஆனால் சான்றோர்கள் விருப்பு வெறுப்பில்லாது நடுவு நிலையில் நின்று கடமை புரிவர்”.

“ஒருவன் இன்னொருவனுடன் நட்புக் கொண்டால், அவன் எதிர்பாராவிட்டாலும் நண்பன் அவனுக்கு உதவிய வண்ணமேயிருப்பான். உதவிகள் பொன் பொருளால் மட்டும் செய்யப்படுவதில்லை. தூய்மையான அன்பும், விருப்பு வெறுப்புப்பற்ற உதவிகளும் கொடுக்கும் பொருட்களை விட மேலானவை. பொருளைக் கொடுப்பது சுலபம். அன்பையும் உதவியையும் கொடுப்பது தான்

சிரமம். அப்படியான கொடையாளர்களான சான்றோர் உதவி செய்யும் காலத்திலும் கூட உதவி பெறுவோர் மறைத்துச் செய்யுங் காரியங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முற்படமாட்டார்கள்.”

“நாவலடியில் ஞானசம்பந்தன் என்றொரு பெரியவர் வாழ்ந்து வந்தார். அவர் இரப்பவர்களுக்கு இல்லையென்று சொல்லாத வள்ளல். அவரிடம் பலர் நிதியுதவி பெற்றுத் தொழிலைத் தொடங்கி மிகவும் வசதிபடைத்தவர்களாக வாழ்கின்றனர். ஒருநாள் பேரம்பலம் அவரிடம் வந்தான். ஞானசம்பந்தன் அவரை அன்புடன் வரவேற்று ஆசனத்தில் இருந்தினார். பேரம் பலம் அவரை வணங்கிவிட்டுச் சொன்னான் ; “ஐயா, எனக்கு அவசரமாகப் பத்து இலட்சம் ரூபா தேவைப்படுகிறது. ஒரு வாரத்தில் திருப்பித் தந்து விடுவேன்” என்றான்”.

“ஞானசம்பந்தன் மறு பேச்சுப் பேசவில்லை. உள்ளே சென்று பத்து இலட்சம் ரூபாவை எடுத்து வந்து கொடுத்தார். அவன் சென்று விட்டான். அதன் பின் அவரது மகனான ஆரூரன் வந்து சொன்னான்; “அப்பா நாங்கள் வியாபாரஞ் செய்வதற்காக ஈடு வைத்த தோட்ட நிலத்தை நாளை மீள வேண்டும். நாம் பணம் பெற்ற பொன்னம்பலம் நல்லவனல்ல. அவன் எம்முடன் எதற்கும் போட்டிபோடுபவன். அவன் எம்மை அவமானப்படுத்துவதற்காக அந்த நிலத்தை விற்றும் விடுவான்” என்றான்.”

“அதன் பின்பு தான் ஞானசம்பந்தனுக்கு அந்த நினைவு வந்தது. தற்பொழுது அவரிடம் பணம் இருக்கவில்லை.

அந்தக்காணியை மீள இருபது இலட்ச ரூபா தேவை. யோசித்தவாறு சொன்னார் ; "இருந்த பணத்தை பேரம்பலத்துக்குக் கொடுத்துவிட்டேன்" என்று அவர் வார்த்தைகளை முடிக்கு முன் ஆரூரன் சொன்னான்; "அப்பா, விசர்வேலை பார்த்து விட்டீர்கள். நாளை நாம் மீளாவிட்டால் பேரம்பலத்திற்கு அந்தக்காணியைத் தருவதாகப் பொன்னம்பலம் சொல்லியிருக்கிறான். அதற்காகத்தான் அவன் உங்களிடம் வந்து பணம் பெற்றிருக்கிறான். பேரம்பலத்திடம் இல்லாத பணமா உங்களிடம் இருக்கிறது. பணத்தைக் கொடுக்கும் போது ஏன் எதற்கு என்று கேட்கும் பழக்கம் உங்களுக்கு இல்லை. அதனால் எவ்வளவு கஷ்டப்பட்டனீங்கள். இப்போது உங்கள் பணமே உங்களுக்கு உதவாமற் போயிற்று" என்று கவலைப்பட்டான் ஆரூரன்"

"ஞானசம்பந்தன் எதுவும் பேசவில்லை. அப்போது ஞானசம்பந்தனது நண்பனான துரைரசா அங்கே வந்து சொன்னார்; "நான் நேற்றைக்கு உதைப் பற்றிச் சொன்னனான். பொன்னம்பலம் உங்களை அவமானப்படுத்துவதற்காக எதையும் செய்வான் கவனம் , அதோடு பொன்னம்பலமும் பேரின்பநாதனும் ஒன்றாகக் கூடித்திரிகிறார்கள். இது நல்லதற்கல்ல. ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது" என்று சொன்னான். கொப்பர் உண்மையைச் சொன்னாலும் கொடுப்பார். அவரைத்திருத்த முடியாது. போன கிழமை நவராசா மனைவியோடு சண்டை பிடித்துக் கொண்டு வந்து கொப்பரிடம் ஆயிரம் ரூபா கேட்டவன். அவர் ஏன் எதற்கு என்று விசாரியாது கொடுத்து விட்டார். அவன் அன்று சென்றவன், இன்றுவரை வரவில்லை. அதோடு அவனுக்கு இவரைத்தவிர வேறுயாரும் உதவி செய்வதில்லை.

இவரின் குணம் மாறாது. என்ன செய்வது கூடிப் பழகுவதால் நான் அந்தக் காசைத் தருகிறேன் கொண்டு சென்று கொடுத்துக் காணியை மீள்" என்றார் துரைராசா".

ஞானசம்பந்தன் மகிழ்ச்சியோடு சிரித்து விட்டுச் சொன்னார். "நல்லவர்களுக்குத் துன்பம் வரக் கடவுள் விடமாட்டார்" என்று ஆகையால் அன்பானவர்களே, சான்றோராக வாழுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***சுற்றத்தார் நட்டார் எனச்சென்று ஒருவரை***
***அற்றத்தால் தேறார் அறிவுடையார் -கொற்றபுள்***
***ஊர்ந்துலகம் தாவின் அண்ணலே யாயினும்***
***சீர்ந்தது செய்யாதார் இல்.***

பிறரின் இரகசியங்களை அறிந்து கொள்ளச் சான்றோர் விரும்புவதில்லை. "**சீர்ந்தது செய்யாதார் இல்"** என்பது பழமெழி.

**32** "அன்பானவர்களே, ஒரு பொருளாய் மதிக்கத்தகாத வரையும் மதிப்பு மிக்கவராக்குவது செல்வம். எந்த நன்மையும் இல்லாதவராக இருந்தாலும் செல்வம் உள்ளவரை அரசனும் மதிப்பான். எல்லா நன்மையும் உள்ளவரானாலும் அவரிடம் செல்வம் இல்லாவிட்டால் ஈன்றெடுத்த தாயும் மதிக்க மாட்டாள். செல்வம் எதையும் , எந்தநிலையிலும், எவ்விடத்திலும் செயற்படுத்தும் ஆற்றல் உள்ளது. அருள், அன்பு மதிப்பு, மரியாதை யாவற்றையும் ஒருவனுக்கு செல்வம் பெற்றுக் கொடுக்கும். கல்வியறிவில்லாத வனை கல்வியறிவு

உள்ளவனாக்கும். பதவிகளில்லாதவனையும் செல்வம் அரசனுக்கு நிகராக்கும் . அதனால் மனிதர்கள் அறவழியில் செல்வத்தைச் சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்த்த செல்வத்தைத் தர்மமான வழியில் செலவு செய்தல் வேண்டும் . அப்படிச் செலவு செய்வதென்பது அளவில்லாப் பொன்னைச் சுமப்பதோடு அதன் மேல் அரிய பெறுமதி மிக்க நவரத்தினங்களையும் சேர்த்துச் சுமப்பதை ஒக்கும்”

“நாவலூரில் சிவஞானமூர்த்தி என்றொரு தனவந்தர் இருந்தார். அவர் அறவழியில் தேடிய செல்வத்தைத் தருமக் காரியங்களுக்குச் செலவு செய்வார். அதனால் அவ்வூர் மக்கள் அவரைத் தெய்வமாகப் பூசித்தனர். அவர் பெரிதாகப் படித்தவர் அல்லர். சாதியிலும் உயர்ந்தவர் அல்லர். ஒருமுறை பிற நாட்டில் இருந்து சகல வல்லமைகளும் வாய்ந்த சுவாமி ஒருவர் நாவலூருக்கு வந்தார். அவர் இருந்த இடத்திற்கு அவ்வூரவர்களும் அயல் ஊரவர்களும் வந்து தரிசித்தனர். பெரும் பெரும் தனவந்தர்களும், வணிகர்களும் அந்நாட்டு அரசனும் அவர் இருக்குமிடத்திற்கு வந்து அவரைத் தரிசித்தனர். ஆனால் சிவஞான மூர்த்தி செல்லவில்லை. அவர் தனது அன்றாடக் கருமங்களைச் செய்து கொண்டிருந்தார். இரவானதும் சுவாமிகள் தங்குவதற்கு ஓர் இடம் தேவை என்று கேட்டார். அவ்வூர் அரசன் தனது அரண்மனையில் வந்து தங்குமாறு கூறினான். பெரும் பெரும் தனவந்தர்கள் தத்தமது வீட்டில் வந்து தங்குமாறு கேட்டனர். அவ்வூர் வணிகனொருவன் தனது வீட்டில் வந்து தங்குமாறு கேட்டான். சுவாமிகள் எதுவும் பேசாமல் எழுந்து நடத்து சென்றார். அவர்

அங்குள்ள ஒருவனிடம் தன்னைச் சிவஞானமூர்த்தியின் வீட்டிற்கு அழைத்துச் செல்லும் படி கேட்டார்"

"அவர் சிவஞானமுர்த்தியின் வீட்டுக்குச் சென்று அங்கு பல நாட்கள் தங்கியிருந்தார். செல்லும் போது அவர் சொன்னார்; "அறவழியில் செல்வத்தைத் தேட வேண்டும். அதை அறவழியில் செலவு செய்தல் வேண்டும். செல்வமுள்ளவர்கள் பாக்கியவான்கள். தம்முடமுள்ள செல்வத்தின் மூலம் அவர்கள் உலகிலுள்ள எல்லா இன்பங்களையும் அனுபவிக்கலாம். செயற்கரிய செயல்களைச் செய்யலாம். செல்வந்தர்கள் மிகமிகக் கொடுத்து வைத்தவர்கள். அது போல அவர்கள் கொடுத்துதவிப் பிறரையும் தாம் அனு பவிக்கின்ற இன்பத்தை அனுபவிக்கச் செய்தல் வேண்டும். அப்படிச் செய்பவர்கள் பொன்னை மூட்டை மூட்டையாகக் கட்டிச் சுமக்கும் போது கடவுள் பெறுமதிமிக்க நவரத்தினக்கற்களை அம் மூட்டைக்குள் வைத்துக் கட்டிவிடுவார். நான் எனது நாட்டில் இருக்கும் போது சிவஞான மூத்தியைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அதனால் தான் அவரது வீட்டில் தங்க விரும்பினேன்" என்றார்"

"ஊரவர்கள் தாம் ஊரில் நடத்தும் விழாக்களுக் கெல்லாம் சிவஞானமூர்த்தியை அழைத்து மாலைகள் அணிவித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். அயல் ஊர்களிலும் அவர் இல்லாது விழாக்கள் நடை பெறமாட்டாது. சுவாமியார் வந்து தங்கிச் சென்ற பின்பு சிவஞானமூர்த்தியின் கைபட்ட இடமெல்லாம் துலங்கியது.

மேலும் மேலும் செல்வம் குவிந்தது. அதை அவர் அறிவழியில் செலவு செய்து மகிழ்ந்தார்".

"அதனால் அன்பானவர்களே செல்வத்தைத் தேடுங்கள். அது உங்களுக்கு எல்லா இன்பங்களையும் அள்ளித்தரும். அது போல உங்களிடம் உள்ள செல்வத்தை இரப்பவர்களுக்கு அளியுங்கள். அப்படிச் செய்வதன் மூலம் உங்கள் செல்வம் பெருகும். பொன் முடிச்சுக்களைச் சுமக்கும் தருமவான்கள் அதனுடன் சேர்த்து நவரத்தின மணிகளையும் சுமப்பார்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***சிறந்த நுகர்தொழுகும் செல்வம் உடையார்***
***அறஞ்செய்து அருளுடையர் ஆதல் -பிறங்கல்***
***அமையொடு வேய்கலாம் வெற்ப! அதுவே***
***சுமையொடு மேல்வைப்பா மாறு.***

செல்வர்கள் செல்வத்தால் இன்புறுவது போல அச்செல்வத்தால் பொருள் இல்லாதவர்களும் இன்புற்றால் செல்வம் பெருகும். "**சுமையோடு மேல்வைப்பாமாறு**' என்பது பழமொழி.

33

"அன்பானவர்களே, பணத்தை அளவுக்கதிகமாகச் சேமிக்காதீர்கள். மரங்களைப் பாருங்கள், அவை தமது சேமிப்பு முழுவதையும் உயிர்களுக்களித்து விடுகின்றன. செல்வத்தைத் தான தர்மம் செய்வதன் மூலம் மட்டுமே பெருக்கலா மென்று சமய நூல்கள் கூறுகின்றன. தான தர்மம் செய்து எஞ்சிய பணத்தைச் சேமியுங்கள்.

அந்தச் சேமிப்பைக் கவனமாக வைத்துக் கொள்ளுங்கள். பழைய காலத்தில் வாழ்ந்த மக்கள் பொன்னையும் மணியையும் சேமித்துப் பிறருக்குத் தெரியாது பூமியில் புதைத்து வைத்தனர். பின்பு வயது சென்றமையால் புதைத்த இடங்களை மறந்துவிட்டனர். பின்நாளில் அவை புதையல்களாக வெளிப்பட்டன. புதைத்து வைக்கும் செல்வம் அரசர்க்குரியதாகிவிடும்".

"நாகையூரில் ஆறுமுகம் என்றொரு கமக்காரன் வாழ்ந்து வந்தான். விவசாயம் செய்வதன் மூலம் அவன் பெருஞ் செல்வத்தைப் பெற்றான். அச்வெல்வத்தை அவன் ஒழுங்காகச் செலவு செய்வதில்லை. வருமானத்தின் பெரும் பகுதியைப் பட்டணத்தில் உள்ள வங்கியில் வைப்பிலிடுவான். அவனுக்குப் பிள்ளைகள் இல்லை. சகோதரிகளின் பிள்ளைகளை வளர்த்து வந்தான் . அவர்களுக்குச் சத்தான உணவு வகைகளைக் கொடுக்கமாட்டான். கல்விக்காகச் செலவுசெய்ய மாட்டான். அவர்கள் தமது ஏழ்மைகாரணமாக அவனுடன் வாழ்ந்து வந்தனர்".

"திடீரென்று அவனது மனைவி காலமானாள். அதன் பின்பு அவன் தனது சகோதரியின் குடும்பத்தினருடன் சென்று வாழ்ந்து வந்தான். அப்பொழுது அவனுக்கும் இன்னொரு பெண்ணுக்கும் தொடர்பு ஏற்பட்டு ஒர் ஆண்குழந்தை பிறந்தது. இருப்பினும் அவன் அவளுக்கு மனைவியின் அந்தஸ்தைக் கொடுக்கவில்லை. அவள் திருமணப் பதிவைச் செய்யுமாறு பல முறை வற்புறுத்தியும் அவன் செய்யவில்லை."

“காலங்கடந்தது. அவன் வயோதிபனானான். அவனது விவசாய நிலங்களை சகோதரியின் பிள்ளைகளும் ஊரவர்களும் கைப்பற்றி விவசாயம் செய்தனர். திடீரென்று ஆறுமுகம் காலமானான். மறு நாள் சகோதரியின் பிள்ளைகள் ஆறுமுகத்தின் மனைவியையும் மகனையும் வீட்டை விட்டுத் துரத்தினர். ஆறு முகத்தின்மனைவி வங்கிப் புத்தகத்தை எடுத்துப் பார்த்தாள். அதில் பல இலட்சரூபா பணம் இருந்தது. அவள் வங்கிக்குச் சென்று விசாரித்த போது முகாமையாளர் சொன்னார்; “ ஆறு முகத்தின் பெயரில் பல இலட்சரூபா உள்ளது. அதை அவர் இன்னொருவருக்குச் சாட்டுதல் செய்யவில்லை. அத்துடன் நீங்கள் சட்டப்படி திருமணம் செய்திருந்தால் தான் அப்பணம் உங்களுக்கு உரித்தாகும். இல்லாவிட்டால் அது அரசுக்கு உரித்தாகிவிடும்’ என்றார். பாவம் அந்தப் பெண். தற்பொழுது பிச்சையெடுத்து வாழ்கிறாள் ஊரவர்களின் தொல்லைகளை அவளால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை”.

“ஆகையால் அன்பானவர்களே, சாட்டுதலின்றி வங்கியில் இட்ட பணமும், புதைத்து வைத்த பணமும் ஒன்று தான். அது பரம்பரைக்கு உதவாது” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

*கரப்புடையார் வைத்த கடையும் உதவா*
*துரப்புடைய மன்னர்க்கே துப்புரவ தல்லால்*
*நிரப்பிடும்பை மிக்கார்க்கு உதவஒன் றீதல்*
*சுரத்திடைப் பெய்த பெயல்.*

“புதைத்து வைக்கும் பணம் அவனுக்கும், அவனது சந்ததிக்கும் உதவாது அரச உடைமையாகிவிடும். **‘சுரந்திடைப் பெய்த பெயல்’** என்பது பழமொழி. இவன் விரும்பி யாருக்காவது பொருள் கொடுத்தால் அது பாலை நிலத்தில் பெய்த மழையைப் போன்றதாகும்.

**34** “அன்பானவர்களே, எச்செயலையும் உரிய காலத்தில் செய்து முடித்துவிடல் வேண்டும். அப்படிச் செய்யாது விட்டால் பின்நாளில் வருந்த வேண்டிய நிலை உண்டாகும். வரிப் பணத்தை வாங்குபவன் பொருட்களை விற்பனை செய்யு முன் வாங்கிவிட வேண்டும். அவன் விற்ற பின்பு வாங்கலாம் என நினைக்கக் கூடாது. கடலிலே பிரயாணம் செய்பவர்களிடம் ஓடத்தில் ஏறுமுன் பணத்தைப் பெற்று விடல் வேண்டும். கரையை அடைந்தபின் வாங்கலாமென நினைத்தால் பிரயாணம் செய்யும் பயணிகள் பலராகையால் முண்டியடித்து இறங்கிச் செல்லும் போது வாங்கமுடியாது. அதுபோல இளமையிலேயே கல்வியைக் கற்று முடித்து விடல் வேண்டும், வயது சென்ற பின் கற்கக்குடும்பச் சுமைகள் ஒருபோதும் விட மாட்டாது. எண்பற்றிய கல்வியும் எழுத்துப் பற்றிய கல்வியும், மனிதர்களுக்கு இருக்கும் இரண்டு கண்களைப் போன்றனவ. கற்றவனின், முகத்தில் இருப்பவை தான் கண்கள். கல்லாதவனின் முகத்தில் இருப்பவை புண்கள் என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள். அத்துடன் ஒருவன் ஒரு பிறவியில் கற்ற கல்வி அவன் எடுக்கும் பிறவிகள் தோறும் தொடர்ந்து செல்லும் தன்மையுள்ளது. அவன் தேடுகின்ற செல்வம் அவனை விட்டு அவன்

வாளும் போதே சென்றுவிடும், அப்படியிருக்க எப்படி அவனது பிறவிக்குத் துணையாகும்?"

"அருணாசலம் திருமணம் செய்து பல வருடங்கள் சென்ற பின்பும் பிள்ளை பிறக்கவில்லை. அதன்பின் விரதமிருந்து பெற்றமகன் திருவரங்கனை மிகவும் செல்லமாக வளர்த்தார். அவன் பள்ளிப் பருவத்தை அடைந்த போது அவனைப் பாடசாலையில் சேர்த்தார். அவன் தாயை விட்டுப் பிரிந்து பாடசாலையில் இருக்க மறுத்தான். அதனால் சில காலம் தாயும் அவனுடன் பாடசாலையில் கூட இருந்தாள். அப்படியிருந்தும் அவன் கல்விகற்க விரும்பவில்லை. அதனால் அருணாசலம் அவனுக் கெனத்தனியாக ஓர் ஆசிரியரை அமர்த்திக் கல்விகற்பித்தார். அவரிடமும் அவன் கற்க விரும்பவில்லை. காலங் கடந்தது. அவன் ஊரில் உள்ள இளஞர்களுடன் சேர்ந்து திரிந்தான்".

"அவனுக்குத் திருமண வயது வந்தது. அருணாசலம் அவனுக்குப் பெண் தேடினார். தொழில் எதுவும் இல்லாமலும் கற்காமலும் இருந்த திருவரங்கனுக்குப் பெண்கொடுக்க யாரும் விரும்பவில்லை. அதனால் அருணாசலம் ஊரின் மத்தியில் ஒரு வியாபார நிலையம் அமைத்துக் கொடுத்தார். அதிலும் திருவரங்கன் அக்கறை செலுத்தவில்லை. அவன் கல்வி கற்காமையால் அவ்வியாபார நிலையத்தை நடத்தக் கஷ்டப்பட்டான். அப்போது தான் அவனுக்குத் தான் கற்காததால் ஏற்பட்ட பாதிப்பு விளங்கியது. அதன் பின் கற்கவிரும்பி ஓர் ஆசியரிடஞ் சென்றான். குடும்பப்பிரச்சினை,

நண்பர்களின் கூட்டு என்பன அவனைக் கற்கவிடவில்லை. அறிவில்லாததால் அவன் நடத்திய வர்த்தக நிலையம் மூடப்பட்டது. அருணாசலம் இறந்து விட்டார். திருவரங்கன் பிழைக்க வழி தெரியாது தெருக்களில் பிச்சை எடுத்து வாழ்கிறான். ஆகையால் அன்பானவர்களே, உங்கள் பிள்ளைகளுக்கு உரிய வயதில் உரியவற்றைச் செய்யுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்***
***போற்றும் எனவும் புணருமோ? - ஆற்றச்***
***கரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே: இல்லை***
***மரம்போக்கிக் கூலிகொண்டார்.***

உரிய காலத்தில் செய்யாத எக்கருமமும் உரிய பயனைத்தராது ' **கரம் போக்கி உல்கு கொண்டார்இல், மரம் போக்கிக் கூலி கொண்டார் இல்லை** என்பது பழமொழிகள்.

35 "அன்பானவர்களே, கடலின் கரை தாழ்வதில்லை, அம்மி வெள்ளத்தில் மிதப்பதுமில்லை. அது போலச்சான்றோரின் பெருமை, அவர்கள் வறுமையுற்ற காலத்திலும் குறைவதில்லை. கீழோர் எவ்வளவு தான் செல்வந்தராக இருந்தாலும் அவர்களைச் சான்றோர் ஒருபோதும் மதிப்பதில்லை"

"செங்கலடி என்ற நாட்டின் மன்னன் அசுவத்தாமன். அவன் மக்கள் மீது அன்பு கொண்டவன். அவர்களுக்கு எந்தக்குறையும் வராமற் காப்பவன். தனது நாட்டில் வாழும் நற்குடியில் பிறந்து

குற்றங்களிலிருந்து நீங்கிப் பாவச்செயல்களைச் செய்ய நாணப் படும் பெரியவர்களைத் தன்னுயிர் போல மதிப்பவன்  அரிய நூல்களைக் கற்றுக் குற்றமில்லாது வாழும் பெரியவர்களைத் தனக்கு உற்ற துணையாகக்  கொண்டவன். அதனால் அந்நாட்டினர் மட்டுமன்றிப் பிற நாட்டு அறிஞர்களும் அவனது நட்பை விரும்பினர்"

"அந்நாட்டில் சிவபாதவிருதயர் என்றொரு பெரியவர் இருந்தார். அவர் ஒரு விவசாயி. இருப்பினும் அறிவு தரும் நூல் களைக் கற்றுஅதன் படி நடப்பவர். மக்களை நேசிப்பவர், மன்னனை மதிப்பவர். அதேயூரில் பரராசசேகரன் என்றொருவன் இருந்தான் அவன் பெருந்தனவந்தன். அரசனுக்கு நிகராகப் பொன்னும் மணியும் வைத்துக்  காவல் காப்பவன். அதனால் அவன் அரசனையும் மக்களையும் பெரிதாக மதிப்பதில்லை, அதனால் மக்களும் அரசனும் அவனை ஒரு பொருட்டாகக்கருதுவதில்லை"

"அரசன் அந்நாட்டில் ஓர் உயர்கல்விக்கூடத்தைக் கட்டவிரும் பினான். அங்குள்ள மக்களுக்கும் பிறநாட்டவர்களுக்கும் சகல கலைகளையும் கற்பிக்க விரும்பினான்.  அதற்காக அந்நாட்டில் வாழ்கின்ற சான்றோர்கள்  அனைவரையும்  அரச சபைக்கு அழைத்தான். ஆனால் பரராச சேகரத்தை அழைக்கவில்லை. அது பரராச சேகரத்துக்குப் பெரும் அவமானமாக  இருந்தது. சபை  அன்று கூடி நாட்டின் மையப்ப பகுதியில் உயர்கலைக் கூடம் அமைப்பதென்றும், அதன்  அடிக்கல்லை  சிவபாதவிருதயர் நாட்டுவார் என்றும் முடிவு செய்தது. உரிய நாளில் சிவபாதவிருதயர் அந்த

உயர்கல்விக் கூடத்தின் அடிக்கல்லை நாட்டினார். மக்களெல் லோரும் ஒன்று திரண்டு அரசனையும் சிவபாத விருதயரையும் வாழ்த்தினர்."

"அக்கலைக் கூடம் திறந்த பின்பு சிவபாதவிருதயரைத் தலைமை ஆசிரியராகக் கடமை புரியுமாறு அரசன் கேட்டுக் கொண்டான். இதனால் மனமுடைந்த பரராசசேகரன் அயல் நாட்டு மன்னனிடஞ் சென்று அசுவத்தாமனைப் பற்றிக் குறைகளைக் கூறி அந்நாட்டைக்கைப்பற்றுமாறு வலியுறுத்தினான்".

"அதற்கு அந் நாட்டு மன்னன் சொன்னான்; வணிகரே, அசுவத்தாமன் நீதி நெறி தவறாது நாட்டை ஆண்டு வருவதால் குடிமக்கள் மிகவும் சந்தோசமாக வாழ்கிறார்கள். குடிமக்கள் சந்தோசமாக வாழும் ஒரு நாட்டை எந்தப் பகைவனாலும் வெல்ல முடியாது. அத்துடன் சான்றோர்கள், கல்விமான்கள் வறுமைப் பட்டாலும் அவர்களது ஒழுக்கம், கொடைத் தன்மை என்பன மாறாது. அதுபோலக் கீழோர் தனவந்தரானாலென்ன, கற்றாலென்ன அவர்களது குணம் மாறாது. இதை அசுவத்தாமன் நன்கு புரிந்து வைத்துள்ளதால் தான் அவன் சிவபாதவிருதயரை மதித்தான். அவரது குடிப்பிறப்பை மதித்தான் ; அவரது கல்வியை மதித்தான். அவரது குடிப்பிறப்பும் கல்வியும் தான் அவரை உயர்த்தினவே தவிர அரசன் உயர்த்தவில்லை" என்றான்"

"செங்கலடி செழுமை நிறைந்த நாடு. அதைக் கைப்பற்றத் தூண்டினால், அயல் நாட்டரசன் கைப்பற்றாவிட்டாலும் குழப்பம் வந்து

உயர்கல்விக் கூடம் நிறுத்தப்படும் என்று எண்ணிய பரராசசேகரனின் எண்ணம் தகர்ந்தது. அவன் மனக் குழப்பத்துடன் செங்கலடிக்கு வந்தான். அவனது வீட்டில் அவனது வருகைக் காகக் காத்து நின்றபடை வீரர் அவனைக் கைது செய்து அரசன் முன் நிறுத்தினர்".

"அரசன் சொன்னான் ; "வணிகரே நீர் எமது நாட்டிற் கெதிராகச் சதித்திட்டம் தீட்டியதாக எமது ஒற்றர்கள் அறிவித்துள்ளனர். அதனால் உமக்கு மரண தண்டனை விதிக்கலாம். ஆனால் நான் அதை விரும்பவில்லை. இன்று தொடக்கம் நீர் எமது நாட்டை விட்டு வெளியே செல்லக் கூடாது. அத்துடன் வியாபார நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது. சான்றோர்கள் வறுமை காரணமாக ஒதுங்கி வாழ்ந்தாலும் அவர்களின் புகழ் மங்காது. அது போல கீழ் மக்கள் உயர்வடைந்தாலும் அவர்களின் குணம் மாறாது. கடற்கரை தாழ்வதில்லை, அம்மி மிதப்பதில்லை என்பதை அறிந்து கொள்ளும்" என்றான் ஆகையால் அன்பானவர்களே, மேன்மக்களாக வாழப் பழகிக் கொள்ளுங்கள்" என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***உரைசான்ற சான்றோர் ஒடுங்கி உறைய***
***நிரையுளர் அல்லார் நிமிர்ந்து பெருகல்***
***வரைதாழ இலங்கருவி வெற்ப ! அதுவே***
***சுரையாழ அம்மி மிதப்பு.***

கரை தாழ்வதில்லை, அம்மி மிதப்பதில்லை. அது போலச் சான்றோரின் பெருமை குறைவதில்லை, கீழோர் செல்வரானாலும் மதிக்கப்படுவதில்லை. **சுரையாழ அம்மி மிதப்பு**" என்பது பழமொழி.

36 “அன்பானவர்களே, அறிவுள்ளவர்களைத் தான் துணையாகக் கொள்ளுதல் வேண்டும். அறிவில்லாதவனைத் துணையாகக் கொள்பவன் நல்ல இனிமையைத் தரும் யாழின் நரம்புகளை அறுத்து விட்டு யாழை வாசிப்பவனைப் போன்றவனேயாவான். குறிப்பாகத் தலைமைப் பதவியிலுள்ளோர் தாம் ஆலோசனை கேட்பவன் மிகுந்த கல்வியறிவுடையவனாக இருக்கிறானா எனக் அறிந்து கொள்ளல் வேண்டும். அரசன் அமைச்சரைத் தெரிவு செய்யும் போது செயலுக் குரிய கருவி , காலம் செய்யும் முறை ஆகியவற்றை நல்ல முறையில் அறிந்தவனையே தெரிவு செய்தல் வேண்டும். அத்துடன் அஞ்சாமை, உயர் குடிப்பிறப்பு, பாதுகாக்கும் திறமை, கல்வியறிவு, சோர்வற்ற முயற்சி, பகைவரின் துணைவரைப் பிரிதல், பகை கொண்டு சென்றவரைத் சேர்த்தல், பலமுள்ளவர்களின் துணையைச் நாடுதல், செய்யத்தகுந்த செயல்களை அறிந்து கொள்ளுதல், அதற்குரிய வழிமுறைகளைத் துணிவோடு ஆராய்ந்து செயற்படுத்தல் ஆகியவற்றில் திறமையானவனே சிறந்த அமைச்சன் எனத் தெரிந்து கொள்ளல் வேண்டும்.”

“அறத்தை நன்கறிந்தவனாகவும், அறிவு நிறைதந்த செயல்களைச் செய்பவனாகவும், எத்தகைய துன்பங்கள் வந்தாலும் அதைத்தாங்கித் தன் திறமை மூலம் அதை வெல்பவனாகவும் அமைச்சன் இருக்க வேண்டும். இவ்வகையான அறிவில்லாத அமைச்சனால் அரசனின் பரம்பரையே அழித்துவிடும்”

“நாகையூர் மன்னன் சிவதாண்டவன். அவனது இளைய ராணியின் இனத்தவன் மார்க்கண்டேயன். இளையராணி மீது கொண்ட மோகத்தால் சிவதாண்டவன், மார்க் கண்டேயனைத் தனது அமைச்சராக நியமித்தான். சிவதாண்டவனின் தந்தையின் காலத்திலிருந்து சிறப்பாகக் கடமை புரிந்த கடம்பனாருக்கு ஒய்வு கொடுத்துவிட்டே அவன் மார்க்கண்டனை அமைச்சராக நியமித்தான். மார்க்கண்டன் அறிவு இல்லாதவன். அத்துடன் அறிவைத்தரும் நூல்கள் எதையும் கல்லாதவன். உலக நடைமுறைகளை அறியாதவன். அறிவுறுத்துவபரின் அறிவுரைகளை ஏற்று அதைப்பற்றித் தானும் சிந்திக்காது அரசனுக்குத் தவறான வழிவகைகளைச் சொல்வான். அரசனோடு நெருங்கியிருந்து அவனுக்குத் தவறான செயல்களைச் செய்யும்படி மார்க்கண்டன் சொல்லிக் கொண்டிருந்தான்”

“மார்க்கண்டனின் செயல்களில் உள்ள தவறுகளை உணர்ந்த கடம்பனார், சிவதாண்டவனுக்குச் சரியான வழிவகைகளைக் கூறும்போது அவன் சொல்வான் ; “கடம்பனாரே, வயது முதிர்ந்தமையால் தாங்கள் ஒய்வு பெற்றுவிட்டீர்கள். செலவுக்கு மானியம் போதாதென்றால் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். அதைவிடுத்து ஆலோசனைகள் வழங்காதீர்கள். அதற்கு மிகவும் வல்லவனான மார்க்கண்டன் இருக்கிறான்” என்பான்”

“அரசே, செயல்களைச் சிறப்பாகச் செய்து முடிக்கும் திறமையில்லாத அமைச்சன், முதலில் சரியாக எண்ணித்திட்ட

மிட்டாலும் செய்யும் போது குறைபாடுடையதாகவே செய்வான். தாங்கள் மக்களுக்கு வழங்கும் படி கூறிய மானியப் பொருட்கள், உதவு தொகைகள் அவர்களுக்குச் சீராகக் கிடைப்பதில்லை. மார்க்கண்டன் நல்லவன். ஆனால் வல்லவனில்லை. அரச அதிகாரிகள் தம் எண்ணப்படி நடக்கின்றனர்" என்று கூறும் போது சிவதாண்டவன் குறுக்கிட்டுச் சொன்னான்; "கடம்பனாரே, எனக்கு முக்கியமான காரியம் ஒன்றுள்ளது" அரசன் தனது பேச்சைக் கேட்கமாட்டானென்று உணர்ந்த கடம்பனார் பெருமூச்சு விட்டவாறு எழுந்து சென்றார்"

"சில நாட்கள் சென்றன. மார்க்கண்டனின் நடவடிக்கைகளால் கோபங் கொண்ட அயல் நாட்டரசனான விமலசூரியன் தனது மனச் சுமையைச் சிவதாண்டவனுக்குத் தூதுவர்கள் மூலம் தெரிவித்தான். அரசசபைக்கு வந்த தூதனை மார்க்கண்டனின் அறிவில்லாத சொற்கள் கோபப்பட வைத்தன. சிவத்தாண்டவனும் விமல சூரியனும் நண்பர்கள். அதனால் தனக்குண்டான அவமானத்தை விமலசூரியன் தெரிவித்திருந்தான். அதை உணராத மார்க்கண்டன் விமலசூரியன் மீது தேவையில்லாது பழியைச் சுமத்தினான். அதனால் கோபம் கொண்ட சிவதாண்டவன் அயல்நாட்டின் மீது போர்தொடுத்துத் தோல்வியடைந்தான்".

"அதனால் அன்பானவர்களே, திறமையுள்ளவர்களிடமே ஆலோசனை கேளுங்கள். விமலசூரியனும், சிவதாண்டவனும் நண்பர்கள். அமைச்சன் நண்பன் வேறுபட்டால் அவர்களை

ஒற்றுமைப்படுத்த வேண்டுமே தவிரப் பகைவர்களாகக் கூடாது. அதற்கு கூர்மையான அறிவு தேவை” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***கற்றார் பலரைத்தன் கண்ணாக இல்லாதான்***
***உற்றிடர்ப் பட்ட பொழுதின்கண் தேற்றம்***
***மரையா துணைபயிரும் மாமலை நாட!***
***சுரையாழ் நரம்பறுத் தற்று.***

அறிவில்லாதவனது ஆலோசனைகள், நரம்பறுத்தயாழை மீட்டுவதைப் போன்றதாகும். **சுரையாழ் நரம்பறுத்தற்று”** என்பது பழமொழி.

37 “அன்பானவர்களே, தீமை செய்து விட்டுப் பின் நன்மை செய்தால் யாரும் மதிக்கமாட்டார்கள். அதை அவர்கள் தீமையின் பரிகாரமாகவே நினைப்பர். அவர் செய்யும் நன்மையை விடத் தீமையே பெரிதென்றும் நினைப்பர். தீமை செய்துவிட்டு நன்மை செய்வதை விட்டுத் தீமை செய்யாது நன்மைகள் செய்யப் பழகுதல் வேண்டும். நன்மை செய்து விட்டுத் தீமை செய்தால், அது சில வேளை கவனத்தில் எடுக்கப்படாது விடுபட்டுப் போய் விடுவதும் உண்டு”

“பாலைநகர் மன்னன் துட்டத்தூய்மன். பெயரைப் போலத்துட்ட குணங்கள் உள்ளவன். பாலைநகர்வளங் கொளிக்கும் நாடு. மாதம் மும்மாரி பொழியும், ஆறுகள் பெருகி ஓடும். அதனால் அந்த நாடு செல்வச் செழிப்புடன் இருந்தது. மக்கள் பெருஞ் செல்வந்தர்களாக வாழ்ந்தனர். மன்னன் கொடுங்கோலன். மக்கள் செல்வந்தர்களாக

வாழ்ந்தால் தன்னை மதிக்க மாட்டார்கள் என்று நினைத்து வரிப் பணத்தை அளவுக்கதிகமாக அறவிடுவான்”.

“ஒரு தந்தை தனது பிள்ளைக்குத் திருமணம் செய்து கொடுப்பதானால் பெருத் தொகைப் பணத்தை வரியாகக் கட்டுதல் வேண்டும். ஒரு புலவர் அரச சபையில் தனது காவியத்தை அரங்கேற்றவேண்டுமானால் பெருந் தொகைப் பணத்தை கொடுக்க வேண்டும். பிள்ளை பிறந்தால் வரி, இறந்தால் வரி என்று எல்லாவற்றிற்கும் வரி வசூலிப்பான். அதனால் மக்கள் அவனை மதிப்பதேயில்லை”

“மன்னனுக்குக் குழந்தை பிறந்தது. அதை அவன் பெரும் விழாவாகக் கொண்டாட விரும்பினான். அன்றைய தினம் விழாவில் கலந்து கொள்வோருக்கு மதிய உணவும், பரிசுப் பொருட்களும் வழங்கப்படுமென்று அறிவித்தான். புலவர்கள் காவியம் படைத்தால் பொற்காசுகள் வழங்கப்படும் என்றும் அறிவித்தான்”

“விழா பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்டது. அயல் நாட்டு மன்னர் பலர் விழாவுக்கு வந்திருந்தனர். ஆனால் அந்தநாட்டுப் பிரமுகர்கள் எவரும் வரவில்லை. மக்களும் பெருந் திரளாகக் கலந்து கொள்ளவில்லை. அது துட்டத்தூய்மனுகுப் பெரும் அவமானத்தைக் கொடுத்தது. அதனால் முதலமைச்சரை அழைத்து மக்கள் வராமைக்குரிய காரணம் என்ன வென்று கேட்டான்”.

“மன்னா, தாங்கள் புதிது புதிதாக வரிகளை அறிமுகப்படுத்தும் போது அப்படிச் செய்யவேண்டாமென்று கூறினேன். நீங்கள் கேட்கவில்லை. மன்னா, புகழையும், அறத்தையும் தராதசெயல்கள் எதையும் செய்யக் கூடாது. புகழடைய வேண்டுமென்று விரும்பும் அரசர், தம் புகழ்கெட்டுப் போவதற்கானா செயல்கள் எதையும் செய்யக் கூடாது. மக்களிடம் இருந்து பெறும் வரியிலிருந்து தான் மக்களுக்கு உதவி செய்கிறீர்கள். இது மக்களுக்குத் தெரியும், அரசர் வரியைக் குறைவாக வசூலித்து மக்களுக்குக் கூடுதலாகக் கொடுக்காவிட்டால் மக்கள் மகிழமாட்டார்கள். அத்துடன் மன்னன் தரும் பொருட்களுக்கும் வரி வசூலிப்பான் என்றும் நினைப்பார்கள். தாமே கொடுத்துப் பின் தாமே பெறும் செல்வத்தைவிட கொடுத்ததை வாங்காமல் விடுவது நன்மை பயக்கும் என்று மக்கள் நினைத்து விட்டனர். அதனால் தான் மக்கள் விழாவிற்கு வந்து தாங்கள் கொடுக்கவிருந்த பொருட்களைப் பெற விரும்பவில்லை. தம்மை அரசன் பாதுகாப்பான் என்று மக்கள் நினைத்து வரியைச் செலுத்த வேண்டும். அது தான் நீதி. அதைவிட்டுவிட்டு மக்களிடம் அதிகமாகப் பெற்றுக் கொண்டு பின்னர் அவர்களுக்கு உதவுதல் என்பது , மயிலினது உச்சிக் கொண்டயை அறுத்து அதற்கு அதை உணவாகக் கொடுப்பதைப் போன்றது. ஆதலால் மக்களிடம் அதிக வரியை அறவிடாதீர்கள்” என்றார் முதலமைச்சர்”.

“ஆகையால் அன்பானவர்களே, நாம் ஒருவரிடம் உதவி பெற்றால், பெற்ற உதவியை விடக் கூடுதலான உதவியைச் செய்தால்

தான் உதவி செய்தவர் மகிழ்வார், புகழ்வார்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***அடைய அடைந்தாரை அல்லவை செய்து***
***கொடைவேந்தன் கோலகொடிய னாகிக்குடிகள்மேல்***
***கூட்டிறப்பக் கொண்டு தலையளிப்பின் அஃதன்றோ***
***சூட்டறுத்து வாயில் இடல்.***

துன்புறுத்தி அதிகவரி வாங்கிய பின் என்ன நன்மை செய்தாலும் மக்கள் அரசனைப் போற்ற மாட்டார்கள். “சூ**ட்டறுத்து வாயிலிடல்**’ என்பது பழமொழி

38 “அன்பானவர்களே, பெரியவர்களின் அன்பைப் பெற்றால் அவர்கள் அன்புகொண்டவன் மீது நம்பிக்கை வைத்துப் பொறுப்பான செயல்களைச் செய்யுமாறு ஏவுவார்கள். பெரியவர்கள் ஏவிய செயல்களை அவர்களது மனம் திருப்திப்படுமாறு செய்து முடித்தால் , செய்பவனைப் பாராட்டுவதோடு பரிசளித்துக் கௌரவிப்பர். அதனால் செய்பவனது எதிர்கால வாழ்வு சிறப்படையும். தம்மைவிட எல்லா வகையிலும் சிறந்த பெரியவரைத் தமக்குச் சுற்றமாக்கிக் கொள்பவனின் வாழ்வில் எந்தக் குறையும் ஒருபொழுதும் உண்டாகாது”

“நாவலூரிலே அம்பலவாணர் என்றொரு தவசி இருந்தார். அவரின் ஆச்சிரமத்தில் பல சீடர்கள் இருந்தனர். அவர்களுள் உதயணன் என்பவன் தவசிக்குப் பிடித்தசீடன். அவன் விடியற்

காலையில் எழுந்து தனது காலைக் கடன்களை முடித்து விட்டுத் தவசியின் வேலைகள் அனைத்தையும் செய்து முடிப்பான். தவசி பூசை முடித்து எழுந்ததும் அவருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளை யெல்லாம் செய்வான். ஆச்சிரமத்தில் பூஜைக்குத் தேவையான பூமரங்களையும், கரும்பு, தென்னை, வாழை போன்ற மரங்களையும் நட்டுப் பராமரித்து வந்தான்".

"ஆச்சிரமத்தில் ஏராளமான பசுக்கள் நின்றன. அவற்றைக் குளிப்பாட்டி தீன்களிட்டு நல்ல முறையில் வளர்த்து வந்தான். குருஇல்லாத நேரத்தில் பூசை செய்வான். சீடர்களுக்குக் கற்பிப்பான். ஒரு முறை அரச சபைக்குச் சென்று சிவகருமங்களைச் செய்து முடிக்கும் படி குரு கட்டளையிட்டார். அவன் அங்கு சென்று குரு சொன்ன விடயங்கள் அனைத்தையும் நல்ல முறையில் செய்து முடித்தான். அதனால் அரசன் மனம் மகிழ்ந்தான். அதன் பின் ஒரு நாள் அரசன் தவசியைக் சந்திக்க ஆச்சிரமத்திற்கு வந்த போது தவசி உதயணனை அழைத்து அரசனுடனும் தன்னுடனும் சமமாக இருத்தி உணவு வகைகளைக் கொடுத்தார். அரசன் உண்டு முடிந்ததும் ஒரு நவரத்தின மாலையை உதயணனுக்குப் பரிசளித்தார்"

"அரசனுக்குப் பிள்ளைகள் இல்லை. அவனுக்கு வயது சென்றமையால் அவன் தவசிக்குச் சொன்னான்; "குருவே, எனக்கு வாரிசுகள் இல்லை. நான் துறவு வாழ்க்கையை மேற் கொள்ள விரும்புகிறேன். நாட்டிற்குப் பொருத்தமான அரசனைத் தாங்கள் தான் தெரிவு செய்தல் வேண்டும்" என்றான்".

“உடனே தவசி சற்றும் யோசிக்காது; உதயணனை அரனாக்குங்கள” என்றார்”

“ நானும் அதைத் தான் நினைத்திருந்தேன். எனினும் தாங்கள் தங்கள் வாயால் சொல்ல வேண்டும் மென நினைத்தேன். மிகவும் நன்றி” என்றான் அரசன்”

“அடுத்த சில தினங்களில் உதயணன் அரசனாக முடி சூட்டப்பெற்றான். அதனால் அன்பானவர்களே, பெரியவர்கள் ஏவியதைச் செய்வதால் பயனில்லை என்று கருதாதீர்கள். பெரியவர்களின் மனதைக் கவர்ந்தால் அதன் மூலம் பல சிறப்புக்களைப் பெறலாம்” என்றார் நமசிவாயம் சுவாமிகள்.

***வெற்றிவேல் வேந்தன் வியங்கொண்டால் யாமொன்றும்***
***பெற்றிலே மென்பது பேதைமையே -மற்றதனை***
***எவ்வ மிலராகிச் செய் அதுவன்றோ***
***செய்கொன்றான் உண்கென்னு மாறு.***

“பெரியவர்கள், செயலுக்கு ஏவியவன் அச்செயலை நல்ல முறையில் செய்து முடித்தால் பாராட்டிப்பரிசளிப்பர். ‘ **செய்கென்றான் உண் கென்னுமாறு**” என்பது பழமொழி

39 “அன்பானவர்களே, ஒரு செயலைச் செய்பவனின் கருத்தே செயலில் நிறைந்திருக்கும். ஒரு சித்திரத்தை வரைபவனின் கருத்துத்தான் சித்திரத்தில் நிறைந்திருக்கும். அது போல அதிகாரமுள்ளவனோடு கூட இருப்பவனின் செயல்கள் அதிகார முள்ளவனின் கருத்தையே பிரதிபலிக்கும். அதனால் அச்செயலால் வரும் பழிபாவங்கள் யாவும் அதிகாரமுள்ளவனையே சாரும்”

“துறையூர் மன்னன் சிவதொண்டன். அவன் நீதிநெறியில் லாது மக்களை வருத்துபவன், வரி வசூலிப்பவன். அவனது அரச சபையில் உள்ளோர் அவனைப் புகழ்ந்து பாராட்டிப் பெறுமதியான பொருட்களைப் பெற்று வாழ்ந்து வந்தனர். அரச சபைப்புலவர் வேந்தனார். அவர் வீரமற்ற அவனை மாவீரன் என்று வர்ணித்துப் பாடல்களைப் பாடுவார். அதனால் மனம் மகிழும் சிவதொண்டன் பொன்னையும் மணியையும் அள்ளிக்கொடுப்பான். அதனால் தனவந்தரான வேந்தருக்குத் திமிர் அதிகரித்தது. மக்களுடன் எப்பொழுதும் திமிராகவே நடந்து கொள்வார். யாரவது அவரை எதிர்த்துப் பேசினால் கண்டிப்பார். கண்டிப்புக்கு அடங்காவிட்டால் தண்டிப்பார். தண்டிக்கும் போது பிரச்சினைகள் வந்தால் அதைப் பெரிதாக்கி அரசுக்கெதிராகச் சதி செய்கிறார்கள். என்று கூறித்தண்டணை பெற்றுக் கொடுப்பார். அதனால் எப்பொழுதும் அரசனுக்குக் கெட்ட பெயரே உண்டாகும். மக்கள் அரசனைப் பற்றிக் குறையாகக் கதைக்க மாட்டார்கள்”

“ பொன்னம்பலவாணர் என்றொருவர் துறையூரில் இருந்தார். அவர்பெரும் புலவர். அவர் அயல் நாடான புலியூருக்குச் சென்று

அரசனைப் புகழ்ந்து பாடிவெகுமதி பெறுபவர். அவரை வேந்தனாருக்குப் பிடிக்காது. அரசனிடம் அவரைப் பற்றிச் சொல்லவும் பயம். அதனால் அவர் பொன்னம்பலவாணரின் வீட்டைத் தீயவர்களுக்குப் பொருள் கொடுத்துத் தீக்கிரையாக்கினார். அவ்வீட்டில் பொன்னம்பல வாணருடன் வாழ்ந்து வந்த பொன்னம்பலவாணரின் பேரனார் அருளம்பலவாணர் தீக்காயங்களுக்குள்ளானார்"

"பொன்னம்பலவாணர் புலியூருக்குச் சென்று நடந்த சம்பவங்களைக்கூறி, சிவதொண்டன் வேந்தனாருக்காகப் பரிந்து பேசுவானே தவிர நீதியாக நடக்கமாட்டான்.அதனால் வேந்தனாரைத் தண்டிக்குமாறு" கேட்டுக் கொண்'டார்"

"அரசன் சொன்னான்; "வாணரே, வேந்தனாரைத் தண்டிப்பது அரச நீதியாகாது. அரசன் நீதியாக நாட்டை ஆளவேண்டும் அதை விடுத்துத் தன்னோடு இருப்பவர்களுக்கு ஆதரவாக நடந்தால், அவர்கள் குற்றங்களைப் பயமில்லாமற் செய்வர். அந்தத் தன்மையை வளர்க்கும் அரசன் தான் குற்றவாளி" என்று கூறித்துறையூர் மீது படையெடுத்து அந்நாட்டைக் கைப்பற்றினான்"

"ஆகவே அன்பானவர்களே, பிள்ளைகள் தீயசெயல்களைச் செய்தால், அதனால் வரும் பழிபாவங்கள் பெற்றோர்களையே சாரும். அதனால் பிள்ளைகளை ஒழுங்கமாக வளருங்கள்" என்றார் நமசிவாயம் சுவமிகள்.

***செயிரறு செங்கோல் சினவேந்தன் தீமை***
***பயிரறு பக்கத்தார் கொள்வார் - துகிர்புரையும்***
***செவ்வாய் முறுவல்நற் சின்மொழியாய் செய்தானை***
***ஒவ்வாத பாவையோ இல் .***

செய்பவன் தன் கருத்திற்கு ஒத்திராத சித்திரம் எழுதுவதில்லை. அதிகாரமுள்ளவனைச் சூழ்ந்திருப்பவர்கள், அதிகாரமுள்ளவரின் தொடர்பின்றிக் காரிய மாற்றார். அதனால் வரும் பழி அதிகாரமுள்ளவரையே சாரும், **செய்தானை ஒவ்வாத பாவையோ இல்** என்பது பழமொழி.

40 "அன்பானவர்களே, கயவர்கள் பொருளுக்காக எதையும் செய்வார்கள். கயவர்கள் தம் கன்னத்தைக் குத்தி உடைக்கின்ற முரடர்களுக்குத்தான் பயப்படுவார்களே தவிர மற்றவர்களை ஒரு பொருட்டாக எணணமாட்டார்கள். அத்துடன் கயவர்களிடம் பணத்தைக் கொடுத்தால் அவர்கள் கொடுத்தவன் சொல்வதை அப்படியே செய்வார்கள். அதற்காக நல்லவர்கள் வருந்தத் தேவையில்லை. ஏனென்றால் மக்களுக்குக் கயவர்களைப் பற்றித் தெரியும். எவருக்கும் செய்யாத செயலுக்கான பழி வந்தடைய மாட்டாது".

"நாவலூரில் ஆறுமுகநாதன் என்றொரு பெரியார் வாழ்ந்தார். மிகுந்த ஒழுக்கசீலரான அவரது மகள் கலைவாணிக்கு அயலூரில் திருமணம் பேசினார்கள். ஆறுமுகநாதனின். மனைவியின் சகோதரன் அருமைத்துரை. அவன் செய்யக்கூடாத அத்தனை தீயசெயல்களையும்

மனங்கூசாது செய்பவன். அதனால் அவனது மகள் மாலதிக்கு நாற்பது வயதாகியும் திருமணம் நடை பெறவில்லை. அருமைத்துரையைத் திருத்தமுடியாததால் ஆறு முகநாதன் அவனது தொடர்புகள் அனைத்தையும் துண்டித்திருத்தார். ஊரில் பெரிய மனிதனான அவரை அவமானப் படுத்த எண்ணிய அருமைத்துரை, அவரைப் பற்றி மிகவும் கேவலமாகத் தூசிப்பான். அவற்றையெல்லாம் ஆறுமுகநாதன் கவனத்தில் எடுப்பதில்லை"

"கலைவாணிக்குத் திருமணம் முற்றாகியதால் பொறாமை கொண்ட அருமத்துரை ஊரில் வாழும் தீயவனான சுந்தரலிங் கத்திற்குப் பணமும் கள்ளும் வாங்கிக் கொடுத்து, கலைவாணியின் நடத்தையைப் பற்றிக் கேவலமாகக்கதைக்குமாறு கேட்டுக் கொண்டான். தினமும் குடிப்பதற்குக்கள்ளுக் கிடைப்பதால் மகிழ்ச்சியடைந்த சுந்தரலிங்கம், கலைவாணியைப் பற்றியும் ஆறு முகநாதனின் குடும்பத்தைப் பற்றியும் மிகவும் கேவலமாகத் தெருக்களில் கதைத்து கொண்டு திரிந்தான். இதனால் கவலைப் பட்ட ஆறுமுகநாதன் கலைவாணியின் மாப்பிள்ளையின் தந்தைக்குச் சொன்னார்; "ஐயா, என்னைப் பற்றிக் கேவலமமாகக் கதைத்தால் பரவாயில்லை. எனது மகளைப் பற்றிக் கேவலமாகக் கதைப்பதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை" என்று அழுதார்"

"ஐயா, உங்களது குடும்பப் பெருமை காசுக்காக ஏவியவர்கள் கூறியபடி கதைக்கும் கயவர்களால் கெட்டுப் போகாது. உங்களது பெருமைகளை அறிந்தபின்பே நான் உங்கள் வீடு தேடிவந்து

பெண்கேட்டேன். உங்களது  இனத்தவனான அருமைத்துரையைப் பற்றி எனக்குத்தெரியும். கயவர்கள்  கதைப்பதால் எதுவும் நடக்காது, பழிபாவங்கள் இருந்தாலும் பழியும் வராது”

“ஒரு பெண்ணைப் பற்றிக் கதைப்பது பாவம். ஆனால் அதை நம்பினால் அப்பெண்ணின் வாழ்வு நாசமாகிவிடும்” அழுதார் ஆறுமுகநாதன்”

“ஐயா, அழாதீர்கள். சுந்தரலிங்கத்தை எனக்குத் தெரியும் நாளைக்குப் பாருங்கள்” என்று கூறிவிட்டு மாப்பிளையின் தகப்பன் சென்றுவிட்டார்”

“மறுநாள் சுந்தரலிங்கம் ஆறுமுகநாதன் நல்ல மனிதன் அருமைத்துரை எனக்கு கள்ளை வாங்கித் தந்தமையால் தான் நான் வெறியில் கேவலமாகக் கதைத்து விட்டேன்” என்று சொல்லிக் கொண்டு திரிந்தான். மாப்பிளையின் தந்தை சுந்தரலிங்கத்திற்கு  அருமைத்துரை கொடுத்த பணத்திலும் பார்க்கக்  கூடுதலாகப்  பணம் கொடுத்தமையால் அவன் அப்படிச் சொல்லிக் கொண்டு திரிந்தான்”.

“அதனால்  அன்பானவர்களே, பகைவர் கொடுத்ததை வாங்கி உண்டால்,  உண்டவன் அவர்கள் ஏவியவற்றைச் செய்யாவிட்டால் தண்டிப்பார்கள் என்ற பயத்தாலும், மறுநாளும் உண்ணக் கிடைக்கும் என்ற நம்பிக்கையாலும் பொருளற்ற அற்பர்கள், ஒழுக்கமாக வாழ்பவர்களைப் பற்றிப் பொய்யானவற்றைக் கூறினால், நல்லவர்கள்

நம்பமாட்டார்கள். அத்துடன் செய்யப்படாத செயலுக்கான பழியும் அவர்களை வந்து அடையாது" என்றார் நமசிவாயம் சுவாமிகள்

***கையார உண்டமையால் காய்வார் பொருட்டாகப்***
***பொய்யாகத் தம்மைப் பொருளல்லார் கூறுபவேல்***
***மையார உண்ட கண் மாணிழாய்! என்பரிவ***
***செய்யாத எய்தா எனில்?***

பகைவர்களின் தூண்டுதலால் கயவர்கள் பேசித்திரிவதை ஒரு பொருட்டாக நல்லவர்கள் கருதமாட்டார்கள். அத்துடன் அவர்கள் கூறுபவை பழியாகாது **"செய்யாத எய்தாவெனில்"** என்பது பழமொழி.